www.padippakam.com

# புதிய ஜனநாயகம்

மார்க்சிய - லெனினிய அரசியல் ஏடு
1-15 ஜூன் '91 6/14 விலை ரூ.2



மூன்றாவது அணியின் (பாட்டாளி மக்கள் கட்சி) ஓட்டாண்டித்தனம்

## பாசிச ராஜீவ் கொலை பழிக்குப் பழிதான்!



படிப்பகம்

www.padippakam.com

## கூட்டுறவு வேளாண்மை பணி சங்கம்:

# அதிகாரிகளின் கூட்டுக் கொள்ளை



ஊழலின் ஊற்றுக்கண் அதிகார வர்க்கம். அப்பாவி மக்களுக்கு கிடைக்கும் அரசின் சிறு சலுகைகள் கூட கிடைக்க முடியாத வண்ணம், கொள்ளையடிக்கிறது இக்கும்பல்: நாளுக்கு நாள் இதை ஒளிவு மறைவின்றி அப்பட்டமாகச் செய்து வருகிறது. தஞ்சை கூட்டுறவு வேளாண்மைப் பணிச்சங்கத்தின் அதிகாரிகள் இதற்கு உதாரணமாக திகழ்கிறார்கள்.

தஞ்சை கூட்டுறவு வேளாண்மைப் பணிச்சஙகம். மாவட்டத்தில் 32 மையங்களை கொண்டு இயங்கி வருகிறது. மாவட்டத்திலுள்ள கால்நடைப் பண்ணைகள், ஊராட்சி ஒன்றியங்கள், குடிநீர் - வடிகால் வாரியம், தமிழ் பல்கலைக் கழகம் முதலான பல துறைகளில் இக்கூட்டுறவு வேளாண்மை பணிச்சங்கம் செயல்பட்டு வருகிறது. அத்துறைகளில் உள்ள மின்கருவிகள், வேளாண்மை கருவிகள், ஆழ்குழாய் கிணறுகள் போன்றவற்றை பராமரிப்பது, பழுதுபார்ப்பது, பதுப்பிப்பது ஆகிய பணிகளை மேற்கொள்கிறது. இப்பணிக்கு வேண்டிய கருவிகள், உதிரி பாகங்கள், துணைப் பொருட்கள் முதலானவற்றை வாங்குவதில் பல்வேறு முறைகளில் அதிகாரிகளால் கொள்ளையடிக்கப்படுகிறது. மானியத்தில் விற்கப்படும் பொருள்கள் மூலமும் ஏராளமாக சுருட்டுகிறார்கள்.

மேலாளர் கே.ஏ.சூரிய நாராயணன், உதவி மேலாளர் எம்.தண்டபாணி (இவருடைய D.A.E சான்றிதழ் பொய்யானது), பண்டக காப்பாளர் டி.சரவணன் (பொறுப்பு போர்மேன்), கண்காணிப்பாளர் பி.சுந்தரமூர்த்தி ஆகிய நால்வருமே கொள்ளையடிக்கும் பணத்தை தகுதிக்கேற்ப பங்கீட்டுக் கொள்கிறார்கள்.

1989-90 ஆம் ஆண்டு அம்மாப்பேட்டை பஞ்சாயத்து யூனியன், 'இந்திய மார்க் 11 பம்ப்'பை 30 இடங்களில் போடச் சொல்லி ஆர்டர் தந்து. இதற்கான அப்பஞ்சாயத்து யூனியன் தந்த 50% முன்பணத்தில் சுமார் 2 லட்சம் ரூபாயை சுருட்டிக் கொண்டார்கள் அதிகாரிகள். இது சம்பந்தமான கணக்கு வழக்கு புத்தகங்களையே (பதிவட்டைகளை) மறைத்துவிட்டு தணிக்கை செய்ய வரும் மேலதிகாரிகளை சரிக்கட்டிவிட்டார்கள். இவ்வருட தணிக்கையில் பதிவட்டை எண்.314, 260 ஆகியவை காண்பிக்கப்படவே இல்லை. மேலும் பதிவட்டையில் தஞ்சை மருத்துவக் கல்லூரி சாலையில் உள்ள காசி எலெக்டிரிக்கல்ஸ் என்ற கடையில் பொருட்கள் வாங்கியதாக குறிப்பிடப்பட்டுள்ளது. உண்மையில் இப்படி ஒரு கடையே இல்லை

வாங்கும் பொருட்களின் விலையும், செய்யப்படும் வேலைக்கான கூலியும் வேறு இடங்களில் குறைவாக இருந்தாலும் கமிஷன் கிடைப்பதால் தரமில்லாத பொருட்களைக் கூட ஒரே கடையில் வாங்குகிறார்கள், வேலைகள் தருகிறார்கள். உதவி மேலாளர் தண்டபாணியின் பினாமி நிறுவனமான முகுந்தன் என்ஜினியரிங் ஒர்க்ஸ் மூலம் தான் 'போர்வெல்' சம்பந்தமான வேலைகளனைத்தும் நடக்கின்றன

பண்டக காப்பாளர் டி.சரவணன், கூட்டுறவில் 'டிப்ளமோ' பட்டம் பெறாமலேயே முறைகேடாக பதவிக்கு வந்தவர். மேலும் இவருக்கு முறைகேடாக 'போர்மேன்' பொறுப்பும் தரப்பட்டு சம்பள உயர்வும் அளிக்கப்பட்டுள்ளது. இவரது தம்பி திருஞான சம்பந்தம், உரிய கல்வித் தகுதி இல்லாமலும் வேலை வாய்ப்பு அலுவலகம் மூலம் வராமல் முறைகேடாகவும் கடைநிலை ஊழியராக பணிபுரிகிறார். தற்போது விற்பனையாளர் என பதவி உயர்வும் 'அரியர்சும்' கொடுத்திருக்கிறார்கள்.

கூட்டுறவு நிறுவனத்திற்குச் சொந்தமான மோட்டார் சைக்கிளை மேலாளர் மட்டுமே பயன்படுத்தவேண்டும். ஆனால் சட்டவிரோதமாக பண்டக காப்பாளர் சரவணனும், விற்பனையாளர் திருஞான சம்பந்தமும் பயன்படுத்துவதோடு மோட்டார் சைக்கிள் மூலம் ஜி.ஐ பைப்புகள், வெல்டிங்ராடுகளையும் கடத்துகின்றனர். பெட்ரோல் திருடி தமது சொந்த வாகனத்துக்குப் போட்டுக் கொள்கின்றனர். இதற்கு வசதியாக அலுவலகத்திற்கு வரும் - வெளியே செல்லும் பொருட்களை எழுதி பராமரித்து வந்த பதிவேடுகளை மறைத்து விட்டார்கள். புதிய பதிவேடுகள் போட்டு 'திருத்தி' எழுதி வருகிறார்கள்.

மேற்கண்ட ஊழல்கள் சம்பந்தமாக தட்டிக்கேட்ட பண்டக எழுத்தர் எம்.மதியழகனை வேறு காரணங்களைக் காட்டி சென்ற வருடம் வேலை நீக்கம் செய்தனர்.

இதே போல தற்போது சரவணன் தம்பிக்கு முறைகேடாக பணி கொடுக்கப்பட்டதைத் தட்டிக் கேட்ட காசாளர் முதல் எழுத்தர் வரை எல்லோரையும் வாரம் ஒருநாள் காவலர் பணி பார்க்க வேண்டும் என ஆணை (தண்டனை) பிறப்பித்து கேவலமாக நடத்தி வருகிறது, நிர்வாகம்.

பத்து ஆண்டுகள் ஆகியும் பணி நிரந்தரம் செய்யப்படாமல் பணிபுரியும் பிற ஊழியர்கள் மற்றும் நிரந்தரப் பணி ஊழியர்கள் உட்பட அனைவரும் எதிர்த்து நின்று பேச அஞ்சி, அதே சமயம் அநீதிகளைக் கண்டு பொறுக்க முடியாமல் கலெக்டர் முதல் கவர்னர் வரை புகார் மனுக்கள் பல அனுப்பினர். இதுவரை எவ்வித பலனுமில்லை.

தொழிலாளர்களின் ஒற்றுமை சாதிக்காதது எதுவுமே இல்லை; சரித்திரமே மண்டியிடுகிறது. இவ்வுண்மையை தஞ்சை கூட்டுறவ பண்டகசாலை ஊழியர்கள் புரிந்து கொள்ள வேண்டும். அச்சத்தை தவிர்த்து அமைப்பாக அநீதிகளுக்கு எதிராக கரங்களை உயர்த்த முன்வர வேண்டும். பிரச்சனைகளை தீர்க்க ஒரே வழி இதுவே.

— தகவல்: ம.க.இ.க., தஞ்சை.

# 'மந்திரமா தந்திரமா' நிகழ்ச்சிக்குத் தடை!

ஊத்தங்கரை புதிய ஜனநாயக வாசகர் வட்டம் சார்பாக 13.5.91 அன்று பு.ஜ. வளர்ச்சி நிதிக்காக 'மந்திரமா? தந்திரமா?' நிகழ்ச்சிக்கு அனுமதி கேட்டு போலீசிடம் விண்ணப்பிக்கப்பட்டது. அதற்கு எவ்வித காரணமும் கூறாமல் போலீசு அனுமதி மறுக்கவே, தோழர்கள் குறிப்பிட்ட தேதியில் கூட்டம் நடத்துவோம் எனக் கூறினர்.

குறிப்பிட்ட 13-ந் தேதி காலை கூட்ட ஏற்பாடுகளை செய்து கொண்டிருந்த தோழர்கள் இந்திரஜித், சி.என்.சுப்பிரமணி ஆகியோரைப் போலீசு கைது செய்தது. மேடை அமைத்திருந்த முனியப்பன் கோவில் அருகிலிருந்து போலீசு நிலையம் வரை கைதான தோழர்கள் போலீசின் அராஜகத்தைக் கண்டித்து முழக்கமிட்டுச் சென்றனர். மேலும் பிற தோழர்களால் போலீசை அம்பலப்படுத்தி பகுதியில் சுவரொட்டி ஒட்டப்பட்டது. இப்பிரச்சாரம் போலீசின் நடவடிக்கையை மக்கள் கவனத்திற்கு கொண்டு சென்றதோடு போலீசைப் பற்றி மக்கள் புரிந்துகொள்ளவும் ஏதுவாக இருந்தது. அன்று இரவே போலீசு தோழர்களை விடுவித்து விட்டது.



படிப்பகம்

www.padippakam.com


# புதிய ஜனநாயகம்

மார்க்சிய - லெனினிய அரசியல் ஏடு

ஆறாம் ஆண்டு

14

1-15 ஜூன் '91

உள்நாடு :
தனி இதழ் : ரூ.2
ஆண்டு சந்தா : ரூ.48

வெளிநாடுகள் :
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா : US $ 11

படைப்புகள் அனுப்பவும் மற்றும் அனைத்துத் தொடர்புக்கும்:



செ.மதியழகன்,
ஆசிரியர், புதிய ஜனநாயகம்,
21, பாலாஜிசிங் தெரு,
சைதாப்பேட்டை,
சென்னை - 600 015.


# ராஜீவ் கொலை: பழிக்குப் பழிதான்!

அடையாளம் தெரியாத அளவிற்கு துண்டு துண்டாகப் பிய்த்தெறியப்பட்டு ராஜீவ்காந்தி அழித்தொழிக்கப்பட்டு விட்டார். அவரது எலும்புகளையும் சதைகளையும் மூவர்ணக் கொடியில் மூட்டை கட்டி அள்ளிப் போட்டுத்தான் சடலம் எடுத்துச் செல்லப்பட்டது. நாட்டையே சூறையாடிய ஒரு ஊதாரியும் பீரங்கித் திருடனும் ஏகாதிபத்திய அடிவருடியும் கொலைகார பாசிஸ்டுமான ஒருநபர் இப்படி சாகடிக்கப்படுவது பொருத்தமானதுதான். அதைக் கண்டிப்பதோ, அதற்காக அனுதாபப்படுவதோ அவசியமில்லை. அதேவேளையில், ஒரு தனிநபரைக் கொன்று விடுவதன் மூலம் அவர் சார்ந்த அமைப்பையோ, அதன் வர்க்கத் தன்மையையோ மாற்றிவிட முடியாது; அவ்வமைப்பை அம்பலப்படுத்தி, பரந்துபட்ட மக்களை அரசியல்படையாகத் திரட்டி மட்டுமே ஒழிக்க முடியும் என்பதே வரலாற்று அனுபவமாகும்.

ராஜீவ் நாட்டுக்காக தன்னை அர்ப்பணித்தவர்; அவரது பரம்பரையே தியாகப் பரம்பரை; சர்வதேச அரங்கில் இந்தியாவின் மதிப்பை உயர்த்தியவர்; அவரது இழப்பு ஈடுசெய்ய முடியாது என்றெல்லாம் அரசின் ஊதுகுழல்களான வானொலி, வானொளி முதல் அனைத்து வோட்டுக் கட்சிகளும் தரகு முதலாளித்துவ, பார்ப்பன - பனியா பத்திரிகைகளும் ராஜீவை புகழ்ந்து தள்ளிக் கொண்டிருக்கின்றன. இறுதி ஊர்வலம், அஸ்தி கலச ஊர்வலம் ஆகியவை பிரமாதமாக விளம்பரம் செய்யப்படுகின்றன. இவைகளின் மூலம் நாட்டுக்காகவும் மக்களுக்காகவும் பாடுபட்ட மாபெரும் தலைவர் ஒருவர் மறைந்துவிட்டதைப் போன்ற பிரமை ஊட்டப்பட்டு வருகின்றது.

விமான ஓட்டியாக இருந்த ராஜீவ்காந்தி அரசியலுக்கு கொண்டு வரப்பட்டதே பரம்பரை சர்வாதிகார ஆட்சியை நீட்டிக்கத்தான்; அவர் பிரதமர் ஆனதும் தாயின் பிணத்தைக் காட்டித் தான்; ஏழாண்டு கால அவரது அரசியல் வாழ்க்கை ராஜீவை மாபெரும் தேசியத் தலைவராக காட்டுகிறதா? இல்லவே இல்லை; மாறாக, ராஜீவை பின்வருமாறே காட்டுகின்றன.

○ ஒரு பாசிஸ்ட் கொடுங்கோலரே ராஜீவ். 1975 அவசர நிலை பாசிசத்தை நியாயப்படுத்தி பேசியதோடு தேவைப்பட்டால் அப்படி ஒரு ஆட்சியைக் கொண்டு வருவேன் என்று பகிரங்கமாக அறிவித்தவர்; தன்னைச் சுற்றி ஒரு பாசிச கும்பலை உருவாக்கி மக்களை அடக்கி ஒடுக்க பல கருப்புச் சட்டங்களைக் கொண்டு வந்தவர்; தனது ஆட்சியை நிரந்தரமாக்கிக் கொள்ள பாசிச ஆட்சியைக் கொண்டு வரவும் தயாராக இருந்தவர்; அதற்கான தயாரிப்புகளைச் செய்தவர்.

○ பாசிச இந்திராவின் கொலையைத் தொடர்ந்து டெல்லியிலும் வட இந்தியத் தலைநகரங்களிலும் 5000-க்கும் மேற்பட்ட அப்பாவி சீக்கியர்களைக் கொன்று ஆட்சிக்கு வந்தவர். அக்கொலைக் குற்றவாளிகளுக்கு அமைச்சர் பதவிகள் அளித்து பாராட்டியவர். பெற்ற தாயின் முன்னே மகனை உயிரோடு கொளுத்தியது; மனைவி முன்னே கணவனை வெட்டிக் கொன்றது, கற்பழித்தது போன்ற கொடுமைகளை செய்ய தூண்டிப் பேசியவர்; 'ஒரு பெரிய மரம் விழும்போது சில இழப்புகள் ஏற்படுவது இயல்பே' என்று அதை நியாயப்படுத்தியவர் கிரிமினல் குற்றவாளிதான் ராஜீவ். பழிவாங்கும் வெறியோடு இந்திரா கொலைக்கு அறவே தொடர்பில்லாத நிரபராதி கேஹார்சிங்கை தூக்கிலிட்டு சிம்ராஞ்சித்சிங் மான், அதீந்தர் பால்சிங் ஆகியோர் மீது சதிக்குற்றம் சாட்டி வழக்கே இல்லாமல் தனிமைக் கொட்டியில் அடைத்து சித்திரவதை செய்த அரக்கர் தான் ராஜீவ்.

○ ஒரு இலட்சம் மக்களை நிரந்தர நோயாளிகளுக்கு 10000 பேரை காவு கொண்ட போபால் விஷவாயு 'விபத்து'க்கு காரணமான யூனியன் கார்பைடு நிறுவனத்துடன் இரகசிய பேரங்கள் நடத்தி குற்றவாளிகளை தப்புவிக்கச் செய்த மக்கள் விரோதி தான் ராஜீவ்காந்தி; நட்டஈடு கேட்டு போராடிய மக்களை அடக்கி ஒடுக்கியவர் தான் ராஜீவ்.

○ சீக்கிய சமுதாயத்தையே பழிவாங்கும் வெறியோடு பஞ்சாபில் அரசு பயங்கரவாதத்தை ஏவிவிட்டு உளவுப்படை 'ரா' மூலம் பல சதிகளையும் கொலைகளையும் அரங்கேற்றி பழியை சீக்கிய தீவிரவாதிகள் மீது சுமத்தி பஞ்சாபையே இரத்தக்களறியாக்கிய ராட்சசன் தான் ராஜீவ் காந்தி, பஞ்சாபிலும் காஷ்மீரிலும் கிரிமினல் கேடிகளையும் போலீஸ் ரௌடிகளையும் கொண்ட இரகசிய கொலைப்படைகளைக் கட்டி மாதத்திற்கு இவ்வளவு பேரைக் கொல்ல வேண்டும் என்று இலக்கு வைத்து ஆயிரக்கணக்கான இளைஞர்களைக் கொன்றொழித்த கொடுங்கோலரே ராஜீவ் காந்தி திரிபுரா இனவெறி தீவிரவாதிகளுடன் கள்ளக்கூட்டு சேர்ந்தும் அசாம் போடாலாந்து கிளர்ச்சியை சீர்குலைத்தும் உளவுப்படை 'ரா' மூலம் சதிகளையும் இனப்படுகொலைகளையும் தனது குறுகிய அரசியல் ஆதரவுக்காக கட்டவிழ்த்து விட்டார் ராஜீவ்.

○ தனது பதவியைப் பாதுகாத்துக் கொள்ள இந்து - முஸ்லீம் மதவெறியர்களுடன் கள்ளக்கூட்டுச் சேர்ந்து மதவெறியைக் கிளறிவிட்டு ஆயிரக்கணக்கான அப்பாவி மக்களை பலியிட்டார். இதேபோல குஜராத்திலும், ஆந்திராவிலும் இடஒதுக்கீடு சாதிக் கலவரங்களைத் திட்டமிட்டே தூண்டினார்.

○ போபார்ஸ் பீரங்கி ஊழலில் கோடிகோடியாக பணம் கொள்ளையடித்தவர்; போபார்ஸ் ஊழல் வெளியானதும் அதை மூடி மறைப்பதற்காக எண்ணற்ற சதிவேலைகளை ஸ்வீடன் அரசுடன் உடன்பாடு செய்து கொண்டு ஊழலை அமுக்கியதோடு பொய்யான ஆதாரங்கள் - வதந்திகளை அயோக்கியத்தனமாக பரப்பினார்.

○ நாடாளுமன்றத்தில் தனது மிகை பலத்தை வைத்து எதிர்க்கட்சியினரின் ஊழல் குற்றச்சாட்டுகளை விவாதிக்கவே விடாமல் ரௌடித்தனமாக நடந்து கொண்டார். ஊழலில் ஊறித்திளைக்கும் அமைச்சர்கள் மீதான ஊழல் புகார்களை விசாரிப்பதற்கான ''லோக்பால்'' மசோதாவை

படிப்பகம்

www.padippakam.com



விபத்துக்குள்ளாகி 250 பேருக்கு மேல் மாண்டுள்ளனர்.

○ இவருடைய ஆட்சிக்காலத்தில் தான் உள்நாட்டு வெளிநாட்டு கடன் ஒவ்வொன்றும் இலட்சம் கோடி ரூபாய்க்கு மேல் தாண்டியது.

○ பிராந்திய மேலாதிக்கத்தை காப்பாற்ற அண்டை நாடுகளை மிரட்டியவர்; அந்நாட்டின் உள்விவகாரங்களில் தலையிட்டவர்; நேபாளத்தை நெருக்கி இந்தியாவின் ஆதிக்கப் பிடிக்குள் கொண்டு வர முயன்றவர்; இலங்கையில் நடக்கின்ற ஈழத்தமிழர்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தைப் பயன்படுத்திக் கொண்டு இலங்கையை பிராந்திய மேலாதிக்கத்திற்குள் கொண்டு வர முயன்றவர்; இந்திய - இலங்கை ஒப்பந்தம் போட்டு இந்திய இராணுவத்தை அனுப்பி 20,000 தமிழர்களைக் கொன்று குவித்தவர்; ஈழத்துரோக அமைப்புகளை 'ரா' மூலம் உருவாக்கி ஈழத்தமிழர்களின் போராட்டங்களை சீர்குலைத்தவர்.

இவ்வாறு ராஜீவ்காந்தி செய்த கிரிமினல் குற்றங்கள், படுகொலைகள், பாசிச அடக்குமுறைகள், நாட்டையே சுரண்டி சூறையாடியது ஆகியவை எண்ணிலடங்கா. இவை சாதாரண குற்றங்களல்ல; மறக்கக்கூடியவையோ, மன்னிக்கப்படக் கூடியவையோ அல்ல; இவை மன்னிக்க முடியாத அரசியல், பொருளாதார கிரிமினல் குற்றங்கள்; தேசத்துரோக, மக்கள் விரோத படுபாதகங்கள்; தலைமுறை தலைமுறையாக வடுக்களை ஏற்படுத்திய குற்றங்களாகும். மேலும் தனது கிரிமினல் குற்றங்களை மறைக்கவும் அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொள்ளவும் அரசு எந்திரத்தையே தனது விசுவாச படையாக மாற்றி ஆட்டம் போட்ட அரக்கர் ஆவார். சொந்தத் தேசத்தையே சூறையாடிய மார்க்கோஸ் - டுவாலியர் வகையைச் சேர்ந்தவர் தான் ராஜீவ்.

காலாவதியாக்கியதோடு ராஜீவ் கும்பலின் ஊழலை அம்பலப்படுத்திய பத்திரிகைகளின் குரல்வளையை நெறிக்க அவதூறு தடைச் சட்டத்தைக் கொண்டு வந்தும் பத்திரிகை காகிதத்தின் விலையை அநியாயமாக ஏற்றியும் அடக்கத் துடித்தார்.

○ அவசரநிலை பிறப்பிக்கும் 59-வது சட்டதிருத்தம், பயங்கரவாத தடைச்சட்டம், கலவரப்பகுதி தடைச் சட்டம் முதலான பல கருப்புச் சட்டங்களைக் கொண்டு வந்தவர் தான் ராஜீவ்.

○ ஏகாதிபத்திய, பன்னாட்டுக் கம்பெனிகளுக்கு நாட்டைச் சூறையாட கதவுகளை அகலத் திறந்து விட்டும், தரகு அதிகார முதலாளிகள் கூடுதல் கொள்ளை அடிக்க கட்டுப்பாடுகளைத் தளர்த்தியும் விசுவாச ஊழியம் செய்து அதன் மூலம் ஆதாயம் அடைந்தவர்.

○ தன்னுடைய ஆட்சிக் காலத்தில் பத்துக்கு மேற்பட்ட தடவை தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசுகளைக் கலைத்து தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை நசுக்குவதில் முன்னின்றவர்; இந்தித் திணிப்பை என்றுமில்லாத அளவிற்கு புகுத்தியவர்.

○ தரகு முதலாளி அம்பானிக்கு அரசு நிதி நிறுவனங்கள் விதிமுறைகளை மீறி தாராள உதவி செய்ததோடு, அம்பானியின் பங்கு மார்க்கெட் மோசடிக்கு உடந்தையாகவும் ராஜீவ் காலத்தில் செயல்படுத்தப்பட்டன. அரசின் சட்டங்களும் கொள்கைகளும் இம்மோசடிக்கு வளைத்து முறுக்கப்பட்டதோடு, நீதிமன்றமே அதை நியாயப்படுத்தியது.

○ ராஜீவ்காந்தி குடும்பத்தினரும் அவரது இத்தாலிய உறவினர்களும், அமிதாப் - அஜிதாப் குடும்பத்தினரும் மக்களின் சொத்தை சூறையாடி குவித்து ரூ.650 கோடி ரூபாய் மூலதனத்தில் இத்தாலியில் தொழில் துவங்கியுள்ளனர்.

○ ராஜீவ் பாசிச கும்பலின் கள்ளக்கூட்டுடன் ஏராளமான அளவு வரிஏய்ப்பு, அன்னிய செலாவணி மோசடிகள் நடந்துள்ளன. இவைகளின் மூலம் இந்திய தரகு முதலாளிகள், பெரும் வியாபாரிகள் மற்றும் பாசிச ராஜீவ் கும்பலின் முக்கிய புள்ளிகளால் சுவிஸ் வங்கிகளில் 20,000 கோடி ரூபாயும் வெளிநாடுகளில் 15000 கோடி ரூபாயும் பணம் குவிக்கப்பட்டுள்ளது; இப்படி நாட்டையே சூறையாட உதவியவர்தான் ராஜீவ் காந்தி!

○ ஊதாரி பிரதமர் என்று முதலாளித்துவப் பத்திரிகைகளே தூற்றுமளவிற்கு பெயரெடுத்தவர்; அடிக்கடி வெளிநாடுகளுக்கு தனிச்சிறப்பான விமானங்களில் சென்று ஊர் சுற்றியவர். ஆடம்பர உல்லாச வாழ்க்கை நடத்தியவர்; இலட்சத்தீவில் அவர் விடுமுறையை அனுபவித்தபோது கேரளாவிலிருந்து தனிவிமானத்தில் அவருக்கு பாயாசம் கொண்டு செல்லப்பட்டது; அவரது மனைவி சோனியாவிடம் 6000 பட்டுப் புடவைகள் இருப்பது — ஆகியவை இதற்கு சில உதாரணங்கள்.

○ சர்வதேச 'மாமா' சந்திரசாமி, சர்வதேச ஆயுதபேர தரகன் ஆதனன் கஷோகியின் நெருங்கிய கூட்டாளியானவர் ராஜீவ்.

○ ஏர்பஸ் ஏ-320 விமானங்கள் ரூ.2500 கோடி ரூபாய்க்கு ராஜீவ் அரசு வாங்கியதில் ஊழல் செய்தவர்; அவற்றில் 2 விமானங்கள்

சொந்தநாட்டு மக்களைக் கொன்று இரத்தம் குடித்த காட்டேரிதான் ராஜீவ் காந்தி; சொந்த நாட்டையே சூறையாடிவர்; பஞ்சாப், அசாம் மாநிலத்து மக்கள், ஈழத்தமிழர்கள் - இப்படி தனது உயிருக்கு குறி வைக்கும் பல கொலைகாரர்களை உருவாக்கிக் கொண்டார். இது தவிர்க்க முடியாதது; அவர் திட்டமிட்டுக் கொல்லப்படலாம் என்று எதிர்பார்த்ததுதான்; எனவே, வசீகரமானவர், இளையவர், இனிமையானவர், அன்புக்குரிய தலைவன் கொடியவர்களின் குண்டுக்கு இரையாகி விட்டார்' என்று குட்டி முதலாளித்துவ கூட்டம் புலம்புவது கடைந்தெடுத்த அயோக்கியத்தனமாகும்.

கொலைவெறியின் குறியிலிருந்து தப்பிக்கவே குண்டு துளைக்காத கார், குண்டு துளைக்காத கண்ணாடி மேடை, குண்டு துளைக்காத கோட்டு, அதிரடிப்படை, உலோக கண்டுபிடிப்புக் கருவி என்றெல்லாம் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் தான் நடமாடிக் கொண்டிருந்தார்; இத்தனை பாதுகாப்புகள் இருந்தும் தான் கொல்லப்படலாம் என்ற நிரந்தர அச்சத்திலேயே அவர் காலம் தள்ளிக் கொண்டிருந்தார்; ஆனால் இந்தத் தேர்தலில் ஆட்சியைப் பிடிக்காவிட்டால் இனி என்றைக்குமே அவரது அரசியல் வாழ்வு அஸ்தமித்துவிடும் என்ற நிலையில்



படிப்பகம்

www.padippakam.com

இருந்தது; ஆகவே இந்த கடைசி வாய்ப்பில் எப்பாடுபட்டாலும் தேர்தலில் வெற்றி பெற வேண்டும் என்ற வெறியில் பாதுகாப்பு ஏற்பாடுகளை மீறி மக்களிடையே சென்று மாலைகள் வாங்கினார்; கை குலுக்கினார்; சிரித்துப் பேசினார்; இதன் மூலம் தான் கடந்த காலத்தில் புரிந்த கிரிமினல் குற்றங்களை மக்கள் மறந்துவிட்டு தனக்கு வோட்டளிப்பர் என்று நம்பினார்; இதுவே அவரைக் கொல்ல சாதகமாக அமைந்தது.

ராஜீவின் இந்த அழித்தொழிப்பு, வோட்டுப் பொறுக்கி முதலாளித்துவ கட்சித் தலைவர்களின் முதுகெலும்பை சில்லிட வைத்துள்ளது. இனி இவர்கள் மிருகங்களைப் போல கூண்டுகளில் இருந்துதான் பேசுவார்கள்; பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளில் தான் உலா வருவர்; சிறுசிறு சலசலப்பு கண்டு எல்லாம் நடுங்கிச் சாவர்; ஆனாலும் இவர்களும் முதலாளித்துவப் பத்திரிகைகளும் கிசுகிசு பத்திரிகைகளும் பாசிச ராஜீவை அழித்தொழித்த செயல் கோழைத்தனமானது என்று சொல்வது வேடிக்கையானது; நிச்சயமாக இது கோழைத்தனமான செயல் அல்ல; ஒரு பாசிஸ்ட்டைக் கொல்ல தன்னையே அர்ப்பணித்துக் கொண்டது கோழைத்தனமானதா? தனது அம்மா கொல்லப்பட்ட பின்னும் தன் உயிருக்கு ஆபத்து இருக்கிறது என்று தெரிந்த பின்னும் நாட்டுக்காக பணியாற்ற துணிச்சலாக முன் வந்தவர் என்று ராஜீவைப் புகழ்கின்றனர்; ஆனால், பரம்பரை சர்வாதிகார ஆட்சியை தொடரும் பேராசையுடன் பாசிஸ்டுகளுக்கே உரிய 'தன்மையுடன்' தான் ராஜீவ் உலவி வந்தார் என்பதே உண்மை!

எனவே, இப்படிப்பட்ட ஒரு பாசிஸ்ட் கொடுங்கோலன், இந்திய மார்க்கோஸ் கொல்லப்பட்டதில் பரிதாபப்படவோ, பசப்புவதற்கோ இடமில்லை. ராஜீவ் தமிழக மண்ணில் கொல்லப்பட்டது தமிழ்நாட்டுக்கு அவமானம் என்று மா.பொ.சி போன்ற செல்லாத 'நோட்டு'களும் அரசியல் சீக்கு ஜெயலலிதாவும் குட்டி முதலாளித்துவ பெரிய மனிதர்களும் பிதற்றி வருகிறார்கள். பாசிஸ்டும் தேசவிரோதியுமான ராஜீவ் தமிழ்நாட்டில் கொல்லப்பட்டது குறித்துத் தமிழர்கள் அவமானப்படவோ, வெட்கப்படவோ என்ன இருக்கிறது?

நேரு பரம்பரையைச் சேர்ந்தவர்; ஆசியஜோதியின் பேரன்; முன்னாள் பிரதமர், தியாகப் பரம்பரை என்றெல்லாம் சிலர் ராஜீவின் பெருமையைப் பேசுகின்றனர். ஆனால் நேரு பரம்பரையே தேசதுரோகமானது; மக்கள் விரோதமானது; நாட்டையே கொள்ளையடித்த பரம்பரையாகும். மேலும் பிரதமர் பதவி என்பதற்கும் வர்க்கத்தன்மை உண்டு. அது எல்லோருக்கும் பொதுவான பதவி அல்ல. தரகுப் பெருமுதலாளிகள், நிலப்பிரபுக்கள், ஏகாதிபத்தியங்கள், அதிகார வர்க்கம் ஆகியோருக்கு சேவை செய்த, அவர்களது பிரதமராகத்தான் ராஜீவ் செயல்பட்டார். உழைக்கும் மக்களைப் பொருத்தவரை அவர் ஒரு பிரதமரல்ல; பிணந்தின்னியே; ஆளும் வர்க்கங்களின் காவல் நாயே; எனவே, அவரது மரணத்திற்கு உழைக்கும் மக்கள் அஞ்சலி செலுத்த முடியாது; கூடாது.

☆ ☆ ☆

ராஜீவ்காந்தியின் அழித்தொழிப்பையொட்டி அகில இந்திய அரசியல் நிலைமையில் குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்பட்டுள்ளது. ராஜீவ்காந்தி என்ற பாசிஸ்ட் கிரிமினல் ஒழித்து கட்டப்பட்டது உழைக்கும் மக்களுக்கு சாதகமானதுதான்; சோனியாகாந்தி காங்கிரஸ் தலைவர் பதவியை ஏற்க இறுதியாக மறுத்து நரசிம்மராவ் தலைவராக 'தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்'. சோனியா மறுத்ததற்கு ஒரு முக்கிய காரணம் தானும் கொல்லப்படலாம் என்பதாகும். எனவே, நேரு பரம்பரை ஆட்சியை ஒரு முடிவுக்கு கொண்டு வந்த பெருமையும், காங்கிரஸ் சிதற அடியெடுத்துக் கொடுத்த பெருமையும் ராஜீவ் கொலைகாரர்களுக்கு போய்ச் சேருகிறது. நாமும் இப்படி அழிக்கப்படலாம் என்ற அச்சத்தை வோட்டுப் பொறுக்கித் தலைவர்களிடம் ராஜீவ் மரணம் ஏற்படுத்தியுள்ளது. எனினும், தானே நேர்மறையான அடிப்படையில் இது உழைக்கும் மக்களுக்கு நன்மையைக் கொண்டு வராது. ஏனெனில் பாட்டாளி வர்க்கத்தின் கட்சி பலவீனமாக இருக்கின்ற இன்றைய நிலையில் ஆளும் வர்க்கக் கட்சிகளில் ஒன்றோ அல்லது கூட்டு சேர்ந்தோ, அவைகளே பதவியில் அமரும். மேலும் காங்கிரசு பதவிக்கு வர சாதகமாக அனுதாப அலை என்ற ஒன்றையும் ராஜீவ் மரணம் உருவாக்கியுள்ளது.

ராஜீவின் மரணத்தால் அவர் தலைமைத் தாங்கிய கும்பல் நிலைகுலைந்து போயுள்ளது. சோனியாகாந்தி தலைவர் பதவியை ஏற்க மறுத்துவிட்ட நிலையில் ஒரு குழுவாகவே நீடிக்க வாய்ப்பில்லை; வெகு விரைவில் அது சிதறும்; மேலும் காங்கிரஸ் சிதறுவதும் உறுதி; பதவிக்கு வராவிட்டால் விரைவிலும், பதவிக்கு வந்தால் சற்று காலம் தள்ளியும் சிதறுவது உறுதி. தான் மட்டுமே நிலையான ஆட்சியைத் தரமுடியும் என மார்தட்டிய காங்கிரசு, இன்று அதன் தலைவர் இறந்தவுடனேயே நிலைகுலைந்து போய்விட்ட பரிதாப நிலையைப் பார்க்கிறோம். நூற்றாண்டு பாரம்பரியம் கொண்ட கட்சி, காந்தி - நேரு போன்ற 'மாபெரும்' தலைவர்களால் உருவாக்கப்பட்ட கட்சி இன்று உடைந்து சிதறுவது உறுதியாகிவிட்டது.

மூழ்குகிற கப்பலில் அள்ளுகிற வரை ஆதாயம் என்று காங்கிரஸ் கோஷ்டிகளை தம்பக்கம் இழுக்க வி.பி.சிங், சந்திரசேகர், பி.ஜே.பி. ஆகியோர் நாக்கில் எச்சில் வடிய சதிவலை பின்ன ஆரம்பித்து விட்டனர். இதனால் கட்சித் தாவல்கள், குதிரை வியாபாரம் எப்போதையும் விட அப்பட்டமானதாக, அருவெறுப்பானதாக நடைபெற போகின்றது. இன்றைய சூழ்நிலையில் ஒன்று, எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்காமல் தொங்குநிலை பாராளுமன்ற நிலை வரலாம்; அல்லது காங்கிரஸ் பெரும்பான்மை பெற்று பதவிக்கு வரலாம்; காங்கிரஸ் பதவிக்கு வந்தாலும் வெடித்து சிதறுமாதலால், குதிரை வியாபாரமும் நாடாளுமன்ற அராஜகமும் தலைவிரித்தாடப் போவது நிச்சயம். இதனால் நாடாளுமன்ற ஆட்சிமுறை மேலும் நாறி அம்பலப்படுவது என்ற போக்கே நடக்கும்.

இந்த குழப்ப நிலையை எதிர்பார்த்து பாரதீய ஜனதா கட்சி தனது நிலையை வலுப்படுத்திக் கொள்ள உடனடியாக செயலில் இறங்கிவிட்டது. 'பாராண்ட ராமனுக்கு கோயில்; பரதேசி ராமனுக்கு ரொட்டி' என்ற தனது பழைய கோஷத்தை தூக்கி எறிந்து விட்டு ராஜீவின் கோஷமான நிலையான ஆட்சியை தான் மட்டுமே தரமுடியும் என்று முழங்கத் தொடங்கிவிட்டது. பிற கட்சிகள் எல்லாம் சந்தர்ப்பவாத கூட்டணிகள்; தான் மட்டுமே ஊழலற்ற, திறமையான, நிலையான ஆட்சியைத் தரமுடியும் என்ற பிரச்சாரத்தை தொடங்கிவிட்டது. பிராந்திய கட்சிகள் சிலவற்றைத் தன் பக்கம் சேர்த்துக் கொண்டும் காங்கிரசிலிருந்து சிலரை விலைக்கு வாங்கியும் எப்படியாவது இந்த வாய்ப்பில் பதவியில் அமர்ந்துவிட பகீரத பிரயத்தனங்களில் இறங்கிவிட்டது. இதன் ஒரு பகுதியாக, ஜெயலலிதாவை தன்பக்கம் கொண்டுவர தூதுவரை அனுப்பியுள்ளது.

காங்கிரசு கட்சிக்குள்ளேயும் இந்துமத வெறி சக்திகள் கணிசமாக உள்ளன; இந்திராவின் கடைசி காலத்திலும் ராஜீவ்காந்தி காலத்திலும் இந்துக்களின் வோட்டைக் கவர இந்துமதவெறி நிலைப்பாடுகள் காங்கிரசால் மேற்கொள்ளப்பட்டன. மீரட் போன்ற இடங்களில் திட்டமிட்டு முஸ்லீம்கள் மேல்

**ராஜீவின் சாவினால் அனாதையாகிவிட்ட காங்கிரசின் தற்காலிக தலைவர் நரசிம்மராவ் (நடுவில்).**



படிப்பகம்

www.padippakam.com

கலவரங்கள் தூண்டிவிட்டது; ஜம்மு-காஷ்மீர் தேர்தலின்போது இந்துமத ஆதரவு நிலை எடுத்து காங்கிரசு பிரச்சாரம் செய்தது போன்றவைகள் எடுத்துகாட்டுகள். காங்கிரசு கோஷ்டிகளாக சிதறும்போது ஆதாயம் அடைய அல்லது அதை உடைக்க பி.ஜே.பி.க்கு இந்த அம்சம் சாதகமாக உள்ளது.

எனவே, பாசிச ராஜீவ் கும்பல் சிதறியுள்ள சமயத்தில் இந்த நாடாளுமன்ற அராஜகத்தைக் காட்டியே இந்து மதவெறி பாசிசத்தைக் கொண்டு வர துடிக்கின்றன, இந்துமதவெறி அமைப்புகள்; அவைகளே பிரதான அபாயமாக மாறியுள்ள இன்றைய நிலையில் இந்த அமைப்புகள் பற்றி விரிவாகவும் கூர்மையாகவும் பரவலாகவும் புரட்சியாளர்கள் பிரச்சாரத்தை எடுத்துச் செல்ல வேண்டும்; இந்த சக்திகளை முறியடிப்பதை முதன்மையான பணியாக எடுத்து தீவிரமாக செயலாற்ற வேண்டும்.

ராஜீவின் அழித்தொழிப்பை பூதாகரமாக்கி எல்லா இலங்கை தமிழரையும் திருப்பி அனுப்ப வேண்டும் என்று டெல்லி காங்கிரசின் தமிழக பொதிமாடு இராமமூர்த்தியும் அரசியல் சீக்கு ஜெயலலிதாவும் ஊளையிட்டுள்ளனர்; விடுதலைப்புலிகள் தமது எஜமானர்களின் கட்டுப்பாட்டிலிருந்து விலகிப்போன எரிச்சலும் மீண்டும் அதை தமது எஜமானனின் கட்டுப்பாட்டில் கொண்டுவர அரசியல் நிர்ப்பந்தமும் தான் வேண்டுமென்றே இவர்கள் விடுதலைப் புலிகள் மீது தொடர்ந்து அவதூறு செய்து வருவதன் நோக்கமாகும்; அதன் ஒரு பகுதியாகத்தான் எல்லா இலங்கைத் தமிழர்கள் மீதும் இவர்கள் தமது ஆத்திரத்தைக் கக்கியுள்ளனர்.

ராஜீவ் கொலையை கருவியாக்கி வோட்டுப் பொறுக்க ஜெயலலிதா - வாழப்பாடி கோஷ்டிகள் ஏற்கனவே களத்தில் இறங்கிவிட்டன. திட்டமிட்டு தி.மு.க. தேசிய முன்னணி - 'இடது'சாரி கட்சிகளின் விளம்பர தட்டிகள், பேனர்கள், அலுவலகங்கள் ஆகியவைகளை ஒன்றுவிடாமல் தமிழ்நாடு முழுவதும் கொளுத்தி விட்டனர்; சேதப்படுத்தியுள்ளனர். தி.மு.க., ஜனதா தள, 'இடது'சாரி கட்சி வேட்பாளர்களின் வீடு புகுந்து தாக்கியும் சூறையாடியுள்ளனர். பிரச்சார வாகனங்களை அடித்து நொறுக்கியுள்ளனர். மேலும் இக்கட்சிகளை மக்களிடமிருந்து தனிமைப்படுத்தும் நோக்கத்துடன் விடுதலைப் புலிகளை ஊக்குவித்ததன் மூலம் ராஜீவ்கொலைக்கு தி.மு.க.தான் காரணம் என்று பொய்யையும் அவிழ்த்துவிட்டனர். வாழப்பாடி இன்னும் ஒரு படி மேலே சென்று ராஜீவை கொலை செய்தது கருணாநிதி - தி.மு.க. தான் என்றே புளுகியுள்ளார். இவைகளின் மூலம் அக்கட்சிகளை தனிமைப்படுத்துவதில் கணிசமான அளவு வெற்றி ஈட்டியுள்ளனர். மேலும் ராஜீவின் பிணப்பெட்டியைக் காட்டி அனுதாப அலையை எழுப்பி வோட்டு கேட்டு வருவர்.

ராஜீவின் கொலையையொட்டி அ.தி.மு.க. - காங்கிரஸ் காலிகள் நடத்திய வெறியாட்டத்தையும் தி.மு.க. மீதான திட்டமிட்ட அவதூறு பிரச்சாரத்தையும் தி.மு.க. - தே.மு. - 'இடது'சாரி தலைவர்கள் போர்க்குணத்துடன் எதிர்த்து முறியடிக்கவில்லை; மாறாக பீதி கொண்டு செயலற்ற தற்காப்பு நிலையை எடுத்துள்ளனர்; 'இராணுவத்தை வரவழைத்தாவது அமைதியை நிலைநாட்டுங்கள்' என்று தி.மு.க. தலைவர் கருணாநிதி ஓலமிட்டது பீதியினால்தான்; இதனால், அவர்களது அணிகள் சோர்வுற்று போயுள்ளனர்; அல்லது ஆத்திரமுற்று ஆங்காங்கே எதிர்த்துத் தாக்குகின்றனர்.

ஆனால் காங்கிரசில் ஏற்படும் பிளவுகள் தமிழ்நாட்டிலும் எதிரொலிக்கும். மூப்பனார், வாழப்பாடி கோஷ்டிகள் தனித்தனியே செல்ல வாய்ப்புண்டு. தி.மு.க. தலைவர் கருணாநிதிக்கு நெருக்கமானவரான மூப்பனாருக்குத் தான் தமிழக காங்கிரசில் அதிக செல்வாக்கு உண்டு. எனவே வாழப்பாடி ஓரம் கட்டப்படலாம்; மேலும் அகில இந்திய அளவில் காங்கிரஸ் சிதறி பலவீனமடைந்து பாரதீய ஜனதா கட்சி வலுப்பெற்றால், பார்ப்பன ஜெயலலிதா தனது விசுவாசி வாழப்பாடியை உதறிவிட்டு பாரதீய ஜனதா படகில் ஏறிக் கொள்ளலாம். அந்நிலையில் மூப்பனார் பிரிவு காங்கிரசு தி.மு.க. கூட்டு கூட ஏற்படலாம்.

இந்த மாதிரி அரசியல் விசுவாசங்கள் உடைதல்; புதிய விசுவாசங்கள் அடிப்படையில் புதிய சந்தர்ப்பவாத கூட்டணிகள் ஏற்படுதல்; மீண்டும் அவை உடைதல்; மீண்டும் உருவாதல்; குதிரை வியாபாரம்; ஆட்சிக் கவிழ்ப்புகள் நடக்கும்; நாடாளுமன்ற அராஜகம் இப்படி தலைவிரித்தாடும். இதுதான் அண்மை எதிர்காலத்தில் நடக்கப் போகின்றது.

நாடாளுமன்ற போலி ஜனநாயகம் நடைமுறையில் இப்படித்தான் இழிந்து போகும். அதற்கு விதிக்கப்பட்ட விதி இது தான்; இதற்கு மாற்று புதிய ஜனநாயகப் புரட்சியில் மலரும் மக்கள் ஜனநாயக அமைப்பே; இதன் அவசியமும் தேவையும் என்றுமில்லாத அளவிற்கு இன்று முன்னணிக்கு வந்துள்ளது.

## கொலையாளிகள் யார்? கோடி ரூபாய்க் கேள்வி!

ஸ்ரீபெரும்புதூரில் ராஜீவ் காந்தியைக் குண்டு வைத்துக் கொன்றவர்கள் யார்? என்ன காரணம்? இந்தக் கேள்விகள் நூறு கோடி ரூபாய் மதிப்புடையவை. இந்த வழக்கு விசாரணைக்கு ஏறக்குறைய செலவிடப் போகும் தொகையை வைத்துச் சொல்கிறோம். இப்போது ராஜீவ் காந்தியின் கொலைக்கு தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் காரணமாக இருக்கலாம்; குறிப்பாக ஸ்ரீபெரும்புதூர் குண்டு வெடிப்புக்குச் சற்றுமுன்பு எடுக்கப்பட்ட கீழே உள்ள புகைப்படத்தில் காணப்படும் சந்தன மாலையுடன் ஒரு பெண்ணையும் கையில் நோட்டுடன் நிற்கும் ஒரு ஆணையும் குறிவைத்துப் புலன் விசாரணைகள் நடக்கின்றன. இவர்களும் இவர்களுடன் வந்ததாகச் சந்தேகிக்கப்படுபவர்களும் விடுதலைப் புலிகள் என்று சிறப்பு விசாரணைக் குழு கருதுகிறது.

ஜெயலலிதாவும், வாழப்பாடியும், தா.பாண்டியனும் ஈழ துரோக அமைப்புகளும் ராஜீவின் கொலைக்குப் பின்னணி -சதி, புலிகள் - தி.மு.க. - சி.ஐ.ஏ. கூட்டுத்தான் என்று பிரச்சாரம் செய்கின்றனர். போலிக் கம்யூனிஸ்டுகளும், பா.ஜ.க.வும், இ.காங்கிரசும் அந்நிய சதி என்று கூறுகின்றன. இவை ஒன்று அரசியல் ஆதாயம் கருதிப் பரப்பப்படும் வதந்திகள் அல்லது இவ்வளவு பெரிய தலைவரை ஒரு சாதாரணப் பெண் திட்டமிட்டுக் கொன்றதாக ஒப்புக்கொள்வதே அவருடைய பெருமைக்குப் பொருத்தமாக இல்லை என்கிற காரணம். அந்நிய சக்திகள், குறிப்பாக சி.ஐ.ஏ. போன்ற மேலை ஏகாதிபத்தியங்கள் ராஜீவைக் கொல்ல வேண்டிய அவசியமே இல்லை. ஏனென்றால் ராஜீவே அவர்களின் விசுவாசமான ஊழியர்தான்.

ஆகவே, விடுதலைப் புலிகளோ, சீக்கியத் தீவிரவாதிகளோ ராஜீவை கொன்றிருக்கலாம் என்பதற்கான வாய்ப்பாகச் சுருங்கி, கிடைத்துள்ள தகவல்கள்படி விடுதலைப் புலிகள் மீதான கவனம் குவிந்துள்ளன. இவர்களில் யார் ராஜீவைக் கொன்றிருந்தாலும் அதற்கான அடிப்படையாக தண்டனைக்குரிய குற்றங்கள் புரிந்தவர்தான் ராஜீவ். ஆயிரக்கணக்கான சீக்கியர்களைக் கொன்றதோடு, சீக்கிய மதத்தவர் அனைவரையும் அவமானப்படுத்தியும், ஆத்திரமூட்டியும் வந்தவர்தான் ராஜீவ்.

அகதிகளாக உள்ள ஈழத் தமிழர் நலன் கருதி விடுதலைப் புலிகள், கொலை செய்யவில்லை என்று மறுக்கின்றனர். ஆனால், ராஜீவைக் கொல்வதற்கான அவசியமும் காரணமும் ஈழத் தமிழருக்குண்டு. 10000 ஈழத் தமிழரைக் கொன்று, ஈழத் தமிழச்சிகளைக் கற்பழித்து, ஈழத் தமிழ்ச் சிறுவர்களை ஓரின உறவுக்கு நிர்பந்தித்து எவ்வளவோ அக்கிரமங்கள் - கிரிமினல் குற்றங்களை இந்திய ஆக்கிரமிப்பு இராணுவம் செய்திடக் காரணமாக இருந்தார், ராஜீவ் காந்தி.


வயிற்றிலே வெடிகுண்டைக் கட்டிக் கொண்டு வந்து நன்கு தெரிந்தே மாண்டு போனாளே அந்தப் பெண்ணோ அவளுடைய சகோதர சகோதரிகளோ, தாய் தந்தையரோ கூட இந்திய இராணுவத்தால் வேட்டையாடப்பட்டிருக்கலாம். அதுவும் வேண்டாம்; தன் இனத்தை அழிக்கத் துணிந்தவர்கள் மீது ஆத்திரம் கொண்டவளாயும் இருக்கலாம். ஆனால், ஒன்று மட்டும் நிச்சயம்; அவள் கூலிவாங்கிக் கொண்டு வந்த கொலைகாரி இல்லை. பழிக்குப்பழி வாங்க வந்தவள்தான்!





படிப்பகம்

www.padippakam.com



# சிவந்த கண்கள் கவனிக்கட்டும்

பம்பாயில் விசுவ ஹிந்து பரிசத் மற்றும் பஜ்ராங்தள் அமைப்பின் 15 கிளையிலுள்ள உறுப்பினர்களுக்கு 2,000க்கும் மேற்பட்ட சூலாயுதம் விநியோகிக்கப்பட்டது. ''இளைஞர்களின் போராடும் தரத்தை - வீரத்தை வளர்க்கிறோம்'' என்கிறார் இதை விநியோகித்த வி.இ.ப.வின் தேர்தல் பிரச்சார நிறுவனர் ஓ.பி. சர்தேசி. ''சீக்கியர்கள் வாள் வைத்து கொள்ளும் போது நாங்கள் ஏன் சூலாயுதம் வைத்துக் கொள்ளக் கூடாது?'' எனக் கேட்டு 14 வயதினர் கூட பம்பாயில் சூலாயுதத்துடன் திரிகிறார்கள். 25 ரூபாய் கொடுத்தால் போதும் எஃகினால் ஆன கூர்தீட்டிய சூலாயுதம் தருகிறார்கள் இவ்வமைப்புகளின் தலைவர்கள். மரபுவழி ஆயுதம் என்று சட்டம் கூட இதை அங்கீகரித்து விடும். ஆனால் நாம் அங்கீகரித்தால்...?

குளிர் பானங்கள் வாங்கிக் கொடுத்தாலே போதும், தேர்தல் பிரச்சாரத்திற்கு ஆள் கிடைக்கிறார்கள் டில்லியில். கல்லூரி மாணவர்கள் சிலர் விடுமுறை நாட்களை கழிக்க தேர்தல் பிரச்சாரத்திற்கு கூலியாட்களாக செல்லும் வேலையைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். சந்திரசேகரின் சமாஜ்வாதி ஜனதா கட்சி இப்படி சில மாணவர்களைப் பிடித்து பிரச்சாரத்திற்கு அனுப்பியது. கோஷம் போட்டு வந்த மாணவர்கள் ஒரு இடத்தில் திடீரென ''ராஜீவ் கி... ஜே...! உங்கள் ஓட்டு! காங்கிரசுக்கே!'' என கோஷமிட்டனர். ஆள் கூட்டி வந்தவர் அரண்டு போய் உடனே ஒலிபெருக்கியை நிறுத்திவிட்டு கேட்டதற்கு, ''இப்பொழுது தானே காங்கிரசுக்கு ஓட்டு கேட்டுட்டு வந்தோம்! அந்த பழக்கத்தில் மறந்து தவறுதலா நடந்து போச்சு'' என கூலிப்பட்டாளம் குழைந்திருக்கிறது.




ரஷ்யாவில் 90-ம் வருடத்தில் மட்டும் 20 லட்சத்து 700 ஆயிரம் கிரிமினல் குற்றங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதில் 30,000 பேர் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள்; 60,000 முதல் 70,000 பேர் வரை காயமடைந்திருக்கிறார்கள். ஆனால் உண்மையான அளவோ நான்கு அல்லது ஐந்து மடங்கு அதிகமாகவே இருக்கும். இதை ஒத்துக் கொள்வதோடு ''ரஷ்யாவின் கிரிமினல் மாஃபியா கும்பலின் வளர்ச்சி எதிர்காலத்தையே கேள்விக்குள்ளாக்குகிறது'' என்கிறார் ரஷ்ய உள்துறை பாதுகாப்பு அமைச்சகத்தின் தலைவர் அலெக்சாந்தர் குரோவ். அமைப்பு ரீதியில் திரட்டப்பட்ட 1641 கிரிமினல் கும்பல்கள் இதுவரை கண்டுபிடிக்கப்பட்டும், 5,000 கும்பல்கள் கண்காணிப்பிலும் உள்ளன. இக்கும்பலைச் சேர்ந்தவர்கள் 5,000 பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். துல்பனேயில் நடந்த தாஜிகிஸ்தான் இனக் கலவரத்தில் இக்கும்பல்கள் ஈடுபட்டிருந்ததும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ருமேனிய - புச்சாரஸ்டு பகுதியிலுள்ள ஹோட்டல்களில் குழந்தைகள் வியாபாரம் கொடிகட்டி பறக்கிறது! அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் உள்ள குழந்தையற்ற தம்பதியர் வந்து இக்குழந்தைகளை வாங்கிச் செல்கிறார்கள். ஒரு குழந்தையின் விலை 15,000 டாலர்! நாளுக்கு நாள் குழந்தையின் விலை அதிகரித்துக் கொண்டே போகிறது. புச்சாரஸ்டிற்கு 40 கி.மீ. அருகேயுள்ள தாராராய் எனுமிடத்தில் இத்தொழிலுக்கு வசதியாக அரசு நடத்தும் அனாதை குழந்தைகள் பராமரிப்பு விடுதிகள் உள்ளன.

''செளசெஸ்கூவின் 'கம்யூனிச' ஆட்சியில்தான் இத்தகைய அவலங்கள் இருந்தன'' எனச்சாடி ஆட்சிக்கு வந்தார்கள் இன்றைய 'ஜனநாயக வாதிகள்'. ஆனால் இவர்களின் 'ஜனநாயக' ஆட்சியில்தான் குழந்தை வியாபாரம் அப்பட்டமாக நடக்கிறது.


*ஆந்திராவின் மசூலிப்பட்டினத்தில் நகைகளை மெருகேற்றும் குடிசைத் தொழில் நடந்துவருகிறது. இத்தொழிலுக்குப் பயன்படுத்தும் அமல்கம் சில்வர், பொட்டாசியம் சயனைடு, உப்பு கலந்த ரசாயன திரவத்தைக் கொண்டு ஓட்டுப் போடுபவர்களுக்கு வைக்கும் அடையாள மையை எளிதாக அழித்து விடலாம். தெலுங்கு தேசக் கட்சியின் ரகசியமாக இருந்த இச்செய்தி காதோடு காதாக பரவி இன்று அனைத்து ஓட்டுக்கட்சியினரும் மசூலிப் பட்டினத்தை மொய்க்கத் தொடங்கிவிட்டார்கள்.*

**பம்பாயில் டி.என். நகர் போலீசு நிலையத்தில் கைப்பற்றி வைக்கப்பட்டிருந்த 40 கிலோ எடையுள்ள ஹெராயின் போதை மருந்து காணாமல் போய்விட்டது. இதை போலீசாரே திருடி விற்றுள்ளனர் என்று இப்போது தெரிய வந்துள்ளது.** இதேபோல கடந்த ஜனவரியில் மாசகான் கோர்ட்டில் வைக்கப்பட்டிருந்த போதை மருந்தை போலீசார் உதவியுடன் திருடர்கள் களவாடிச் சென்றனர். இப்படி கடந்த ஓராண்டில் மட்டும் ஒரு கோடி ரூபாய் மதிப்புள்ள போதை மருந்தை பம்பாய் போலீசார் திருடி விற்றுள்ளனர்.

நாகலாந்து மக்களின் சுயநிர்ணய உரிமைக்காகப் போராடும் நாகாலாந்து சோசலிச தேசிய கவுன்சில் (N.S.C.N) என்ற அமைப்பினரை வேட்டையாடுவதற்கென இந்திய ராணுவம் மணிப்பூரில் பல இடங்களில் முகாமிட்டுள்ளது. கச்சாய் பகுதியில் முகாமிட்டுள்ள ராணுவ கும்பல் சுற்றுவட்டார கிராமங்களிலுள்ள பழங்குடி மக்களை மிருகத்தனமாக தாக்கி சித்திரவதை செய்து வருவது அண்மையில் அம்பலத்திற்கு வந்தது. வீடுகளில் புகுந்து ஆண்களை இழுத்து வந்து வீதியில் நிறுத்தி விசாரணை என்ற பெயரில் பூட்ஸ் காலால் உதைப்பது, சாட்டையால் அடிப்பது, தண்ணீர் தொட்டிக்குள் தலைகீழாக கட்டித் தொங்கவிட்டு மூச்சு முட்டும்வரை முக்கி எடுப்பது, கைவிரல்களை எலும்பு முறியும் வரை முறுக்குவது என சித்திரவதை செய்கிறது.

கடந்த மார்ச் மாதம் ஒரு மோதலின் போது கைது செய்யப்பட்ட என்.எஸ்.சி.என். போராளிப் பெண்கள் இருவரை ராணுவக் கும்பல், மாறி மாறி கற்பழித்தும், அவர்கள் உறுப்புகளில் மின்சாரம் பாய்ச்சி தாக்கியும் சட்டவிரோதமாக 6 நாள்வரை தனது காவலில் வைத்து சித்திரவதை செய்தது.

மணிப்பூர் இளம் வக்கீல் சங்கத்தினர், ராணுவக் கும்பலின் அட்டூழியங்களை தடுத்து நிறுத்தக்கோரி குரல் கொடுக்கத் தொடங்கியள்ளனர்.





படிப்பகம்

www.padippakam.com

# துப்பாக்கி நாயகம்

**இந்தியாவில் ஓட்டுச்சீட்டு ஜனநாயக முறையே துப்பாக்கிகளைக் கொண்டுதான் நடத்தப்படுகிறது. ஓட்டுமுறையல்ல; வேட்டுமுறைதான் என்பதை முதற்கட்ட தேர்தல் மீண்டும் நிரூபித்துவிட்டது.**

உலகிலேயே மிகப்பெரிய ஜனநாயக நாடு இந்தியாதான் என்று போலிக் கம்யூனிஸ்டுகள் உட்பட எல்லா ஓட்டுப் பொறுக்கிக் கட்சிகளும் நம்மை நம்பச் சொல்கின்றன. முதலாளித்துவ பத்திரிக்கைகளும் மற்றும் பிரச்சார சாதனங்களும் இதற்கு மேலும் வலுவூட்டி பிரமிப்பூட்டுகின்றன.

ஆனால், கடந்த மே 20ம் தேதியன்று நடந்த முதற்கட்ட தேர்தலில் இதுவரை காணாத வன்முறையும் கொலைகளும் மோசடிகளும் நடந்துள்ளதாக தேர்தல் கமிஷனே ஒப்புக் கொண்டுள்ளது. உத்திரப்பிரதேசத்தில் பெருமளவு வன்முறை நடந்துள்ளதாகவும் விசாரணை நடத்த வேண்டும் என்று ஜனதாதளம் கோருகிறது. அதே போல பீகாரில் பெருமளவு வன்முறையும் மோசடியும் நடந்துள்ளதாக காங்கிரசு கூப்பாடு போடுகிறது. ஒவ்வொரு முறையும் இப்படி ஓட்டுப் பொறுக்கிகள் ஒருவருக்கொருவர் குற்றம்சாட்டத் தவறுவதில்லை. அதே சமயம் ஒவ்வொருமுறையும் தேர்தல் முடிவுகள் வெளியானதும் 'இந்தியாவில் ஜனநாயகம் வேரூன்றிவிட்டது; இந்திய மக்கள் அமைதி வழியில் புரட்சி செய்து விட்டார்கள்' என்று இவர்கள் கூசாமல் புளுகவும் தவறுவதில்லை.

ஆனால், இந்தியாவில் ஓட்டுச்சீட்டு ஜனநாயக முறையே துப்பாக்கிகளைக் கொண்டுதான் நடத்தப்படுகிறது. ஓட்டு முறையே போலியானது; வேட்டு முறைதான் உண்மையில் ஆளுகிறது என்பதை முதற்கட்ட தேர்தல் மீண்டும் நிரூபித்துக் காட்டிவிட்டது.

பீகார், உ.பி. மாநிலங்களில் தேர்தல் முடிவுகளைத் தீர்மானிப்பவை துப்பாக்கிகள்தாம். முதற்கட்ட வாக்குப்பதிவின் போதே இம்மாநிலங்களில் வரலாறு காணாத வன்முறை தலை விரித்தாடியது. உ.பி. முதல்வர் முலயாம்சிங் யாதவ் போட்டியிட்ட ஜஸ்வந்த் நகர் சட்டசபைத் தொகுதியில் துப்பாக்கி ஏந்திய குண்டர் படையினர் வீதிகளிலே 'வீரப்போர்' நடத்தினர். வாக்குச்சாவடிகளைக் கைப்பற்றுவதிலும், ஓட்டுப்பெட்டிகளைக் கடத்துவதிலும் காங்கிரசு மற்றும் சமாஜவாதி ஜனதா கட்சிக் குண்டர்களுக்கிடையே நடந்த துப்பாக்கிச் சண்டையில் மூன்றுபேர் உயிரிழந்தனர். பாபனக்லா கிராமத்தில் ஒரு மணி நேரத்திற்கும் மேலாக இந்த யுத்தம் நடந்தது.

முஸ்லீம்கள் பெருமளவில் வாழும் மீரட் நகரிலும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் இந்துவெறி பாரதீய ஜனதா கட்சியினர் முஸ்லீம்களை ஓட்டுப் போடவிடாமல் தடுத்தனர். இந்துவெறியைக் கிளறிவிட்டு வகுப்புக் கலவரத்தீயைப் பற்ற வைத்ததில் பத்துக்கும் மேற்பட்டோர் கத்தியால் குத்திக் கொல்லப்பட்டனர். இரண்டு முஸ்லிம்கள் உயிரோடு கொளுத்தப்பட்டனர். வாக்களிக்க நின்று கொண்டிருந்த முஸ்லிம்கள் மீது இந்து வெறியர்கள் துப்பாக்கியால் சுட்டதில் நூற்றுக்கணக்கானோர் படுகாயமடைந்தனர். இன்னுமொரு இந்துவெறிக் கும்பல் பேருந்தில் சென்றுகொண்டிருந்த முஸ்லிம் பயணிகளை திரிசூலத்தால் மிருகத்தனமாகத் தாக்கியது. தம் கண்ணெதிரே இக்கலவரம் நடந்த போதிலும் உத்திரப்பிரதேச ஆயுதப்படை போலீசார் இந்து வெறியர்களுக்கு ஆதரவாகவே நடந்து கொண்டனர். இக் கலவரத்தில் மொத்தம் 18 பேர் படுகொலை செய்யப்பட்டனர். இதேபோல புலந்சாகர் தொகுதியிலும் கலவரம் பரவி பெருமளவில் வன்முறைச் சம்பவங்கள் நடந்தன.

உ.பி.யின் பாக்பட், காசியாபூர், முசாபர் நகர், அலகாபாத் தொகுதிகளில் துப்பாக்கி ஏந்திய ஓட்டுக் கட்சிகளின் குண்டர்களை வாக்குச் சாவடிகளைக் கைப்பற்றிக் கொண்டு கள்ள ஓட்டுப்போட்டனர். பாக்பட் தொகுதியில் தாழ்த்தப்பட்ட மக்களை ஓட்டுப் போட விடாமல் துரத்தியடித்துவிட்டு ஜாட் மேல்சாதியினர் துப்பாக்கி முனையில் போலீசார் கண்ணெதிரே கள்ள ஓட்டுப்போட்டனர். சரூர்பூரிலுள்ள வாக்குச் சாவடியை நாற்புறமும் குண்டர்கள் சூழ்ந்து கொண்டு, சாலையை மறித்து வாக்காளர்களை விரட்டியடித்து துப்பாக்கி முனையில் வாக்குச் சீட்டுகளைப் பறித்துக் கொண்டனர். மோடி நகரில் தங்கள் வருகையை உணர்த்த வானத்தை நோக்கி சுட்டபடியே வந்த வன்முறைக்கும்பல் வாக்குச் சீட்டுகளைப் பறித்து மொத்தமாக தங்கள் கட்சிக்கு முத்திரை குத்திவிட்டுச் சென்றது. பாக்பட் தொகுதியிலுள்ள லோனி கிராமத்தில் ஓட்டுக்கட்சிக் குண்டர்களுக்கிடையே நடந்த துப்பாக்கிச் சண்டையில் இருவர் மாண்டனர். மொத்தத்தில் தேர்தல் நாளன்று உ.பி. யில் மட்டும் 32 பேர் கொல்லப்பட்டனர்.

பீகாரில் துப்பாக்கி ஏந்திய கிரிமினல் - மாஃபியா குண்டர்கள் சுதந்திரமாகவும் ஜனநாயகமாகவும் வாக்குச் சாவடிகளைக் கைப்பற்றிக் கொள்வதுதான் பெரும்பாலான தொகுதிகளில் நடந்தது. பீகார் ஜனதா தள முதல்வர் லல்லு பிரசாத் யாதவ் தன்னுடன் ஆயுதமேந்திய குண்டர் படை ஒன்றை திரட்டிக்கொண்டு பாட்னா, பக்சார் தொகுதிகளில் வாக்குச் சீட்டுக்களை மொத்தமாகக் கைப்பற்றிக் கள்ள ஓட்டுப்போட துணையாக நின்றார். ராஞ்சி தொகுதியில் போட்டியிட்ட மத்திய மந்திரி சுபோத்கான் சகாய், போலீசு மற்றும் தனது கட்சிக் குண்டர்களுடன் பல வாக்குச் சாவடிகளுக்குச் சென்று வாக்காளர்களை விரட்டிவிட்டு கள்ள ஓட்டுப்போட ஏற்பாடு செய்தார். பரஜ் பிரசாத் என்ற பீகார் துணை மந்திரி தனது அடியாட்படையுடன் கள்ள ஓட்டுப்போட்ட போது, காங்கிரசு வேட்பாளர் அவரைக் கையும் களவுமாகப் பிடித்து போலீசிடம் ஒப்படைத்தார்.

லல்லு பிரசாத் யாதவின் ஆதரவுடன் நிற்கும் மாஃபியா தலைவனும் சுயேட்சை வேட்பாளருமான பப்பு யாதவ் கட்டவிழ்த்துவிட்ட வன்முறை வெறியாட்டங்களுக்கு ஈடுகொடுக்க முடியாமல் புர்னியா தொகுதியில் நடந்த மோசடித் தேர்தலை ரத்து செய்யுமாறு அனைத்து ஓட்டுக் கட்சிகளும் ஒப்பாரி வைத்தன. ஆரா பாராளுமன்றத் தொகுதியில் பல இடங்களில் தாழ்த்தப்பட்ட மக்களை வாக்குச் சாவடிக்குள் நுழைய விடாமல் ஆயுதமேந்திய மேல் சாதிவெறியர்கள் விரட்டியடித்தனர். தன்வார்பிடா கிராமத்தில் தாழ்த்தப்பட்டோரில் ஒருவர்கூட வாக்களிக்க முடியவில்லை


ஓட்டு வேட்டைக்குத் தயாராகிறது கிரிமினல் கும்பல்.


படிப்பகம்

www.padippakam.com



பீகாரிலுள்ள ஆரா தொகுதியில் தேர்தல் அதிகாரிகள் முன்னிலையில் விடலைகள் ஓட்டுப் போடும் மோசடி

மகேந்திர பிரசாத் என்ற மாஃபியா தலைவன் போட்டியிட்ட ஜெகனாபாத் தொகுதியில் ஓட்டுக் கட்சிக் குண்டர் படைகளுக்கிடையே நடந்த துப்பாக்கிச் சண்டையில் 12 பேர் உயிரிழந்தனர். சிவான் பாராளுமன்றத் தொகுதியில் வாக்குச் சாவடியிலேயே ஒரு தேர்தல் அதிகாரி சுட்டுக் கொல்லப்பட்டார்.

அனந்தபூர் கிராமத்தில் காங்கிரசு குண்டர்கள் வாக்குச் சாவடியில் கண்மூடித்தனமாக துப்பாக்கிச்சூடு நடத்தி ஒருவரைக் கொன்று பலரை படுகாயப்படுத்திவிட்டு வாக்குச் சாவடியைச் சூறையாடினர். ஜெகனாபாத் தொகுதியிலுள்ள புரான் கிராம வாக்குச் சாவடியை ஒரு காங்கிரசு எம்.எல்.ஏ. கைப்பற்றிக் கொண்டு ஓட்டுப் போட வந்த தாழ்த்தப்பட்ட மக்களை துப்பாக்கியால் சுட்டு விரட்டியடித்தார். பீகாரில் நடந்த முதற்கட்ட வாக்குப்பதிவின்போது மட்டும் 13 பேர் கொல்லப்பட்டனர்.

பீகாரின் பல்வேறு வாக்குச் சாவடிகளில் தில்லுமுல்லு, மோசடி, வன்முறைகள் நடந்த போதிலும் போலீசாரும் அதிகாரிகளும் அவற்றை இம்மியளவும் எதிர்க்கவில்லை.பல சாவடிகளில் 10 வயது சிறுவர்கள் கூட வாக்காளர்களாக ஓட்டுப்போட்டதை பத்திரிக்கையாளர்கள் படம் பிடித்து மாவட்ட அதிகாரிகளிடம் சுட்டிக்காட்டிய போதிலும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. பல சாவடிகளில் தேர்தல் அதிகாரிகளே சாவடிகளை மூடிவிட்டு மாஃபியா குண்டர்கள் கள்ள ஓட்டுப்போட உதவியுள்ளனர்.

உ.பி., பீகார் மாநிலங்களையே விஞ்சுமளவுக்கு இம்முறை ஆந்திர மாநிலத்தில் தேர்தல் மோசடி, தில்லுமுல்லுகள் கொடிகட்டிப்பறந்தது. செகந்திராபாத் தொகுதியில் மாலை 3 மணிவரை 36 சதவீத வாக்குகள் தான் பதிவாகியிருந்தது. அடுத்த இரண்டு மணி நேரத்தில் திடீரென 60 சதவீத வாக்குகள் பதிவாகிவிட்டது. ஹைதராபாத்தில் மாலை 4 மணிஅளவில் 50 சதவீத வாக்குகள் தான் பதிவாகியிருந்தது. கடைசி ஒரு மணி நேரத்திற்குள் 75 சதவீத வாக்குகள் பதிவாகியதாக அதிகாரிகள் கூறினர். இந்த அதிசயம் எப்படி நடந்தது? தேர்தல் அதிகாரிகளே மோசடிக்கு உடந்தையாக இருந்தனர்.காங்கிரசு, தெலுங்கு தேசக்கட்சிக் குண்டர்கள் கடைசி நேரத்தில் வாக்குச்சீட்டுகளை மொத்தமாக கைப்பற்றி முத்திரை குத்தினர் என்று எல்லா பத்திரிக்கைகளுமே அம்பலப்படுத்தின.

ஹைதராபாத் தொகுதியிலுள்ள யாகுத்புரா, சார்மினார், சந்திரகட்டா பகுதிகளில் பல வாக்குச் சாவடிகளில் 18 வயதுக்கும் குறைவான இளம் சிறுவர்கள் கும்பல் கும்பலாக வாக்களித்தனர். தேர்தல் அதிகாரிகளோ, போலீசோ இந்த மோசடியை தடுக்கவில்லை. இன்னும் சில பகுதிகளில் அடையாள மையை அழிக்கும் ஒரு ரசாயன திரவத்தை புட்டிகளில் அடைத்து வைத்துக் கொண்டு, ஓட்டுக்கட்சிக் குண்டர்கள் வாக்களித்துவிட்டு வருவோரின் கையிலுள்ள அடையாள மையை போலீசார் முன்னிலையிலேயே அழிக்கும் திருப்பணியைச் செய்தனர். பல சிறுவர்கள் இதன்மூலம் இரண்டு, மூன்றுமுறை ஓட்டுப் போட்டுவிட்டு அதை தமது சாதனையாகப் பேசிக் கொண்டனர். இவற்றை நேரில் பார்த்த பிரிட்டிஷ் 'வானொலி செய்தியாளர் லிண்ட்சி, ''என் வாழ்வில் மறக்க முடியாத அனுபவம்'' என்று பத்திரிக்கைகளுக்குப் பேட்டியளித்தார்.

ஓங்கோல் நகரில் மாவட்டக் கவுன்சில் தலைவரும் காங்கிரசு பிரமுகருமான வெங்கட சுப்பையா பல வாக்குப் பெட்டிகளை குண்டர்களை ஏவி கடத்திவந்து தனது வீட்டிலேயே பதுக்கி வைத்துக் கொண்டார். சையது என்ற மஜ்லிஸ் கட்சி எம்.எல்.ஏ. தனது அடியாட்களுடன் கள்ள ஓட்டுப் போட்டபோது கையும் களவுமாகப் பிடிபட்டார். பாரதீய கட்சிக் குண்டர்கள் ஹைதராபாத்திலுள்ள ஒரு வாக்குச் சாவடியில் திடீரென புகுந்து வாக்குச் சீட்டுகளை மொத்தமாக கைப்பற்றி முத்திரை குத்தினர். இதைத் தடுத்த தேர்தல் அதிகாரிகளை நையப்புடைத்து விட்டு தப்பியோடினர். இதேபோல குண்டூர், பிரகாசம் மாவட்டங்களில் பரவலாக தில்லுமுல்லு, மோசடிகள் நடந்தன. சில வாக்குச் சாவடிகளில் குண்டுவீச்சுத் தாக்குதலும் நடந்தது. தேர்தல் நாளன்று ஆந்திராவில் மட்டும் 4 பேர் கொல்லப்பட்டனர்.

ஒழுக்கம் - கட்டுப்பாடு பற்றிப் பேசும் பாரதீய ஜனதா ஆளும் ம.பி. ராஜஸ்தான் மாநிலங்களிலும் ஆங்காங்கே வன்முறையும் வாக்குச்சாவடிகளைக் கைப்பற்றுவதும் நடந்தன. ராஜஸ்தானிலுள்ள பீகானீர், பாரத்பூர் தொகுதிகளில் பாரதீய ஜனதா குண்டர்கள் 25 வாக்குச் சாவடிகளைச் சூறையாடினர். மத்திய பிரதேசத்திலுள்ள சர்குஜா தொகுதியில் நான்கு வாக்குச்சாவடிகளை இந்து வெறியர்கள் கைப்பற்றிக் கொண்டு கள்ள ஓட்டுப் போட்டனர். இதேபோல போலிக் கம்யூனிஸ்டுகள் ஆளும் மே.வங்கத்தில் பரவலாக தேர்தல் தில்லுமுல்லு, மோசடிகள் நடந்தன.

இவை 15 கோடி வாக்காளர்கள் பங்கேற்ற முதற்கட்ட தேர்தல் கட்சிகள். அடுத்த இரண்டு கட்டங்களிலும் இன்னும் பெரும

படிப்பகம்

www.padippakam.com

**1989 தேர்தலின் போது 179 பேர் தேர்தல் வன்முறையில் மாண்டனர். இப்போது நடந்த முதல்கட்ட தேர்தல் நாளன்று 43 பேர் பலியாகினர். இத்தேர்தலுக்கு முன்னும் பின்னும் நடந்த வன்முறைச் சம்பவங்களில் 196 பேர் கொல்லப்பட்டனர்.**

ளவு மோசடிகள் நடக்கும் என்றே நம்பப்படுகிறது. முதற்கட்ட தேர்தல் மோசடி, வன்முறைகளைப் பார்த்து, ''இது சுதந்திரமான ஜனநாயக பூர்வமான தேர்தலே அல்ல'' என்று முதலாளித்துவப் பத்திரிக்கைகளே பரிகசிக்கின்றன. தேர்தல் கமிஷன் 842 வாக்குச் சாவடிகளில் மறு வாக்குப்பதிவிற்கு உத்திரவிட்டுள்ளது. 5 நாடாளுமன்றத் தொகுதிகளிலும் 15 சட்டமன்றத் தொகுதிகளிலும் முதற்கட்ட தேர்தலை ரத்து செய்துள்ளது. ஆனால், தேர்தல் சட்டத்தில் இடம் பெறாத இந்த தில்லுமுல்லு, மோசடி, வன்முறைகளுக்கு இதுவரை எந்த தண்டனையுமில்லை. பரிகாரமுமில்லை.

தேர்தல் வன்முறையும் கொலைகளும் நமதுநாட்டுக்குப் புதியவை அல்ல. அவை ஏற்கனவே வளர்ந்து வருபவைதான். ஆனால், இப்போது அபாய அளவை எட்டி விட்டதாக ஓட்டுக்கட்சிகளும் அதிகாரிகளும், பத்திரிக்கைகளும் வெளிப்படையாகவே ஒப்புக் கொண்டுள்ளன என்பதுதான் உண்மை. 1984 தேர்தலின்போது 48 பேர் கொல்லப்பட்டனர். 1989ல் 179 பேர் தேர்தல் வன்முறையில் மாண்டனர். இப்போது நடந்த முதற்கட்ட வாக்குப் பதிவின் போது ஒரே நாளில் நாடு முழுவதும் 43 பேர் கொல்லப்பட்டனர். இத் தேர்தலுக்கு முன்னும் பின்னும் நடந்த வன்முறைச் சம்பவங்களில் 196 பேர் மாண்டுள்ளனர். முதற்கட்ட தேர்தலின் போதே இவ்வளவு கொலைகள் என்றால், அடுத்த இரண்டு கட்டங்களில் என்னவாகுமோ என்று முதலாளித்துவ மூதறிஞர்களே பீதியில் உறைந்து போயுள்ளனர். கடந்த தேர்தலில் 695 வாக்குச் சாவடிகளில் தான் தேர்தல் மோசடிகள் காரணமாக மறு வாக்குப் பதிவு நடந்து. இம்முறை முதற்கட்டத் தேர்தலிலேயே அது 800ஐயும் தாண்டி விட்டது.

அரசியல் கிரிமினல் மயமாகிவிட்டது; கிரிமினல் குற்றவாளிகள் எம்.எல்.ஏ; எம்.பி.களாகவும் மந்திரிகளாகவும் மாறி விட்டார்கள் என்று முதலாளித்துவப் பத்திரிக்கைகளே பக்கம் பக்கமாக எழுதுகின்றன. உ.பி.யில் முதல்வர் முலயாம்சிங் யாதவ் நிறுத்தியுள்ள 4 நாடாளுமன்ற வேட்பாளர்களும் 33 சட்டமன்ற வேட்பாளர்களும் நன்கு அம்பலப்பட்ட கொலைகாரர்கள்தான். பாரதீய ஜனதாகட்சி தேசில்தார் சிங், கயாசிங் குர்மி முதலான கொள்ளைக்காரர்களை வேட்பாளராக நிறுத்தியுள்ளது. தேசில்தார் சிங் வேட்பு மனுதாக்கல் செய்ய வரும் போதே அவனது அடியாட்படையினர் துப்பாக்கியால் வானத்தை நோக்கி சுட்டபடியே ஆரவாரத்துடன் வந்தனர். இதுதவிர பிரேம் சிங், மகேந்திர ராஜா, சூர்ய தேவ்சிங், அருணா சங்கர சுக்லா, மல்கான்சிங், ராம்லகான்சிங் யாதவ், பப்புயாதவ் முதலான பிரபல கொள்ளைக்காரர்களும் மாஃபியா தலைவர்களும் உ.பி, பீகாரில் வேட்பாளராகப் போட்டியிடுகின்றனர். புரட்சி பேகம் வலது கம்யூனிஸ்ட் கட்சிகூட பைசாபாத் தொகுதியில் மாஃபியா குண்டர்படை ஆதரவுடன்தான் தனது வேட்பாளரை நிறுத்தியுள்ளது. ஆக, பணபலமும் சாதிய பலமும் மட்டும் போதாது; ஆயுத பலம்தான் மிக அவசியமானது என்று எல்லா ஓட்டுக்கட்சிகளும முடிவு செய்துவிட்டன. கிரிமினல், கொள்ளைக்காரன் என்பதெல்லாம் இப்போது மரியாதைக்குரிய சொற்களாக, செல்வாக்கிற்கானதாக மாறிவிட்டது என்று பிரபல மாஃபியா தலைவன் அருணா சங்கர் சுக்லா கூறுகிறான்.

ஆக, துப்பாக்கிகள்தான் தேர்தல் வெற்றியை தீர்மானிப்பவையாக உள்ளன. ''துப்பாக்கிக் குழாயிலிருந்துதான் அரசியல் அதிகாரம் பிறக்கிறது'' என்று சொன்னார் மாவோ. அதுதான் உண்மை என்று நிரூபிக்கப்பட்டு வருகிறது. துப்பாக்கி முனையிலேதான் தேர்தலை நடத்துவது என்று ஓட்டுப் பொறுக்கிகளே இப்போது முடிவு செய்துவிட்டனர். நாடாளுமன்ற ஜனநாயகத்தின் முக்கிய உறுப்பாக கருதப்படும் தேர்தல்கள், ஏற்கனவே அங்கம் அங்கமாக வெட்டிச் சிதைக்கப்பட்டுவிட்டது. இனி அதன தலைமையையே சீவி உயிரைப் பறித்துவிடுவது தான் பாக்கியிருக்கிறது.

● மனோகரன்

**பாக்பாட் தொகுதியில் தேர்தல் அதிகாரியே ஓட்டுப் போடும் மோசடி.**



# எஸ்.ஏ.டாங்கே

# ஒரு கம்யூனிச துரோகியின் மரணம்

இந்தியப் போலிக் கம்யூனிசம் இன்னொரு மூத்த தலைவரை இழந்து விட்டது. எஸ்.ஏ.டாங்கே என்ற பெயரில் பிரபலமாக விளங்கிய ஸ்ரீபத் அம்ரித் டாங்கே கடந்த மே 22-ந் தேதி தனது 91-வது வயதில் மரணமடைந்தார்.

இந்தியாவில் முதன் முதலாக கம்யூனிஸ்ட் கட்சியை நிறுவிய தலைவர்களில் டாங்கேயும் ஒருவர். சுதந்திரப் போராட்ட காலகட்டத்தில் கம்யூனிஸ்ட் கட்சி தலைமையில் ஏ.ஐ.டி.யு.சி. என்ற மிகப்பெரிய தொழிற்சங்கத்தை கட்டியமைத்த நிறுவனர்களில் டாங்கே முக்கியமானவர். ஆனால் இறுதி மூச்சு உள்ளவரை கம்யூனிசத் துரோகியாகவே வாழ்வேன் என்கிற லட்சிய வெறியோடு வாழ்ந்தவர்தான் திருவாளர் டாங்கே. அப்பட்டமாக ருஷ்ய அடிவருடியாகச் செயல்பட்ட அவர் 'கம்யூனிஸ்ட்' கட்சியை காங்கிரசின் தொங்கு சதையாக மாற்றுவதில் முன்னணியில் நின்றார். வலது கம்யூனிஸ்ட் கட்சியிடமிருந்து முறித்துக் கொண்டு ஐக்கியப் பொதுவுடமைக் கட்சியை நிறுவிய அவர், சாகும் வரை பாசிசத்தின் உற்ற நண்பராகச் செயல்பட்டார்.

1899-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 10-ம் நாளன்று நாசிக்கிலுள்ள நடுத்தர வர்க்க பிராமண குடும்பத்தில் பிறந்த டாங்கே 1920களில் பம்பாயின் ஆரம்பகால தொழிற்சங்கங்களில் ஒன்றான கிரினி காம்கார் யூனியனை நிறுவி போர்க்குணமிக்க போராட்டங்களை வழி நடத்தினார். இதன் காரணமாக பிரிட்டிஷ் காலனிய அரசின் தாக்குதல் இலக்குகளில் ஒருவரானார். 1929-ல் மீரட் சதிவழக்கில் டாங்கேயும் மற்றும் பிற முன்னணித் தலைவர்களும் பொய்க்குற்றம் சாட்டப்பட்டு சிறையிலடைக்கப்பட்டனர்.

சிறை வாழ்க்கையின் போது டாங்கே தனது துரோகத்தனத்தை உலகிற்கு உணர்த்தினார். தன்னை விடுதலை செய்யுமாறும், பிரிட்டிஷாருக்கு விசுவாசமாக தான் உளவு வேலை செய்யத் தயாராக இருப்பதாகவும் காலனிய அரசுக்கு அவர் கடிதம் எழுதி கம்யூனிச இயக்கத்தையே காட்டிக் கொடுத்தார். அதன் காரணமாக அவரது தண்டனைக் காலம் குறைக்கப்பட்டு விரைவில் விடுதலையானார். பிரிட்டிஷாருக்கு அவர் எழுதிய கடிதம் டெல்லியிலுள்ள ஆவணக் காப்பகத்தில் இன்றைக்கும் பாதுகாப்பாக உள்ளது. இந்த விவகாரம் பிற்காலத்தில அம்பலமானபோது ஸ்ரீபத் (SRIPAD) என்கிற தனது பெயர் SRIPAT என குறிப்பிடப் பட்டிருப்பதால் ''நான் அவனில்லை'' என்று டாங்கே பூசிமெழுகினார்.



படிப்பகம்

www.padippakam.com

1964-ல் தெலிங்கானா உழவர் பேரெழுச்சி புதிய ஜனநாயகப் புரட்சிப் பாதையில் முன்னேறியபோது, டாங்கேயும் அஜாய் கோஷ், மோகன் குமாரமங்கலம் முதலான தலைவர்களும் காங்கிரசுடன் பேரம் பேசி சரணடைந்து தெலிங்கானா புரட்சியை வலது சந்தர்ப்பவாதப் பாதையிலிருந்து எதிர்த்தனர். ரணதிவே தலைமையிலான மற்றொரு கும்பல் 'இடது' சந்தர்ப்பவாத நிலையிலிருந்து தெலிங்கானா புரட்சியை எதிர்த்தது. 1948-ல் நேரு அரசு அப்புரட்சியை சுற்றி வளைத்து நசுக்கிய போது, கம்யூனிஸ்ட் கட்சிக்குள் யார் யார் தெலிங்கானா பேரெழுச்சியை ஆதரிக்கிறார்கள் என்று பட்டியல் போட்டு நேரு அரசுக்கு காட்டிக் கொடுப்பதில் முன்னணியில் நின்றார் டாங்கே. கம்யூனிசத் துரோகிகளால் ''சோசலிஸ்டு'' என்று போற்றப்படும் நேரு அரசினால் நாடு முழுவதும் 5000 கம்யூனிஸ்டுகள் படுகொலை செய்யப்பட்டனர்.

1960-63-ம் ஆண்டுகளில் சர்வதேச கம்யூனிச இயக்கத்தில் பிளவு ஏற்பட்ட போது டாங்கே தலைமையிலான கும்பல் குருச்சேவின் புரட்டல் வாதத்தை ஏற்று ரஷிய ஆதரவு நிலை எடுத்து தனிக் கட்சியாகப் பிரிந்தது. ராமமூர்த்தி, நம்பூதிரிபாடு, ரணதிவே ஆகியோர் இதை எதிர்த்து இன்னுமொரு திரிபுவாதக் கட்சியாக 'மார்க்சிஸ்ட்' கட்சியை உருவாக்கினார். இதே காலத்தில் எல்லைத் தகராறு குறித்து இந்திய - சீன யுத்தம் மூண்டபோது, நேரு அரசின் அநீதியான போரை டாங்கே ஆதரித்தார். சீன ஆதரவு நிலை எடுத்தவர்களை நேரு அரசுக்குக் காட்டிக் கொடுத்தார். நேரு அரசின் அதிகார பூர்வமற்ற தூதராக அவர் பல நாடுகளுக்குச் சென்று அங்குள்ள கம்யூனிஸ்டுகளிடம் சீன எதிர்ப்பு பிரச்சாரம் செய்தார். நேருவை முற்போக்கு ஜனநாயக சோலிஸ்டாகச் சித்தரித்து வலது கம்யூனிஸ்ட் கட்சியை காங்கிரசின் வாலாக மாற்றுவதில் முன்நின்றனர்.

மற்ற பிற போலிக் கம்யூனிசத் தலைவர்களைப் போலவே காந்திய காங்கிரசு பாரம்பரியத்தில் ஊறியவர்தான் டாங்கே. கம்யூனிஸ்ட் கட்சியில் இருந்தாலும் அவர் எப்போதுமே காங்கிரசின் விசுவாசியாகத்தான் இருந்தார். நேருவுக்குப் பிறகு இந்திரா - ராஜீவ் கும்பலின் நம்பகமான பாதந்தாங்கியாக செயல்பட்டார். 1975-ல் இந்திரா அவசரநிலை பாசிசத்தைக் கட்டவிழ்த்து விட்ட போது, ரஷிய ஏகாதிபத்தியத்தின் கட்டளைப்படி விசுவாசமாக அதை ஆதரித்ததோடு, அதற்க சித்தாந்த விளக்கமும் கொடுத்தார் டாங்கே.

போலிக் கம்யூனிஸ்டுகளின் உறுதியான ஆதரவின்றி பாசிசம் அதிகாரத்துக்கு வரமுடியாது என்று எச்சரித்தார், பாசிச எதிர்ப்புப் போராளியும் சர்வதேச பாட்டாளி வர்க்கத் தலைவர்களில் ஒருவருமான ஜார்ஜ் டிமிட்ரோவ். அவரது கூற்றுக்கு இலக்கண சுத்தமாகத் திகழ்ந்தவர் தான் டாங்கே. பாசிசத்தின் உற்ற நண்பராகத் திகழ்ந்த அவர், அவசர நிலையை எதிர்த்த முக்கிய தலைவர்களின் பட்டியலை இந்திராவிடம் கொடுத்து அடக்குமுறைக்கு சேவை செய்தார்.

இதேபோல அவசரநிலைக்கு முன் நடந்த மகத்தான ரயில்வே தொழிலாளர் போராட்டத்தை உள்ளிருந்தே காட்டிக் கொடுத்தார். பின்னாளில் இந்திராவின் அவசரநிலையை ஆதரித்தது தவறு என்று வலது கம்யூனிஸ்ட் கட்சி ''சுயவிமர்சனம்'' செய்து கொண்டபோது கூட டாங்கே தனது நிலையை மாற்றிக் கொள்ளவில்லை.

தோழர் ஸ்டாலின் மறைவுக்குப் பின்னர் ரஷ்யக் கம்யூனிஸ்ட்டுக் கட்சி மற்றும் அரசை நவீன திருத்தல் வாதிகள் கைப்பற்றி சமூக ஏகாதிபத்தியமாக மாற்றிய பிறகு இந்தியாவில் அதன் நம்பகமான எடுபிடியாகச் செயல்பட்ட டாங்கே, ரஷிய திருத்தல் வாதத்துக்கு சித்தாந்தத் தலைமையளித்த சர்வதேச போலிக் கம்யூனிசத் தலைவர்களில் ஒருவராக உயர்ந்தார். அரசுத்துறை எனப்படும் அதிகாரவர்க்க முதலாளித்துவத்தை சோசலிசம் என்று மாய்மாலம் செய்தார். அமைதி வழியிலேயே முதலாளித்துவமற்ற பாதையின் மூலம் புரட்சியைச் சாதிக்க முடியும் என்று தொழிலாளி வர்க்கத்தை ஏய்த்தார். பாசிச இந்திராவின் 20-அம்சத் திட்டம், வங்கிகளை தேச உடமையாக்குவது முதலானவற்றை முற்போக்கு சோசலிச நடவடிக்கையாக ஆதரித்தார்.

மறைந்த 'மார்க்சிஸ்ட்' கட்சித் தலைவர் ராமமூர்த்தியைப் போலவே டாங்கேயும் வேதங்களிலும் உபநிஷத்துகளிலும் சமதர்மக் கொள்கை நிலவுவதாக இந்திய மண்ணுக்கேற்ப மார்க்சியத்தைப் புரட்டினார். இந்திய சமுதாயத்தில் மதங்கள் முக்கிய பங்காற்றுவதாக கூறி இந்து மதக் கோட்பாடுகளுடன் மார்க்சியத்தைக் கலந்து வீரிய ஒட்டு ரக புரட்டல் வாதத்தை உருவாக்கிப் பரப்பினார். இந்து வெறியர்களும் மராட்டிய இன வெறியர்களும் எந்த நோக்கங்களுக்காக மன்னன் சிவாஜியை மாவீரனாக ஏற்றிப் போற்றுகிறார்களோ, அதே நோக்கங்களுடன் டாங்கேயும் சிவாஜியைத் துதிபாடினார்.

துவக்கத்திலிருந்த குருச்சேவ் - பிரஷ்னேவ் கும்பலின் திருத்தல் வாதத்துக்கும், ரஷியாவின் உலக மேலாதிக்கத்துக்கும் அவர் காட்டிய விசுவாசம், இந்திய கம்யூனிச இயக்கத்தை ரஷிய சார்பு புரட்டல்வாத துரோக இயக்கமாக மாற்றுவதில் அவர் ஆற்றிய முன்னணிப் பாத்திரம், ரஷிய வல்லரசின் நோக்கங்களை நிறைவேற்றும் பிராந்திய மேலாதிக்க வல்லரசாக இந்தியாவை மாற்ற அவர் எடுத்த முயற்சி முதலான விசுவாச சேவைக்காக ரஷிய ஏகாதிபத்திய வாதிகள் 1974-ம் ஆண்டு டாங்கேவுக்கு மிக உயர்ந்த லெனின் விருதை அளித்து கௌரவித்தனர். கம்யூனிச இயக்கத்தை பாராளுமன்ற பன்றித் தொழுவத்துக்குள் முடக்க அரும்பாடுபட்டவர் என்பதாலும், காந்திய - காங்கிரசு பாரம்பரியத்தில் ஊறியவர், பாசிச இந்திரா - ராஜீவ் கும்பலின் விசுவாசமான பாதந்தாங்கி என்பதாலும் அவர் மாண்டதும் அவரது உடல் முழு அரசு மரியாதையுடன் தகனம் செய்யப்பட்டுள்ளது.

ரஷிய ஆதரவு, பாசிச காங்கிரசுடன் நிரந்தர கூட்டு என்ற கொள்கையில் வலது கம்யூனிஸ்ட் கட்சியிடம் முரண்பட்டு விலகி டாங்கே - கல்யாணசுந்தரம் - மொகித்சென் கும்பல் நான்காண்டுகளுக்கு முன்பு ஐக்கிய பொதுவுடமைக் கட்சியை நிறுவியது. பாசிச ராஜீவ் கும்பலின் ஐந்தாம் படையாக, தொழிலாளர் இயக்கத்துக்குள் ஒரு சக்தியை உருவாக்க முயன்று கொண்டிருந்த வேளையில் டாங்கே மரணமடைந்து விட்டார். பாசிச எம்.ஜி.ஆரை வளர்த்துவிட்ட மறைந்த கல்யாணசுந்தரம், ஜெயலலிதாவின் காலை நக்கிக் கொண்டு ஓட்டுப் பிச்சைக்காக தவம் கிடந்த தா.பாண்டியன், காங்கிரசின் கூஜா மொகித்சென் போன்ற கழிசடைகளைத்தான் அவர் தனது அரசியல் வாரிசுகளாக விட்டுச் சென்றுள்ளார். பாசிஸ்டுகளுக்கும் அவர்களுடைய அடிவருடிகளுக்கும் அவரது மரணம் உண்மையில் பேரிழப்புதான். ஆனால் டாங்கேயை இந்திய கம்யூனிச இயக்கம் மறக்காது. அதன் வரலாற்றில் துரோகிகளின் வரிசையில் நிச்சயம் அவர் இடம்பெறுவார்!

● பாலன்



**போலிக் கம்யூனிஸ்டுகளின் உறுதியான ஆதரவின்றி பாசிசம் அதிகாரத்துக்கு வரமுடியாது என்று எச்சரித்தார் தோழர் டிமிட்ரோவ். அவரது கூற்றுக்கு இலக்கண சுத்தமாகத் திகழ்ந்த கம்யூனிசத் துரோகிதான் திருவாளர் டாங்கே.**

படிப்பகம்

www.padippakam.com

# தினப் புரட்சி

27.5.91

"சாதியக் கூட்டணிக்கு முற்போக்குச் சாயம்" என்று பாட்டாளி மக்கள் கட்சியின் தலைமையிலான மூன்றாவது அணி மீதான விமர்சனக் கட்டுரை ஒன்றை '91 மே 16 - 31 புதிய ஜனநாயகம் இதழில் எழுதியிருந்தோம். அதற்கு "புதிய ஜனநாயகத்தின் புலம்பல்" என்கிற தலைப்பில் அக்கட்சியின தலைவர் திரு. தீரனை ஆசிரியராகக் கொண்ட 'தினப் புரட்சி' நாளேடு (27.5.91) நாலு பத்திக்கு பதில் எழுதியுள்ளது. 'தினப்புரட்சி' நாளேடு பெரும்பாலும் வன்னிய சங்க வாசகர்களையே கொண்டது. பொதுவான வாசகர்களின் கவனத்துக்கு அதன் பதில் வந்திருக்க வாய்ப்பு குறைவு. ஆகவே அதன் பதிலை அப்படியே இங்கே வெளியிடுகிறோம்.

உண்மையில் நமது விமர்சனங்களுக்கு அதில் பதில் ஏதும் இல்லை என்பதாலும், இந்த மூன்றாவது அணியின் ஓட்டாண்டித்தனத்தை வாசகர்களே புரிந்து கொள்ள முடியும் என்பதாலும் நாம் மறு பதில் எழுதவில்லை. அதேபோல நம்மீது வைக்கப்படும் எதிர் "விமர்சனங்க"ளுக்கும் நாம் பதில் சொல்ல வேண்டியது அவசியமில்லை என்றே கருதுகிறோம்.

மணியரசன் போன்ற போலிக் கம்யூனிஸ்டுகள் மட்டுமல்ல, புலவர் கலியப் பெருமாள், பெருஞ்சித்திரனார் போன்ற தமிழறிஞர்களும், முன்னாள் புரட்சியாளர்களும், 'புதிய இடது'களும், பேராசிரியர்களும் இந்தக் கட்சியிடம்தான் "மண்ணின் தனிச்சிறப்பை"த் தேடிப் போனார்கள். அது எப்படி மணக்கிறது என்பதற்கு புதிய ஜனநாயகத்திற்கு இந்த மூன்றாவது அணி தந்துள்ள பதிலே போதுமானதாய் இருக்குமென நம்புகிறோம். வாசகர்கள் அவசியம் தங்கள் கருத்தை எழுதும்படி கோருகிறோம்.

# பாட்டாளி மக்கள் கட்சியின் ஓட்டாண்டித்தனம் பாரீர்!

## "புதிய ஜனநாயகத்தின்" புலம்பல்...!

புதிய ஜனநாயகம் எனும் ஒரு ஏடு தனது சைதாப் பேட்டை வம்பை நம்மோடும் தொடுத்திருக்கிறது! இது மாதிரியான ஏடுகளின் வாடிக்கையும் வரலாறும் நாம் அறிந்தது தான். நமது பாட்டாளி மக்கள் கட்சி மீது பனித்துளி கறைகூட படாத நிலையில், "முதலில் கடித்த பெருமை" தனக்குத்தான் இருக்க வேண்டும் - எனும் இந்த ஏட்டின் முனைப்பும் - வக்ரமும் நமக்கு தெள்ளத் தெளிய விளங்குகிறது.

ஏதா ஒரு சந்து பொந்தில் இருந்து கொண்டு - எந்த ஒன்றுக்கும் எதிரான கருத்து ஒன்றை வெளியிடுவதன் மூலம் தனது முலாம் பூசாத முற்போக்கு சிந்தனை - உலகை உலுக்க வேண்டும் என நினைப்பது இவர்கள் வழக்கம்.

நடைமுறை யதார்த்தத்திற்கோ சமுதாயத்தின் சரிநிகர் சந்திப்புக்கோ வர மறுக்கிற இவர்களின் - ஏட்டுப் புரட்சி நமக்கொன்றும் புதியதல்ல...

"சோ"வின் துக்ளக்கிற்கும் இவர்களுக்கும் துளியளவும் வேற்றுமை கிடையாது...

வார்த்தைகளும் - வசதிக் குறைவால் வெளிவருகின்ற சில படங்களில் மட்டுமே வேற்றுமை!

இவர்களது கட்டுரைக் கனலின் - தீப்பொறிகளுக்கு நமது பதில்களைத் தரவேண்டியது - இத்தேர்தல் சூழலிலும் நமது கடமையாகிறது...!

"டாக்டர் அய்யா" ராமதாசு என்பதில் உமக்கிருக்கிற கேலியை உணர முடியாத அளவுக்கு - நாங்களும் பழைய ஜனநாயகமல்ல...!

"ஐயா" எனும் மரியாதைச் சொல் - எந்த வகையில் இழிவானது என்பதை - நீர் அறிவதற்கு வழியில்லை என்பதை எடுப்பிலேயே அறிகிறோம்.

நல்ல வடிவங்கள் நாட்டில் உண்டாகும் போதெல்லாம் - அதற்காக இவர் மிகக் கடினமாக முயல்கிற போதெல்லாம் உம்மைப் போன்றவர்கள் எழுதுகோலிலே எதையாவது நிரப்பிக்கொண்டு - அவர்கள் முகத்தில் உதறிப்பார்க்கிற சிறுபிள்ளைத்தனம் மண் தோன்றிய காலம் தொட்டே முன் தோன்றியதே!!

"தாங்களும் செய்வதில்லை... மற்றவர்கள் செய்கைக்கும் களங்கம் கற்பிப்பது என்ன கொள்கை அது என்ன "இசம்" என்பது எங்கட்கு விளங்க வேண்டும்?

உமது குற்றச்சாட்டுகள் ஒன்று கட்டுரைக்காக கட்டுரைக்கப்பட்டவை. அல்லது இது ஒரு மனநோயின் எழுத்து வடிவ ஏற்பாடு. தனது சாதிய தோற்றத்தைப் பாட்டாளி மக்கள் கட்சி மறைக்க வேண்டிய அவசியத்தில் அது இல்லை...

அது உம்மைப் போன்ற கருணாநிதி ஏட்டில் - தினகரன் ஏட்டில் - "வன்னியர் கட்சி" - என பலமுறை வர்ணிக்கப்பட்டுள்ளது. மிகக் குறுகிய காலத்தில் - அது மக்களால் முறியடிக்கப்பட்டிருக்கிறது.

இந்த நூற்றாண்டின் எல்லையில் - உம்மைப் போன்ற - கட்டுரை வீரர்கள் - பேனா மலிவின் காரணமாக - அறையில் இருந்த படியே இப்படிக் காகிதக் கணைகள் விட்டுக் கொண்டிருக்கும்போது - "எங்கள் தலைவர்" தான் தமது சுய வருமானத்தில் பயணம் புறப்பட்டு கிராமம் கிராமமாக ஒவ்வொரு குடிசையின் உள்ளேயும் மனித நேயத்தோடு தம்மைப் பதிவு செய்து கொண்டவர்.

அதுவும் ஆரம்ப நாள்களில் உம்மை போன்றவர்களால் கேலி செய்யப்பட்டிருக்கிறது!

58 ஆண்டுகளாக நீங்கள் இருப்பதாக கூறும்

"ஒடுக்கப்பட்ட மக்களே!
ஒன்று சேருங்கள்!!" - எனும் முழக்கம் "பாட்டாளி"



படிப்பகம்

www.padippakam.com

...ாது மட்டும் எப்படி சமுதாய அரங்கில்
...து!

...ன்னபோது... புரியவில்லை...? ஆற்
...நூய்மையானவன் மனித நேயமுள்ள
...தொடர்ந்து அணுகிய புரட்சிப் பயணத்
...ம்பவங்களாகும்! இதுவே நாளை சரித்
...றும்!

...யாபாரம் நாங்கள் செய்கிறோம் எனச்
...டைத்த எவனும் சுத்தமான பால் விற்க
...ாலுக்குத் தன்னைத் தயார் படுத்திக்
...க வேண்டும் எனவும் நாங்கள் விரும்பு

... - லெனினிய எனும் புதிய பூச்சாண்
...ருப்பது இன்னும் 5,000 ஆண்டுகள்
... சென்றடையாது - என்பதை முதலில்.

...ிபற்றிய உமது பார்வை ஆராய்ச்சி
...வக்கு வராத சிதம்பர இரகசியமல்ல...!
...படி எந்த மனிதனின் சிந்தனையும் பரி
...தெளிவு - மனமாற்றம் அல்லது திருந்
...உட்பட்டதாக நம்பவில்லை போலிருக்

...லிஸ்டில் இடது - வலது எனும் பிரிவு
...ரி நபர் பிரிவுகள் இருக்கும் போது
...ிய லெனினிய'' - நீங்கள் தேடுகிறீர்
...பண்பட்ட ''பண்ருட்டியார்'' அவர்க
...

...ஜி.ஆர். தந்த பணத்தை முதன்முதலில்
...ளுக்கு அனுப்பி வைத்தவர்!''

...வின் மூலம் தான் பெற்ற புல்லட் புரூப்
...பாகரனுக்கு வழங்கியவர்''

...ரிடம் நீர் கேட்டறியலாம். இன்னும்
...டது உட்பட உமது பார்வைப் பழுதில்
...கியாகவே இருக்கட்டும்!'' பண்ருட்டி
...யர் என்பதை - ''புதிய ஜனநாயகம்''
... வேண்டியதில்லை.

...ரதான்... உமக்கு இவ்வளவு தாமதமா
...ப்படுகிறோம். எழுத்து நாகரிகம் பற்றி
...லை நக்கும்' கலை பற்றி பிரமாதமா
...ாழ்க அக்கலை!!

...ாகப் பேசப்படும் பழனிபாபாவை நீர்
...ாக - இனிமேல் மாற்ற வேண்டும்...

...ல் புரிந்து கொள்ள வேண்டும்... ''பண்
... நிர்வாகத் திறன் உமது முற்போக்கு
...லை...

...'' - அறிவு - சிறுபான்மை பாதிப்பின்
...வில்லை...

...இனத்தின் தாழ்வுக் கொடுமைகள் அவ
... சமூக பாதுகாப்பு உமக்குப் புரிய

...மாக, சாதிக் கலவரக்காரர்களாகவே

...தையும் - உமது ஏட்டுக்காகப் பயந்து

...கில் வாழ்ந்தாலும் - எங்களை வன்னி
... எப்போதும் விமர்சிப்பான் என
...இயக்கம் இது.
...யனே பாட்டாளி ஆகவும்,
...ாளியே வன்னியனாகவும் - இருக்கும்
...னை மையப்படுத்தியும் அவனைப்

போலவே அவன் சாயலில் தாழ்ந்து கிடக்கும் அவனை நம்பிக்கையோடு பின்பற்றும் எண்ணமும் கொண்ட - ஏழை எளியவர்களை கொண்டே இந்த இயக்கம் தெளிவாகி - வலிவாகி - மக்கள் மன்றத்தின் உயர்ந்த ஒப்புதலுக்கு ஆளாகி இருக்கிறது...

உம்மைப் போன்ற - 'பத்திரிக்கை முற்போக்கு' ஆய்வுக் கட்டுரைகளை நம்பி - இது அடியெடுத்து வைக்கவில்லை...

உங்கள் வரவேற்பில் அது வளரவும் இல்லை...!

''எங்களை வன்னியர் கட்சி'' - என வார்த்தைக்கு வார்த்தை எழுதும்போது உங்களுக்கு எல்லாம் வராத வருத்தம்... ''தவில் இனத்தலைவர்'' - எனக் குறிப்பிட்டது மட்டும் கொச்சையாகப்படுகிறது என்றால் ''அது தமிழின் தனித்த புதிய முறை'' என்பதை அறிய முடியாத உமது அறியாமைக்கு வருந்துகிறோம்!

''டாக்டர் அய்யா இனமானக் காவலர்'' எனும் பட்டங்கள் - அவரால் சூட்டிக் கொள்ளப்பட்டவை அல்ல சிறுவனே...

மடையர்கள் தான் அப்படி சூட்டிக் கொள்வார்கள்... அதற்கு அவசியமும் தேவையுமில்லை. அவரின் உண்மைத் தொண்டும் உழைப்பும் - நேர்மையும் கண்டு என்னைப் போன்ற தொண்டர்கள் இன்னும் ஒருபடி மேலே போய் இப்போது ''திண்டிவனப் பெரியார்'' என்றே கூட அழைக்கிறோம்...

தகுதியற்றவனை எல்லாம் தொண்டை கிழிய அழைத்த தமிழுலகில் ஒரு பாட்டாளி வர்க்கத் தலைவனை பாட்டாளி வர்க்க மக்கள் அழைப்பதில் உன்னைப்போன்ற ''மூஞ்சிகளுக்கு'' இவ்வளவு சுருக்கம் ஏன்?

எதற்கும் உமது உலகக் கொள்கையை முதலில் ''டெபாசிட் லாக்கரில்'' பூட்டி வை. மிச்சமுள்ளவற்றை நாங்கள் திருடி விடப் போகிறோம்!

புலவர் கலிய பெருமாள்,தனித் தமிழ்த் தலைவர் பெருஞ்சித்திரனாரைவிட நீங்களெல்லாம் அப்படியே பாட்டாளி வர்க்கத்துக்காக அணி அணியாக இரத்தம் சிந்தியவர்கள்... நீங்கள் எப்படி இவ்வளவு அதிமேதாவித்தனத்தோடு - எங்களை ஒப்புக் கொள்வீர்கள்?

ஆக ஒன்று மட்டும் தெரிகிறது... உங்களைப் போன்ற மனவக்ரம் பிடித்தவர்களுக்கெல்லாம் - படத்திலே பெரியாரோடு பேசிக் கொண்டிருக்கும் ''ஜெயலலிதா'' போன்ற புரட்சித் தலைவிகளே சரியானவர்கள்...!

தமிழினத் தலைவர் கருணாநிதி போன்றவர்களே உங்களை எல்லாம் நன்கு அறிந்தவர்கள்... உங்களையும் மதித்து உங்கள் உணர்வுகளை மதித்து பதில் கூற வேண்டும் என எண்ணுகிறோமே நாங்கள்தான் பைத்தியக்காரர்கள்!

கடுகு வெடித்தா சட்டி சிதறிவிடும்? சுண்ணாம்பு அடித்தா சுவர் சுருண்டு விழும்? உங்களுக்கும் சொல்லி வைக்கிறோம்... சாதிய கூட்டணியாகவே - நீங்களும் விளம்பரப் படுத்துங்கள்!! அதுபற்றி நாங்கள் மிரளவில்லை... மக்கள் உணர்வை - நாங்கள் மதிக்கிறோம்! மக்களோடு நாங்கள் இருக்கிறோம்... எங்களை பாட்டாளி வர்க்கம் இதய பூர்வமாக நம்புகிறது!

நம்பிக்கைக்குரிய சரியான தலைவனின் வழிகாட்டலில் சரியான பாதையிலேயே எங்கள் பயணம் தொடங்கி இருக்கிறது...

இதை சைதாப்பேட்டையில் இருந்து சங்கடப்படுத்தி விட முடியாது...! இது வாளுக்கு வாளும், தோளுக்கு தோளும் மோதிப் பார்த்தேனும் நீதி கொண்டுவர வேண்டும் என நிச்சய தன்மை கொண்ட நெறிமுறை இயக்கம்... இதை எந்த கட்டுரைப் பூச்சாண்டிக்காரனும் கலைத்துவிட முடியாது என்பதை மட்டும் இப்போதைக்குக் கூறி வைக்கின்றோம்!!

குறிப்பு: இவர்களுக்குப் போய் அதாவது இந்த பொழுது போக்கிகளுக்கு போய் - ஏன் இவ்வளவு விளக்கம் என என் நண்பர் கூறிய போதும் இதை ஏன் எழுதினோம்... இவர்களைப் போன்ற எல்லார்க்குமே இது முதலும் முடிவுமான விளக்கமாக விளங்கட்டும் என்றே...!

''பா

# போலீசின் அடாவடித்தனம்! தோழர்களின் துணிவு!

கடந்த 4.4.91 அன்று வி.வி.மு. தோழர் ஒருவர் சைக்கிளில் லைட் இல்லாமல் சென்றதால் போலீசு கும்பல், அதிராம்பட்டினம் போலீசு நிலையத்திற்கு அழைத்துச் சென்றது. போலீஸ் நிலையத்தில் எஸ்.ஐ. மருதமுத்து, சாதியைக் கேட்டு தோழர் மறுக்கவே ஏட்டு மற்றும் சில போலீசுடன் சேர்ந்து இரவு முழுவதும் தோழரை சித்திரவதை செய்தான். தோழர் மீது சைக்கிள் லைட் இல்லாத தற்குரிய வழக்குப் போடாமல் 75-வது பிரிவு வழக்குப் போட்டு பின் போலீசே சொந்த ஜாமீனில் தோழரை விடுவித்தது.

போலீசின் இந்த அராஜக நடவடிக்கையை கண்டித்து 18.4.91 அன்று பொதுக் கூட்டம் நடத்த அனுமதி கோரப்பட்டது. பட்டுக்கோட்டை டி.எஸ்.பி., பொதுக்கூட்டத்திற்கு அனுமதி கொடுத்துவிட்டு ஒலி பெருக்கிக்கு உரிய அனுமதியை அதிரைக்கு அனுப்பி வைப்பதாகக் கூறினார். மேலும், ''நீங்கள் பொதுக்கூட்டத்தை கைவிட்டால் சம்பந்தப்பட்ட அதிரை போலீசு அதிகாரியை சந்தித்து உரிய நடவடிக்கை எடுக்கிறேன்'' என்றார். அதற்கு தோழர்கள், ''கசாப்புக் கடைக்காரனிடம் ஆடு உயிர்ப் பிச்சைக் கேட்பதும், போலீசிடம் மக்கள் நீதி கேட்பதும் ஒன்று. எனவே பிரச்சனையை நாங்கள் மக்கள் மத்தியிலே கொண்டு செல்லத்தான் போகிறோம்'' என்று பதிலுரைத்தனர்.

18.4.91 அன்று பொதுக்கூட்டத்திற்கான ஒலிபெருக்கி ஏற்பாடுகள் செய்ததும் எஸ்.ஐ. கொல்லிமலை என்பவர் வந்து 'மைக் லைசன்சு' இல்லாமல் பொதுக்கூட்டம் நடத்தக்கூடாது என ஒலிபெருக்கியை அகற்ற முற்பட்டார். அதற்குள் பகுதி மக்கள் 100-க்கும் மேற்பட்டவர்கள் மேடையைச் சுற்றி கூடிவிடவே, தோழர்கள், போலீசின் அராஜகத்தை அம்பலப்படுத்தி பேசினர். போலீசு பின்னர் அடங்கிப்போய் ஒலிபெருக்கியை நீங்களே அகற்றி விடுங்கள் என்று கூறிவிட்டு சென்றது.

பின்னர் தோழர்கள் அண்ணாசிலை அருகே. தெருமுனைக் கூட்டம் போட்டு போலீசை அம்பலப்படுத்தி பேசியதை சுமார் 200 பேர் கூடி கேட்டு ஆதரவு தந்தனர். இப்பிரச்சாரத்தை முடித்துக் கொண்டு போலீசை அம்பலப்படுத்தி முழக்கமிட்டபடியே பொதுக்கூட்ட மேடையை வந்தடைந்தனர். தோழர் சந்திரசேகரன் தலைமையில் பொதுக்கூட்டம் நடத்தப்பட்டது. போலீசின் அடக்கு முறையையும் அவதூறையும் அம்பலப்படுத்தி பேசினார் தோழர் செல்வராசு. பகுதி மகளிர் சுமார் 500 பேர் கூடியிருந்து தோழர்களின் பேச்சைக் கேட்டனர்.

— தகவல்: வி.வி.மு., பட்டுக்கோட்டை.



படிப்பகம்

# சர்வகட்சி முழக்கம்:
# “பயங்கரவாத வன்முறைக்கு ஐக்கியப்படுவோம்!”

## — அரசியல் கட்சிகளும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தைப் பயன்படுத்துவதும்

*1985-89 எட்டாவது நாடாளுமன்றத்தில் ஓட்டுக் கட்சிகளின் நடத்தை குறித்து, டில்லி மக்கள் ஜனநாயக உரிமை சங்கத்தின் பிரசுரம் அம்பலப்படுத்துகிறது, அதன் மூன்றாவது பகுதி இங்கே தொடர்கிறது.*

பயங்கரவாத மற்றும் கலவர நடவடிக்கைகள் (தடுப்பு) சட்ட வழக்கில் ஜாமீன் பெறுவது உண்மையாக மிகவும் கடினமானது. குற்றஞ்சாட்டப் பட்டிருப்பவர் குற்றமிழைத்து இருக்கமாட்டார் என்று (அதுவும் விசாரணைக்கு முன்பாகவே) நம்புவதற்குப் போதுமான அடிப்படைகள் - தடயங்கள் இருப்பதாகவும் ஜாமீனில் இருக்கும் போது அவர் எந்தக் குற்றமும் செய்ய மாட்டார் என்பதாகவும் ஜாமீன் வழங்கும் நீதிபதிக்குத் திருப்தி ஏற்பட வேண்டும் [சரத்து 20 (8)]. நமது நாட்டில் மாவட்ட வழக்குமன்ற மட்டத்திலுள்ள செசன்சு நீதிபதிகள் போலீசு என்ன சிபாரிசு செய்கிறதோ அதையே ஏற்றுக் கொண்டு போகக் கூடியவர்கள். எனவே, ஜாமீன் பெறுவதே சாத்தியமில்லாமல் போகிறது.

இந்த வகையில் அரிதானதொரு சம்பவமாக இச்சட்டத்தின் இப்பிரிவையும் இன்னும் பிற பிரிவுகளையும் அரசியல் சட்டத்துக்கு மாறானவை என பஞ்சாப் - அரியானா உயர்நீதிமன்றம் தீர்ப்புக் கூறிவிட்டது. [சரத்து 16 (1), 20 (4) மற்றும் 20 (8)(b) பிமல் கவுர் கல்சாவுக்கும் இந்திய யூனியன் அரசுக்கும் இடையிலான வழக்கு, ஜனவரி 1988]. மத்திய அரசின் முன்முயற்சியின்படி, கொஞ்சமும் தாமதியாது மேற்படித் தீர்ப்புக்கு ஒரு இடைக்கால உத்திரவு போட்டு செயல்படாமல் நிறுத்தியது, உச்சநீதிமன்றம். ஆனால் அதன் பிறகு மேற்படி சட்டப்பிரிவுகள் அரசியல் சட்டப்படியானவை தானாவெனப் பரிசீலிக்க அதற்கு நேரம் கிடைக்கவில்லை!

இச்சட்டப்படியான வழக்கைப் பணியமர்த்தப்பட்ட எந்தவொரு வழக்கு மன்றத்தில் இருந்தும் நாட்டில் எங்குவேண்டுமானாலும் உள்ள இம்மாதிரியான எந்தவொரு வழக்கு மன்றத்துக்கும் மாற்றிவிட முடியும் [சரத்து 11(2)]. குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு எதிராக ஏற்கனவே நடந்துவரும் எந்தவொரு சாதாரண வழக்கையும் விட இச்சட்டப்படியான வழக்கு விசாரணை முன்னுரிமை பெறும் (சரத்து 17). அரசாங்கம் இந்த சரத்தைப் பயன்படுத்திக் கொண்டு தனக்கு சாதகமற்ற வழக்குகளின் விசாரணையைத் தடுத்து விடுகிறது. அதைச் செய்யும் முறை எளிதானது. நீங்கள் விரும்பும் யாருக்கு எதிராகவும் வழக்குப் பதிவு செய்து விடுங்கள். அவன் / அவளுக்கு எதிராக பயங்கரவாத மற்றும் கலவர நடவடிக்கைகள் (தடுப்பு) சட்டத்திலும் கூட சில வழக்குகள் பதிவு செய்து விடுங்கள். ஏதாவது தொலைதூரத்தில் உள்ள பணியமர்வு வழக்கு மன்றத்துக்கு இந்த வழக்குகளை மாற்றி விடுங்கள். அவன் / அவளுக்கு எதிரான பயங்கரவாத மற்றும் கலவர நடவடிக்கைகள் (தடுப்புச்) சட்ட வழக்கு முடியும் வரை வேறு சாதாரண வழக்குத் துவங்கிவிட முடியாது. இப்படித்தான் அவப்பெயர் பெற்ற இந்திராகாந்தி இரண்டாவது கொலை வழக்கில் சிம்ராஞ்ஜித் சிங்மான், அத்தீந்தர் பால்சிங், ஜக்மோகன் சிங், தாலீப் சிங் ஆகியோர் மீதான வழக்கு நடைபெறாமலேயே சிக்கிக் கொண்டதெனத் தெரிகிறது.

இச்சட்டத்தின் கீழ் விசாரணை இரகசியமானது. இச்சட்டப்படியான ராம்நகர் சதி வழக்கில் தெலுங்கு கவிஞர் வரவரராவ் (ஏ-14) ஜாமீனுக்கு விண்ணப்பித்தார். சாட்சியத்தின் ஒரு பகுதி இந்த ஏ-14 என்பவரது கையெழுத்திலேயே உள்ளதால் அவர் குற்றமிழைத்திருப்பவர் என சந்தேகிப்பதற்குத் தேவையான, போதுமான அடிப்படைகள் - தடயங்கள் இருக்கின்றன என்று நீதிபதியைத் திருப்திப்படுத்தி ஜாமீன் மனுவை அரசுத் தரப்பு எதிர்த்தது. பிறகு கண்டுபிடிக்கப் பட்டது - அந்தக் கையெழுத்து குற்றஞ்சாட்டப்பட்ட இன்னொருவரான ஏ-4 என்பவரது என்று குற்றப்பத்திரிக்கையின் மூலப்படி கூறுகிறது. ஆனால் வழக்கு மன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட குற்றப் பத்திரிக்கையின் புகைப்படப் பிரதியில் ஏ-4 என்பது ஏ-14 என்பதாக மோசடியாகத் திருத்தப்பட்டிருந்தது. வழக்கு விசாரணை இரகசியமாக இருப்பதால், உடந்தையாகச் செயல்படும் அரசு வக்கீல்களின் உதவியோடு இவ்வாறு போலீசே மோசடி செய்வதற்கான வாய்ப்புகள் பன்மடங்காகின்றன.

இம்மாதிரியான எல்லாத் தடைகளையும் தாண்டிய பிறகு இரகசிய விசாரணை தொடங்குகிறது. ஆனால் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு எதிரான சாட்சிகளின் பெயர்களையும் அடையாளங்களையும் குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கே தெரியாமல் இரகசியமாக வைத்துக்கொள்ள முடியும். வழக்கு மன்ற உத்திரவுகளில் சாட்சிகளின் பெயர்களைக் குறிப்பிடுவதைக் கூட தவிர்க்க முடியும் [சரத்து 16 (3)(b)]. பட்டவர்த்தனமாகச் சொல்வதென்றால் இதன் நேரான பொருளே, 'நீங்கள் ஆயுதங்களை எடுத்துச் சென்றதாக (X என்கிற) ஒருத்தர் கூறினார். இல்லையென்று நீங்கள் நிரூபியுங்கள்' என்று அரசுத் தரப்பில் கூறமுடியும் என்பதுதான்! ஏனெனில் சில நிலைமைகளில் குற்றஞ்சாட்டப்பட்டவரின் குற்றத்தை அரசு நிரூபிக்க வேண்டியதில்லை; குற்றஞ்சாட்டப்பட்டவர்தான் அவன் / அவள் குற்றத்தைச் செய்யவில்லை என்று நிரூபிக்க வேண்டும் (சரத்து 21).

இறுதியாக நீங்கள் தண்டிக்கப்பட்டால், 30 நாட்களுக்குள் உச்சநீதிமன்றத்துக்குத்தான் நீங்கள் மேல் முறையீடு செய்ய முடியும். [சரத்து 19(3)]. அதுசரி, ஒரு கிரிமினல் மேல் முறையீடு உச்சநீதிமன்றத்தில் சராசரி 8 முதல் 12 ஆண்டுகள் எடுத்துக் கொள்கி

## இப்படித்தான் செய்தார்கள் எம்.பி.க்கள்

**1985-89: மக்களவை.**
**மொத்தம் உறுப்பினர்கள்: 542.**

| சட்டங்கள் | விவாதம்: விவாத நேரம் | பங்கேற்ற எம்.பி.க்கள் | வருகை தந்த எம்.பி.க்கள் |
|---|---|---|---|
| பயங்கரவாத மற்றும் கலவர நடவடிக்கைகள் (தடுப்புச்) சட்டம் 1985 | 6 மணி | 34 | விவரமில்லை. |
| ” ” ” 1987 | 4 மணி | 18 | விவரமில்லை. |
| இந்தியத் தபால் தணிக்கைச் சட்டம் 1987 | 44 நிமிடம் | 4 | 20 |
| பயங்கரவாதப் பாதிப்புக்குள்ளான பகுதிகள் (சிறப்பு நீதி மன்றங்கள்) சட்டம் | 59 நிமிடம் | 9 | 70 |
| தேசியப் பாதுகாப்புச் சட்டம் | 82 நிமிடம் | 8 | 100 |
| தேசிய காவற்படைச் சட்டம் | 57 | 7 | 90 |
| சிறப்புப் பாதுகாப்புப் படை சட்டம் | 19 | 2 | 70 |
| அத்தியாவசியப் பணித்துறைச் சட்டம் | 3 மணி | 13 | 147 |

(குறிப்பு: பங்கேற்ற எம்.பி.க்கள் எண்ணிக்கையில் மசோதவை அறிமுகப்படுத்தியும் ஆதரித்தும் பேசிய மந்திரிகள் சேர்க்கப்படவில்லை. விவாதிக்கவும் நிறைவேற்றவும் எடுத்துக் கொண்ட மொத்த நேரமும் தரப்பட்டுள்ளது. முதலாவது, கடைசி சட்டங்கள் 2 நாட்களில் ஒதுக்கப்பட்ட நேரம். ஆதாரம்: மக்களவை விவாதங்கள்.)

www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

றது என்பது வேறு விசயம். நீங்கள் வட - கிழக்கில் அருணாச்சலப் பிரதேச எல்லைப்புற கிராமத்தைச் சேர்ந்தவரோ; அல்லது தண்டகாரணியப் பிரதேசத்தின் உள்ளடர்ந்த காடுகளில் வாழும் ஆதிவாசியோ; அல்லது லடாக்கின் பனிமூடிய பள்ளத்தாக்கைச் சேர்ந்த ஒரு புத்தமதத்தவரோ, அல்லது டில்லியைச் சேர்ந்த ஒரு சாமானிய ஏழையோ, யாரானாலும் பயங்கரவாத மற்றும் கலவர நடவடிக்கைகள் (தடுப்புச்) சட்டத்தின் கீழ் ஒரு மாதத்துக்குள் உச்சநீதிமன்றத்தின் ஒரு வக்கீலை வைத்துக் கொள்வதற்கான பணவசதியை நீங்கள் தேடிக் கொள்ளும்படி எதிர்பார்க்கப் படுகிறீர்கள். இல்லையென்றால் உங்கள தண்டனை உறுதிப்படுத்தப்படும். அவவளவுதான், விவகாரம் முடிந்துவிடும். சட்டத்தின் ஆட்சிக்குத் தேவையானது இதுதான்!

பஞ்சாப் பயங்கரவாதம் என்கிற பெயரில் இவ்வளவு பரந்து விரிந்த தடைகளுடன் நிறைவேற்றப்பட்ட பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தின் சரக்கு இதுதான். பஞ்சாப் பயங்கரவாத வன்முறை சம்பந்தப்பட்ட வழக்குகளில் குற்றஞ்சாட்டப்பட்ட பெரும் அளவிலான மக்கள் இச்சட்டத்தின் கீழ் குற்றஞ்சாட்டப்பட்டார்கள். இந்த வகையின் கீழ் சுமார் 9,000 பேர் வருகிறார்கள். அவர்களில் பலர் பொய்யாகவும் குற்றஞ்சாட்டப்பட்டிருக்க



லாம். எவவாறாயினும சா; உருவாககபட்ட கருத்து மாறுபட்டதாக இருப்பினும்; பஞ்சாப் பயங்கரவாதிகளுக்கு எதிராக உண்மையில் இச்சட்டத்தை அரசாங்கம் பயன்படுத்தவில்லை. 1986 டிசம்பரில் இச்சட்டம் அமுலுக்கு வந்தது; அதுவரை இதைச் செயல்படுத்துவதற்கான விதிமுறைகள் வகுக்கப்படவில்லை. இந்திரா காந்தி கொலை மற்றும் ராஜீவ்காந்தியைச் சுடுவதற்கான முயற்சி ஆகிய மிகவும் பிரபலமான இரு வழக்குகளின் விசாரணைகளும் எவ்வாறு நடத்தப்படுகின்றன என்பதைக் கூட நினைவு கூர்ந்து பார்ப்போம்.

மேலும் இச்சட்டம் வேறு எங்கு வேண்டுமானாலும் வேறு யாருக்கும் எதிராகப் பயன்படுத்தப்படுகிறது. குற்றஞ்சாட்டப்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் இந்த வகையினர்தான். சில வழக்குகளில் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் விடுதலை செய்யப்பட்டார்கள். சில விவகாரங்களில் வழக்குகள் விலக்கிக் கொள்ளப்பட்டன.

நாடாளுமன்றத்தில் இச்சட்டத்துக்கு எதிராக வோட்டளித்தது ''இடது'' சாரி கூட்டணி; ஆனால் அதற்குச் சரியாக ஒரு மாதத்துக்குப்பிறகு, 1987 ஜூன் 27-ந் தேதி டார்ஜிலிங்கில் இச்சட்டத்தையே மேற்குவங்க 'இடது''சாரி கூட்டணி அரசு அமுலுக்கு கொண்டு வந்தது. 1987 ஆகஸ்டில் இச்சட்டம் தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டது; ஆனால் 1987 டிசம்பரில் மீண்டும் அமுலுக்குக் கொண்டு வந்தது; ஆனால் 1988 மே-யில் மீண்டும் தற்காலிகமாக நிறுத்தி வைத்தது. சமீபத்தில் அசாமின் சில பகுதிகளிலும் லடாக்கிலும் இருந்து கூட இச்சட்டம் விலக்கிக் கொள்ளப்பட்டிருக்கிறது. இருப்பினும் இச்சட்டத்தை விலக்கிக் கொள்வது என்பது இதன்படியான வழக்குகளை விலக்கிக் கொள்வது என்று பொருள்பட அவசியமில்லை [சரத்து 1(4)]. ஒட்டுமொத்தமாக 20 மாநிலங்களிலும், 2 யூனியன் பிரதேசங்களிலும் உள்ள அரசாங்கங்களுக்கு இச்சட்டம் பயனுடையதாக மாறியது. இச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்கள் சார்ந்துள்ள அமைப்புகளின் பட்டியல் இச்சட்டம் எவ்வளவு விரிவானது, எவற்றை உள்ளடக்கக் கூடியது என்பதைக் காட்டுகிறது.

பயங்கரவாத மற்றும் கலவர நடவடிக்கைகள் (தடுப்புச்) சட்டத்தில் குற்றஞ்சாட்டப்பட்டவர்களின் தன்மை, நடைமுறை அரசியல் பற்றி மாறுபட்ட கருத்துக்கள் இருக்க முடியும். ஆனால் இச்சட்டத்தின் இயல்பு - தன்மை பற்றியே இரண்டு கருத்துக்கள் இப்போது இருக்க முடியாது. இச்சட்டம் போலீசு நிலையச் சித்திரவதைகளை சட்டபூர்வமாக்குகிறது; வழக்கு மன்றங்களின் ஒரு புதிய கட்டுமானத்தையே உருவாக்குகிறது; நாமறிந்த சட்டம் மற்றும் நீதி பற்றி நாமறிந்த எல்லா நெறிமுறைகளையும் மறுதலித்து விடுகிறது. மற்றவகையில் ஒருவருக்கொருவர் சண்டைபிடித்துக் கொள்ளும்

## பயங்கரவாத மற்றும் கலவர நடவடிக்கைகள் (தடுப்புச்) சட்டத்தினால் பாதிக்கப்பட்ட அமைப்புகள்

*(அடைப்புக்குள் உள்ளவை முறையே ஆளும் கட்சிகள்)*

**ஆந்திரப்பிரதேசம் (தெலுங்கு தேசம்)**

ஆந்திரப்பிரதேச சிவில் உரிமைக் கமிட்டி, ஆந்திரப்பிரதேச முற்போக்கு மாணவர் சங்கம், ஆந்திரப்பிரதேச முற்போக்கு இளைஞர் அணி, -ஆந்திரப்பிரதேசப் புரட்சிகர எழுத்தாளர் சங்கம், இந்தியப் பொதுவுடமைக் கட்சி (மார்க்சிஸ்ட் - லெனினிஸ்ட்) யின் பல்வேறு குழுககள், இந்திரா காங்கிரசு, இந்தியத் தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு.

**அசாம் (அசாம் கன பரிசத்)**

அனைத்துப் போடோ மாணவர் சங்கம், அனைத்து கர்சார் - கரீம்கஞ்ச் மாணவர் சங்கம், அனைத்து கௌகத்தி மாணவர் சங்கம்.

**டெல்லி (இ.காங்கிரசு)**

டெல்லி குருத்துவாரா பிரபந்தக் கமிட்டி, அகாலி தளத்தின் பல்வேறு குழுக்கள்.

**குஜராத் (இ.காங்கிரசு)**

விம்ல் ஆலைகள் சங்கம்

**அரியானா (லோக்தளம் - பா.ஜ.க. கூட்டணி)**

இந்திரா காங்கிரசு.

**ஜம்மு - காஷ்மீர் (தேசிய மாநாட்டு கட்சி - இ.காங்கிரசு கூட்டணி)**

லடாக் கமிட்டி, லடாக் பௌத்த சங்கம், காஷ்மீர் விடுதலை முன்னணி, முஸ்லீம் ஐக்கிய முன்னணி.

**கர்நாடகா (ஜனதாக் கட்சி, இ.காங்கிரசு)**

இ.பொ.க. (மா-லெ), கர்நாடகா சிவில் உரிமைக் கமிட்டி, முற்போக்கு இளைஞர் மையம்.

**மத்தியப்பிரதேசம் (இ.காங்கிரசு)**

ஆதிவாசி விவசாயி - தொழிலாளி சங்கம், இ.பொ.க (மா-லெ).

**மகாராஷ்டிரம் (இ.காங்கிரசு)**

ஆதிவாசி விவசாயி தொழிலாளி சங்கம், ஜனநாயக உரிமைகள் பாதுகாப்புக் கமிட்டி, இ.பொ.க. (மா-லெ), இ.காங்கிரசு, காலிஸ்தானி கமாண்டோ படை.

**பஞ்சாப் (இ.காங்கிரசு, அகாலி தளம் - லோங்கோவால்)**

அகாலி தளத்தின் பல்வேறு குழுக்கள், அனைத்திந்திய சீக்கிய மாணவர் கூட்டமைப்பு, பாபர் கல்சா, காலிஸ்தான் ஆயுதப் படை, காலிஸ்தான் கமாண்டோ படை, காலிஸ்தான் விடுதலைப் படை, காலிஸ்தான் விடுதலை அமைப்பு, சிரோமணி குருதுவாரா பிரபந்தக் கமிட்டி.

**மேற்குவங்கம் ('இடது' சாரி கூட்டணி)**

கூர்க்கா தேசிய விடுதலை முன்னணி.

(குறிப்பு: இந்த அமைப்புகளின் சில உறுப்பினர்கள் நிரபராதிகள் என விடுவிக்கப் பட்டனர் அல்லது அவர்களுக்கெதிரான வழககுகள் விலக்கிக் கொள்ளப்பட்டன. இங்கே தரப்பட்டுள்ள அமைப்புகளின் பட்டியல் முழுமையானதல்ல).

*குற்றஞ் சாட்டப்பட்டவர் குற்றம் புரிந்தார் என அரசுத் தரப்பு நிரூபிக்க வேண்டியதில்லை. பிரிவு 3, உட்பிரிவு (1) கீழ் குற்றஞ் சாட்டப்பட்டவர் தான் ஒரு நிரபராதி என்று நிரூபிக்கவில்லையானால், அப்போது அவர் குற்றம் புரிந்தார் என பணி நியமன வழக்கு மன்றம் முடிவு செய்து கொள்ளும்.* — சரத்து 21

பயங்கரவாத மற்றும் நடவடிக்கைகள் (தடுப்புச்) சட்டம் 1987

குற்றத்தை நிரூபிக்க நேரடி சாட்சியம் கேட்கிறீர்கள் அது முட்டாள்தனம் - சாட்சிகள் எதற்காக? நிரபராதிகள் என நிரூபித்துக் கொள்வதற்கோ கிரிமினல்களுக்கோ சாட்சியங்கள் ஏராளம் - ஆனால் நிரபராதிகளுக்கோ அநேகமாக சாட்சியம் ஏதுமில்லை.

— *பெர்டோல்டு பிரெக்கு (ஜெர்மானியக் கவிஞன்)*



படிப்பகம்

www.padippakam.com




## இந்து வெறியர்களுக்கு ஆதரவாக
# கேடயத்தின் புதுப் புளுகு

இந்திரா காங்கிரசின் தேர்தல் விளம்பரத்துக்குப் பதில் சொல்லப் புறப் பட்ட கேடயம் இந்துமதவெறியர்களுக்குத் துணைபோவதாக முடிந்துள்ளது. '91 மே 16-31 கேடயம் இதழ் பின்வருமாறு படம் போட்டு எழுதியுள்ளது.

அயோத்தியில் ''பிரச்சினைகுள்ளான பகுதியை இந்து - முஸ்லிம் மத ஒற்றுமை யின் தேசியச் சின்னமாக்குவது'' என்ற தனது சந்தர்ப்பவாத நிலைப்பாட்டிற்கு ஏற்ப கேடயம் உண்மையைத் திரித்துப் புரட்டியுள் ளதை இது தானே அம்பலப்படுத்தி விடுகி றது. இதன்படி ''அந்த வளாகத்துக்குள்'' பாபர் மசூதியைத் தவிர தனியே ஏதோ ராமன் கோயில் இருப்பதைப் போலவும் பாபர் மசூதியின் பூட்டை முஸ்லீம்களுக்குத் திறந்து இந்துக்களுக்கு மட்டும் வழிபாட்டு உரிமை கொடுத்ததாகவும் புளுகுகிறது கேட யம்.

அங்கே உள்ளதெல்லாம் பாபரி மசூதி ஒன்றுதான். அதற்குள்ளாகத்தான் 1949-இல் கள்ளத்தனமாக ராமன் சிலையை வைத்துவிட்டு, அது தானே தோன்றியதாக வும், அந்த மசூதி இருக்கும் இடம் தான் ராமன் பிறந்த இடம் என்றும், அந்த இடத் தில் தான் முன்பு ராமனுக்கு கோவில் இருந்த தாகவும், அக்கோவிலின் ''கர்ப்பகிரகம்'' இப்போது மசூதி உள்ள இடத்தில்தான் இருந்ததாகவும், பாபர் அதை இடித்த இடத் திலேயே தான் பாபரி மசூதியைக் கட்டி னான் என்றுதான் இந்து மதவெறியர்கள் உரிமை பாராட்டுகிறார்கள். இப்போது பாபர் மசூதி உள்ள குறிப்பான இடத்தின் மீதுதான் எப்போதும் இந்து மதவெறியர்கள் உரிமை பாராட்டுகிறார்களே தவிர ராமர் கோயில் என்று எதுவும் அந்த வளாகத்தில் எப்போதும் கிடையாது; இல்லாத அந்தக் கோயிலை யாரும் பூட்டவும் இல்லை; திறக் கவும் இல்லை. பாபர் மசூதிக்குள் கள்ளத்த னமாக வைக்கப்பட்டுள்ள ராமன் சிலையை இந்துக்கள் வழிபடுவதற்காக பாபர் மசூதி யைத்தான் 1986இல் இந்திரா காங்கிரசு அரசு திறந்துவிட்டது.

பாபரி மசூதியின் சுற்றுச் சுவரை ஒட்டி உட்புறமாக 'சாபுத்ரா பீடம்' எனப்படும் ஒரு வழிபாட்டு பஜனை மேடை பாபரி மசூதி யில் இருந்து 150 அடி தொலைவில் உள் ளது. அதுவும் ராம ஜென்மபூமி உரிமை கோரி காலனிய காலத்தில் இருந்து மதவெ றியர்களால் நிறுவப்பட்டதுதான். அங்கு வழிபாட்டு - பஜனை நடத்துவதை யாரும் தடுக்கவும் இல்லை, பூட்டவும் இல்லை, திறக்கவும் இல்லை. இந்த 'சாபுத்ரா பீடத் தை'க் காட்டித்தான் 'அந்த வளாகத்தில்' 'பிரச்சனைக்குள்ளான பகுதி'யில் இந்துக்க ளுக்கும் வழிபாட்டு உரிமை உண்டென இவ்வளவு காலமும் கேடயம் வாதாடி வந் தது. இப்போது, 'அந்த வளாக'த்தில் பூட்டி வைக்கப்பட்ட ராமன் கோவில் என்று ஏதோ தனியாக இருந்ததைப்போல் புளுகுகிறது. அவ்வாறின்றி கள்ளத்தனமாக வைக்கப் பட்ட ராமன் சிலையை வழிபடத் திறந்து விட்டதைத்தான் கேடயம் மேற்கண்டவாறு குறிப்பிடுகிறது என்றால், பாபரி மசூதி யையே ராமன் கோவில் என்று இந்து வெறி யர்கள் உரிமை கொண்டாடுவதை ஏற்பதாகி றது.

அடுத்து 1986 வரை ''நீண்ட காலமா கப் பிரச்சினையில்லாமல் இருந்தது'' என் பது இன்னுமொரு பொய். கள்ளத்தனமாக ராமன் சிலை வைக்கப்பட்ட 1949இல் பாபரி மசூதியைப் பூட்டி முஸ்லீம்களுக்கு வழிப டும் உரிமை மறுக்கப்பட்டு வந்தது; அதையே இந்துக்களுக்கு வழிபட 1986இல் திறந்து விட்டதன் மூலம் ஆர்.எஸ்.எஸ், விசுவ இந்து பரிசத் போன்ற அமைப்புகளு டன் சேர்ந்து மீண்டும், மேலும் மதவெறி யைக் கிளறிவிட்டது இ.காங்கிரசு என்பது தான் உண்மை!

---

எல்லா பெரிய அரசியல் கட்சிகளையும் ஒற் றுமைப்படுத்தும் வகையிலான ஏராளமான அதிகாரத்தை இச்சட்டம் வழங்குகிறது.

எட்டாவது நாடாளுமன்றத்தால் நிறை வேற்றப்பட்ட ஒடுக்குமுறைச் சட்டங்களைப் பொருத்தவரை ஆளும்கட்சிக்கும் எதிர்த் தரப்புக்கும் இடையிலான வித்தியாசம் முழு மையாகக் கலங்கி போய் விடுகிறது. உதார ணமாக பயங்கரவாத மற்றும் கலவர நடவ டிக்கைகள் (தடுப்புச்) சட்டத்தை நிறைவேற் றிய அமைச்சரவையில் இரண்டாவது இடத் தில் இருந்தவர் விசுவநாத் பிரதாப் சிங். இச் சட்டத்தை அப்போதைய சட்ட அமைச்சர் அசோக் சென் அறிமுகப்படுத்தினார். அத்தி யாவசியப் பணித்துறைச் சட்டத்தையும் பயங்கரவாதப் பாதிப்புக்குள்ளான பகுதி கள் (சிறப்பு வழக்கு மன்றங்கள்) சட்டங் களை நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்தி யவர் அரிஃப் முகமதுகான். இவர்கள் மூவ ருமே இப்போது எதிர்த்தரப்பில் இருக்கின்ற னர். குறைந்தது நான்கு சட்டங்களாவது ஒரு மனதாக நிறைவேறின. எல்லா விவகாரங்க ளிலுமே எந்த விவாதமும் நடக்கவில்லை. பயங்கரவாத மற்றும் கலவர நடவடிக்கை கள் (தடுப்புச்) சட்டம் நீட்டிக்கப்பட்ட போது சில கட்சிகள் எதிர்த்தன. ஆனால் கடைசியாகப் பார்த்தால், இந்திரா காங்கிரசு, ஜனதாக்கட்சி, இப்போதைய ஜனதா தளத் தின் அங்கமாகிவிட்ட லோக்தளம், பாரதீய ஜனதா கட்சி, சி.பி.ஐ. சி.பி.ஐ. (எம்) ஆகி யவை உட்பட ''இடது'' சாரி கட்சிகள், தெலுங்கு தேசம், அகாலி தளம் (லோங்கோ வால்), அசாம் கன பரிசத், தேசிய மாநாட் டுக் கட்சி உட்பட பிராந்தியக் கட்சிகள் ஆகிய எல்லாக் கட்சிகளுமே இச்சட்டத் தைப் பயன்படுத்திக் கொண்டன.

இப்படித்தான் நம் மத்தியிலான எதிர் காலம் வருகிறது. ஒரு அனாமதேய சிவில் அதிகாரவர்க்கக் கூட்டம் நகல் சட்டத்தை வடிக்கிறது. அலட்சியம் - அசிரத்தையோ டும் சோம்பேறித்தனத்தோடும் அதை நாடா ளுமன்றம் நிறைவேற்றுகிறது. அதிகாரத்தி லுள்ள அரசியல் கட்சிகள் அதை வளைத் தும் போட்டுக் கொள்கின்றன. போலீசி லுள்ள ஆயுத மேந்திய அதிகார வர்க்கத்தி னர் இச்சட்டத்தை அமுலாக்குகின்றனர். பொதுமக்கள் மனதில் திட்டமிட்டு உருவாக் கப்பட்டு வளர்க்கப்பட்ட கருத்துக்களால் அவர்கள் மழுங்கடிக்கப்படுகின்றனர். அதோடு ஒரு புதிய, முழுமையான, சட்டப் படியான, கிரிமினல் தண்டனை முறையு டைய, அரசியல் கட்டமைவு வந்து தங்கிவி டுகிறது. அது மூச்சு விடுவதைப் போல சுலப மாக இயல்பாகவே வந்துவிடுகிறது. சுயாதி பத்தியமுடைய, சோசலிச, மதச்சார்பற்ற ஜனநாயகக் குடியரசு உண்மையாகவே ஆபத்தில் சிக்கிக் கொண்டது. ●

இருள் சூழ்கையில் எதிர்ப்பின்றிப்
பணிந்து போகாதே
எழுக, எழுக, எழுக
ஒளிமங்குவதற்கெதிராக

— தைலான் தாமஸ்



படிப்பகம்

www.padippakam.com



# அவலத்தின் நடுவே அமெரிக்க ஆதிக்கம்

ஏழை நாடு என்றால் 'உதவி' என்ற பெயரில் ஆதிக்கம் செய்யலாம் என்பது ஏகாதிபத்தியஙகளின் அரிச்சுவடி. அதிலும் கொடும்புயலில் சிக்கி லட்சக்கணக்கான மக்களை இழந்து தவிக்கும் சின்னஞ்சிறு நாடான வங்கதேசத்தை, இந்நெருக்கடியான நேரத்தைப் பயன்படுத்திக் கொண்டு பணிய வைத்து விட முயற்சிக்கிறது அமெரிக்க ஏகாதிபத்தியம். ஆனால் அதன் ஆதிக்க நோக்கங்களுக்கு எதிராக வங்க தேச மக்கள் துயரத்தின் நடுவேயும் போர்க் குணத்துடன் கிளர்ந்தெழுந்து நிற்கிறார்கள்.

கடந்த மே மாத துவக்கத்தில் வங்க தேசத்தில் வீசிய சூறாவளி - பெரும் புயலால் அந்நாடே இடுகாடாகியது. ஏறத்தாழ பத்து லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் இக் கோரப் புயலில் உயிரிழந்தனர். 50 லட்சம் மக்கள் வீடிழந்து தவிக்கின்றனர். இளஞ்சிறுவர்களும் குழந்தைகளும் மட்டும் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்டோர் பலியாகினர். வங்க தேசத்தின் 180 கி.மீ நீளமுள்ள கடற்கரை எங்கும் பிணங்களாகக் குவிந்தது.

வழக்கமாக தாக்கும் புயலை விட 12 மடங்கு அதிகமான சீற்றத்தோடு வீசிய இப் பெரும் புயலில் 16 மாவட்டங்களும், கணக்கற்ற சிறிய தீவுகளும் நீரில் மூழ்கின. மீட்புப் பணிகள் தாமதத்தாலும், நிவாரண உதவி இல்லாததாலும் புயலுக்குப் பின்னரும் கொத்துக் கொத்தாக மக்கள் பலியாகினர். பசியாலும் சுத்தமான குடிநீர் இன்மையாலும், வெள்ள நீரையே குடித்து காலரா நோய் கண்டு ஆயிரக்கணக்கான மக்கள் மாண்டனர். இது தவிர வாரக்கணக்கில் பிணங்களை அப்புறப்படுத்தாததால் அவை அழுகி, அதனால் கொள்ளை நோய் பரவி மேலும் பலர் மெல்ல மெல்ல செத்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஒரு வேட்பாளரின் தேர்தல் வெற்றிக்காக 25 லட்சம் ரூபாய் வரை செலவு செய்து ஆட்சிக்கு வந்த கலீடாவின் அரசு, சொந்த நாட்டு மக்கள் புயலிலும் வெள்ளத்திலும் சிக்கித் தவித்தபோது உரிய மீட்புப் பணிகள் எதையும் செய்யவில்லை. எதிர்பாராத இயற்கை சீற்றம் என்று ஒப்பாரி வைத்ததே தவிர நிவாரண உதவிகளைச் செய்து மக்களைக் காக்க முன் வரவில்லை. புயல் அபாயத்தைப் பற்றி அறிந்த பிறகும் கூட அப்பகுதி மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்ற அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. போதிய வாகனமும் பொருளாதார வசதியுமில்லை என்று புறக்கணித்து விட்டது. புயலில் சிக்கி வங்க தேச மக்கள் தத்தளித்தபோது நிவாரண வேலைகளுக்கு எந்த அமைச்சகம் பொறுப்பேற்பது என்பதில் எழுந்த கருத்து வேறுபாடுகள் காரணமாக மீட்புப் பணிகள் மிகத் தாமதமாகவே நடந்தன. பட்டினியால் தவிக்கும் மக்கள் தங்களை அடித்தே கொன்று விடுவார்கள் என்று அஞ்சிய அதிகாரிகளும் ராணுவத் தளபதிகளும் ஹெலிகாப்டர்களை கீழிறக்காமலேயே ஒன்றிரண்டு உணவுப் பொட்டலங்களை வீசி எறிந்து விட்டு நிவாரண உதவிகளைச் செய்து விட்டதாக மாய்மாலம் செய்தனர். ஆத்திரமடைந்த மக்கள் சிட்டகாங்கிலுள்ள உணவுக் கிடங்கையே சூறையாடினர்.

வங்க தேசத்தைத் தாக்கிய கோரமான புயலால் உலகமே அதிர்ச்சிக்குள்ளான வேளையில் மனிதாபிமானம், நாகரீகம் பற்றி கதைக்கும் மேலைநாடுகள் எதுவும் உடனடியாக வங்கதேசத்து மக்களுக்கு உதவ முன்வரவில்லை. புயல் ஓய்ந்த ஒரு வாரத்திற்குப் பின்னரே அற்ப உதவிகளைச் செய்ய முன்வந்தன. அவற்றையும் கூட ''கேர்'' முதலான ஏகாதிபத்திய தன்னார்வ சேவை நிறுவனங்கள் மூலமாகச் செய்தனவே தவிர, வங்க தேச அரசின் மூலமாகச் செய்யவில்லை. இதன் மூலம் வங்கதேச அரசியலில் தமது செல்வாக்கையும் ஆதிக்கத்தையும் நிறுவுவதிலேயே அவை குறியாக இருந்தன. 1988-ல் புயல் தாக்கியபோது நீண்ட கால நோக்கில் புயல் பாதுகாப்புக்கான திட்டத்திற்கு முன்னாள் அதிபர் எர்ஷாத் உதவக் கோரியபோது உலக வங்கி அதைத் தட்டிக் கழித்தது. ஆனால் அதே உலக வங்கியும் ஏகாதிபத்தியங்களும் இப்போது வங்கதேசத்துக்கு அவசரகால கடனாக 300 கோடி ரூபாயைக் கொடுத்து மீள முடியாத கடன் சுமையில் அந்நாட்டை சிக்க வைத்துள்ளன.

போதாக்குறைக்கு மீட்புப் பணிகளுக்கு உதவுவது என்ற பெயரில் அமெரிக்கா தனது கடற்படையை வங்க தேசத்தில் கொண்டு வந்து நிறுத்தியுள்ளது. 2 பெரிய கப்பல்களில் 8000 பேரைக் கொண்ட அமெரிக்க கடற்படையும், 27 ஹெலிகாப்டர்களும், இது தவிர 6 சிறிய கப்பல்களில் நிவாரணப் பொருட்கள் என்ற பெயரில் ஆயுதங்களுடன் அமெரிக்க ராணுவம் அத்துமீறி அழையா விருந்தாளியாக சிட்டகாங் துறைமுகத்தில் குவிந்துள்ளது. ''250 பேர்கள்தான் நிவாரணப் பணியில் ஈடுபடுவார்கள். மற்றவர்கள் தாய்க் கப்பலிலேயே இருப்பார்கள். கப்பலில் ஆயுதங்கள் ஏதுமில்லை. இன்னும் சில வாரங்களில் நாங்கள் திரும்பி விடுவோம்'' என்று தனது செயலை நியாயப் படுத்துகிறது அமெரிக்கா.

ஆனால் வங்கதேசத்தின் சிட்டகாங் துறைமுகத்தின் அருகிலுள்ள செயின்ட் மார்டின் தீவில் தளம் அமைக்க அமெரிக்கா பல முறை முயற்சித்து வந்துள்ளது. வங்கதேச ஆட்சியாளர்கள், மக்களின் எதிர்ப்புணர்வு காரணமாக இதற்கு மறுத்தே வந்துள்ளனர். எனவே இப்போதைய நெருக்கடியான சூழ்நிலையைப் பயன்படுத்திக் கொண்டு மீண்டும் ராணுவ தளம் அமைக்கும் நோக்கத்துடனேயே இப்போது அமெரிக்கா வங்கதேசத்தை முற்றுகையிட்டுள்ளது. தெற்காசியாவில் பிலிப்பைன்சிலும், டிகோகார்சியா தீவிலும் ராணுவத் தளங்களை அமைத்துக் கொண்டுள்ள அமெரிக்காவுக்கு இலங்கையின் திரிகோணமலை தளத்தை அடுத்து



படிப்பகம்

www.padippakam.com

வங்க தேசத்திலும் ராணுவத் தளம் அமைப்பது அதன் யுத்த தந்திர நோக்கங்களுக்கு மிக அவசியமாக உள்ளது.

இருப்பினும், வங்கதேச மக்கள் தமது சுயாதிபத்திய உரிமைகளை அடகு வைத்து அமெரிக்காவின் நோக்கங்களுக்குப் பணிந்து போக ஒருக்காலும் தயாராக இல்லை. ''வங்க தேசத்துக்கு உதவியும் நிவாரணமும் தான் தேவை. அன்னியப் படைகள் அல்ல. அமெரிக்கப் படைகளை உடனே வெளியேற்று!'' என்று தலைநகர் டாக்காவில் ஆயிரக்கணக்கான மாணவர்களும், எதிர்க்கட்சியினரும் ஆர்ப்பாட்டங்களை நடத்தி வருகின்றனர். ''எமது சுதந்திரத்தையும் சுயாதிபத்தியத்தையும் ஒருக்காலும் விட்டுக் கொடுக்கமாட்டோம்'' என்று வங்கதேச முன்னாள் சுதந்திரப் போராட்ட இயக்கத்தினரும் உழைக்கும் மக்களும் பல்வேறு இடங்களில் ஆர்ப்பாட்டங்களை நடத்தி அமெரிக்க கொடிகள்ளை எரித்துள்ளனர்.

பெருகி வரும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களைக் கண்டு அஞ்சிய அமெரிக்காவும் வங்கதேச ஆளும் கும்பலும், அமெரிக்க கடற்படையின் 'நிவாரண சேவை'க்கு சட்டபூர்வ உரிமை அளிக்க ஒப்பந்தம் போடவும் முடிவு செய்துள்ளன. வங்கதேசத்தை ஆளும் ஏகாதிபத்திய அடிவருடிகள் நாளை அமெரிக்கா ராணுவதளம் அமைக்க வெட்கமின்றி ஒப்புக் கொண்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஆனால் உலகின் மிக ஏழை நாடுகளில் ஒன்றான வங்கதேசத்தின் உழைக்கும் மக்கள் அமெரிக்காவின் ஆதிக்க நோக்கங்களுக்கு அடிபணிந்து விடமாட்டார்கள் என்பதையே அவர்களது போர்க்குணமிக்க அமெரிக்க எதிர்ப்பு போராட்டங்கள் காட்டுகின்றன. ஏகாதிபத்திய எதிர்ப்புணர்வு கொண்ட ஒவ்வொரு இந்தியரும், கொடும் புயலில் சிக்கி துயரத்தின் நடுவேயும் அன்னிய ஆதிக்கத்தை எதிர்த்து நிற்கும் வங்கதேச மக்களின் போராட்டத்தை ஆதரித்து, ஆதிக்கச் சிறகுகளை விரித்து வட்டமிடத் துடிக்கும் அமெரிக்காவின் அடாவடித்தனங்களை அம்பலப்படுத்தி முறியடிக்க வேண்டிய நேரமிது.

● குமார்.

*பட்டினியால் பரிதவிக்கும் மக்கள் தங்களை அடித்தே கொன்று விடுவார்கள் என்று அதிகாரிகளும் ராணுவத் தளபதிகளும் ஹெலிகாப்டர்களை கீழிறக்காமலேயே ஒன்றிரண்டு உணவுப் பொட்டலங்களை வீசி எறிந்து விட்டுப் பறந்தனர். ஆத்திரமடைந்த வங்கதேச மக்கள் சிட்டகாங்கிலுள்ள உணவுக் கிடங்குகளையே சூறையாடினர்.*

# நேபாளம்:

# மன்னராட்சி மறையவில்லை மக்களாட்சி மலரவில்லை

***இந்தியாவில் அடிக்கட்டுமானத்தை மாற்றாமலேயே நாடாளுமன்ற ஆட்சிமுறையை நிறுவி காலனிய எதிர்ப்புக்கு வெள்ளையர்கள் வடிகால் வெட்டியதைப் போலவே, நேபாளத்திலும் மன்னராட்சி முறை தூக்கியெறியப்படாமல் பெயரளவிலான நாடாளுமன்ற ஆட்சிமுறை கொண்டு வரப்பட்டுள்ளது.***

இந்தியாவின் அண்டை நாடான நேபாளத்தில் 32 ஆண்டுகளுக்குப் பிறகு கடந்த மே மாதம் 12ந் தேதியன்று பல கட்சி நாடாளுமன்ற ஜனநாயகத் தேர்தல் நடந்து முடிந்துள்ளது. கடந்த ஆண்டின் தொடக்கத்தில் மன்னராட்சிக்கு எதிராக நடந்த மாபெரும் மக்கள் எழுச்சியைத் தொடர்ந்து இடைக்கால அரசு நிறுவப்பட்டு, அதன் மேற்பார்வையில் நடைபெற்ற இத் தேர்தலில் நேபாள காங்கிரசுக் கட்சி 110 தொகுதிகளில் வென்று அறுதிப் பெரும்பான்மை பெற்றுள்ளது. போலிக் கம்யூனிஸ்டுகளின் 'இடதுசாரி' கூட்டணி 69 இடங்களில் வென்று வலுவான எதிர்க்கட்சியாக உள்ளது.

கிழக்கு ஐரோப்பாவில் வீசிய ஜனநாயகத்துக்கான புயலைத் தொடர்ந்து, நேபாள மக்களும் மன்னராட்சிக்கு முடிவுகட்டி ஜனநாயகத்தை சுவாசிக்கத் தொடங்கியிருப்பதாக முதலாளித்துவப் பத்திரிக்கைகள் இத் தேர்தலை வரவேற்றுள்ளன. ஆனால், நேபாளத்தில் மன்னராட்சிமுறை பெயரளவுக்குத்தான் முடிவுக்கு வந்துள்ளது. ஜனநாயகமும் பேரளவில்தான் உள்ளது. நேபாள மக்கள் எந்த நோக்கத்திற்காக ரத்தம் சிந்திப் போராடினார்களோ, அந்த லட்சியம் ஈடேறாமல் நாடாளுமன்ற ஜனநாயகம் என்ற பெயரளவிலான சீர்திருத்தத்துடன் மக்களது போராட்ட வெள்ளத்திற்கு வடிகால் வெட்டப்பட்டுள்ளது. நேபாள மக்களின் பேரெழுச்சியானது புரட்சிப் பாதையை நோக்கித் திரும்பிவிடாமல் தடுத்து, நாடாளுமன்ற ஜனநாயகம் என்ற மூடுதிரையின் பின்னே மீண்டும் அம்மக்கள் ஏய்க்கப்பட்டுள்ளார்கள்.

இமய மலையின் அடிவாரத்திலுள்ள சின்னஞ்சிறு நாடான நேபாளத்தில் இராணா பரம்பரை மன்னராட்சியின் கீழ் நிலப்பிரபுத்துவ கொடுங்கோலாட்சியே நீண்ட காலமாக நிலவி வந்தது. நாட்டின் பெரும்பகுதி விளை நிலங்களும் ஆலைகளும் மன்னர் குடும்பத்துக்கே சொந்தமானது. நேபாள மக்களைச் சுரண்டிக் கொழுத்த மன்னர் பரம்பரையினர் வெளிநாடுகளில் கோடிகோடியாய் செல்வங்களைக் குவித்து களிவெறியாட்ட போதையில் மூழ்கித் திளைத்தனர். முடியாட்சிக் கொடுங்கோன்மைக்கு எதிரான எந்தவொரு போராட்டமும் மிருகத்தனமாக ஒடுக்கப்பட்டது. பலர் சித்திரவதை செய்யப்பட்டு தூக்கிலிடப்பட்டனர்.

இத்தகைய கொடுங்கோன்மைக்கு எதிராக 1940களின் இறுதியில் நேபாள மக்கள் வீறுகொண்டு எழுந்து போராடினர். அதைத் தொடர்ந்து இன்றைய மன்னர் பிரேந்திராவின் பாட்டனார் பெயரளவிலான நாடாளுமன்ற ஜனநாயக ஆட்சி முறையை ஏற்றுக் கொண்ட பிறகு, இந்தியாவின் ஆதரவுடன் நேபாள காங்கிரசு கட்சியின் முன்னாள் தலைவரான பி.பி.கொய்ராலாவை பிரதமராகக் கொண்டு 1950ல் நாடாளுமன்ற ஆட்சி நிறுவப்பட்டது. இருப்பினும் அரசின் அதிகார பூர்வமற்ற அதிபராக மன்னர் நீடித்தார். பின்னர் 1960ல் மன்னர் பிரேந்திராவின் தகப்பனாரான மகேந்திரா, திடீர் ஆட்சிக் கவிழ்ப்பு நடத்தி, அரசியல் கட்சிகளைத் தடை செய்து நாடாளுமன்ற ஆட்சி முறைக்கு சமாதி கட்டி தானே நேரடி நிர்வாகப் பொறுப்பேற்றார். பின்னர் ஜனநாயக ஆட்சி முறைக்காக நேபாள மக்கள் தொடர்ந்து போராடியபோது ''பஞ்சாயத்துக்கள்'' எனும் போலி ஜனநாயக பொம்மை ஆட்சியை நிறுவி மன்னர் பரம்பரையே தொடர்ந்து ஆண்டு வந்தது.

கடந்த ஆண்டின் துவக்கத்தில் மன்னராட்சிக்கு எதிராக நடந்த நேபாள மக்களின் ஜனநாயகத்துக்கான பேரெழுச்சி, எங்கே புரட்சிப் பாதையை நோக்கித் திரும்பிவிடுமோ என்றஞ்சிய மன்னர் பிரேந்திரா, நாடாளுமன்ற ஜனநாயக ஆட்சி முறைக்கு ஒப்புக் கொண்டார். அதைத் தொடர்ந்து, ஜனநாயகத்துக்கான போராட்டத்தை வழிநடத்திய நேபாள காங்கிரசும் போலிக் கம்யூனிஸ்ட் கட்சிகளின் 'இடதுசாரி' கூட்டணியும் சேர்ந்து கடந்த ஆண்டு ஏப்ரலில் இடைக்கால அரசை நிறுவின. நேபாள காங்கிரசின் தலைவர் பட்டாராய் இடைக்கால அரசின் பிரதமராகப் பொறுப்பேற்றார். அதன்பிறகு தயாரிக்கப்பட்ட புதிய அரசியல் சட்டம் கடந்த ஆண்டு நவம்பரில் இடைக்கால அரசினால் ஏற்கப்பட்டு அதன்படி இவ்வாண்டு மே மாதத்தில் தேர்தல்



படிப்பகம்

www.padippakam.com

களை நடத்துவதென முடிவாகியது.

இப்புதிய அரசியல் சட்டம் மன்னராட்சிக் கொடுங்கோன்மைக்கு அடித்தளமாக உள்ள நிலப்பிரபுத்துவ உற்பத்தி முறையை மாற்றியமைப்பதைப் பற்றியோ, மன்னர் பரம்பரையின் நிலங்களையும் சொத்துக்களையும் பறிமுதல் செய்து விவசாயிகளுக்கு விநியோகிக்கும் ஜனநாயகப் புரட்சியை ஈடேற்றுவதைப் பற்றியோ வாயோ திறக்கவில்லை. மன்னர் நேரடி நிர்வாகப் பொறுப்பில் இல்லையே தவிர, அதிகாரப் பூர்வமற்ற அதிபராகவே நீடிப்பார். மன்னர் பரம்பரையின் சொத்து, தொழில், வியாபாரங்களுக்கு வரிவிலக்கு அளிக்கப்படும். நாட்டின் இராணுவம் மன்னரது கட்டுப்பாட்டின் கீழிருக்கும். மன்னரது சிறப்புச் சலுகைகளும் உரிமைகளும் குறைக்கப்படாமல் தொடர்ந்து நீடிக்கும். மற்றபடி அரசியல் கட்சிகள் மீதான தடை, பத்திரிக்கை தணிக்கை, தூக்கு தண்டனை, விசாரணையின்றி சிறையிடுவது முதலான அடக்குமுறைகள் இச்சட்டத்தில் நீக்கப்பட்டுள்ளன. எல்லாவற்றுக்கும் மேலாக, நேபாளத்தை மதச்சார்பற்ற நாடு என்று அறிவிக்காமல் மன்னராட்சிக் காலத்தைப் போலவே "இந்து ராஜ்ஜியம்" என்றே இச்சட்டம் குறிப்பிடுகிறது.

மன்னராட்சிக் கொடுங்கோன்மைக்கு அடித்தளமாக உள்ள நிலப்பிரபுத்துவ கட்டுமானத்தின்மீது கை வைக்காமல் சில அற்ப சீர்திருத்தங்களுடன் பெயரளவிலான நாடாளுமன்ற ஆட்சிமுறையை அங்கீகரிக்கும் இச்சட்டத்தை நேபாள அரசியல் கட்சிகள் வெட்கமின்றி ஏற்றுக் கொண்டு தேர்தலிலும் போட்டியிட்டன. அதே சமயம், தமது துரோகத்தை மறைத்து நேபாளத்தில் ஜனநாயகம் மலர்ந்துள்ளதாக இக்கட்சியினர் மாய்மாலம் செய்யத் தவறவில்லை. இன்னமும் ராணுவத்தை தனது கட்டுப்பாட்டில் வைத்துள்ள மன்னர் எப்போது வேண்டுமானாலும் ஆட்சிக் கவிழ்ப்பு செய்யும் அபாயம் உள்ளது. இவற்றையெல்லாம் மூடிமறைத்துவிட்டு இந்திய ஓட்டுக் கட்சிகளைப் போலவே நேபாள கட்சிகளும் தாங்கள் ஆட்சிக்கு வந்தால் மக்களுக்கு மேலும் அதிகாரங்களை வழங்குவோம் என்று கூசாமல் புளுகி தேர்தல் பிரச்சாரம் செய்தன.

ஒருபுறம் நிலப்பிரபுத்துவ அடிக்கட்டுமானம் தகர்க்கப்படாமல் நீடிக்கும் அதே சமயம், நேபாளத்தின் உள் விவகாரங்களில் தொடர்ந்து தலையிட்டு வரும் இந்தியாவின் பிராந்திய மேலாதிக்கத்துக்கு எதிராக புதிய அரசியல் சட்டத்தில் எதுவுமில்லை. நேபாள சந்தையின் மீது இந்தியா பெற்றுள்ள ஏகபோக ஆதிக்கத்தை தடுத்து, உலகச் சந்தையிலிருந்து எந்தப் பொருளையும் வாங்கிக்கொள்ளும் உரிமைபெறும் நோக்கத்தோடு புதிய ஒப்பந்தம் போடக் கோரி நேபாளம் பலமுறை கோரிய போதிலும் இந்தியா ஏற்க மறுத்துவிட்டது. 1989 துவக்கத்தில் நேபாளத்தின் மீது பொருளாதாரத் தடைவிதித்து அந்நாட்டு மக்களைப் பட்டினி போட்டு பணிய வைக்க முயன்றது. இதேபோல கங்கை - பிரம்ம புத்திரா ஆறுகள் பற்றிய பேச்சு வார்த்தையில் நேபாளத்தையும் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று வங்கதேசம் பலமுறை கோரியபோதிலும்



ஜனநாயகப் புரட்சி லட்சியம் காற்றில் பறந்தது. தேர்தல் வெற்றிக் களிப்பில் நேபாள போலிக் கம்யூனிஸ்டுகள்.

இந்தியா அதை ஏற்க மறுத்துவிட்டது.

இந்திய ஆதரவு கட்சியான நேபாள காங்கிரஸ் இடைக்கால அரசில் அங்கம் வகித்தபோது இந்தியாவும் இக்கட்சியும் சேர்ந்து திபெத்திலிருந்து விரட்டப்பட்ட இந்திய ஆதரவு பொம்மை அரசின் தலைவரான தலாய்லாமாவை நேபாளத்திற்கு அழைக்க ரகசிய ஏற்பாடுகளைச் செய்தன. இதன்மூலம் அண்டை நாடான சீனாவுக்கு எதிராக நேபாளத்தை நிறுத்தி, இந்தியா பக்கம் அதை தள்ளிவிட முயன்றன.

இவ்வாறு நேபாள காங்கிரசின் மூலம் இந்தியா நேபாளத்தின் உள் விவகாரங்களில் தலையிட்டு தொடர்ந்து ஆதிக்கம் செய்ய முயன்றது. தேர்தல் நேரத்தில் நேபாள காங்கிரசுக்கு ஆதரவாக பிரதமர் சந்திரசேகர் நேரில் சென்று பிரச்சாரம் செய்தார். தெராய் பிராந்தியத்தில் முன்னாள் கூர்க்கா படையினரைக் கொண்டு சத்பவன (நல்லெண்ண) கட்சியை நிறுவி அதன் மூலம் நேபாள காங்கிரசுக்கு நிதியுதவியும் பிரச்சாரமும் செய்து இந்தியா ஆதரித்தது.

இருப்பினும் இந்திய மேலாதிக்கவாதிகள் எதிர்பார்த்த வகையில் நேபாள தேர்தல் முடிவுகள் அமையவில்லை. தலைநகர் காத்மாண்டு தொகுதியில் இடைக்கால அரசின் பிரதமரும் நேபாள காங்கிரசின் தலைவருமான பட்டாராய் 'இடதுசாரி' கூட்டணி வேட்பாளரிடம் தோல்வி அடைந்தார். இதர தொகுதிகளிலும் நேபாள காங்கிரசு கட்சி குறுகிய வாக்கு வித்தியாசத்தில்தான் வெற்றி பெற்றுள்ளது. அதே சமயம் இந்தியாவின் பிராந்திய மேலாதிக்கத்தை எதிர்த்து பிரச்சாரம் செய்துவந்த இடதுசாரி கூட்டணி 69 தொகுதிகளில் வெற்றிபெற்று வலுவான எதிர்க்கட்சியாக அமைந்துள்ளது. புதிய அரசியல் சட்டத்தைக் கொண்டு நேபாள அரசியல் கட்சிகளால் எந்தவொரு பெரிய மாற்றத்தையும் செய்ய இயலாத போதிலும், இந்திய எதிர்ப்பு 'இடதுசாரி'களின் வெற்றியைக் கண்டு இந்திய ஆட்சியாளர்கள் பெரிதும் அஞ்சுகின்றனர்.

நேபாளத்தின் புதிய பிரதமர் ஜி.பி.கொய்ராலா.



இந்தியாவில் அடிக்கட்டுமானத்தை மாற்றாமலேயே நாடாளுமன்ற ஆட்சிமுறையை நிறுவி காலனிய எதிர்ப்புக்கு வெள்ளைக்காரர்கள் வடிகால் வெட்டியதைப் போலவே நேபாளத்திலும் மன்னராட்சி முறை தூக்கியெறியப்படாமல் பெயரளவிலான நாடாளுமன்ற ஆட்சிமுறை கொண்டு வரப்பட்டுள்ளது. இத்தகைய போலி ஜனநாயகத்தின் மூலம் நேபாளத்தின் அரசியல் - பொருளாதார நெருக்கடிகளை ஒருக்காலும் தீர்க்க முடியாது. நிலப்பிரபுத்துவத்துக்கு எதிரான ஜனநாயகப் புரட்சிக்கு முதலாளித்துவ வர்க்கமும் கட்சிகளும் தலைமை தாங்க தகுதியற்றவை; புரட்சியை பாதியிலேயே, கைவிட்டு சமரசமாகிப் போய் துரோகமிழைக்கும் என்ற லெனினிய போதனையை நேபாள விவகாரம் மீண்டும் நிரூபித்துள்ளது. இனி நேபாள மக்களின் சுதந்திரத்துக்கும் ஜனநாயகத்துக்கும் நல்வாழ்வுக்குமான ஆட்சி அமைவதாக இருந்தால், அது பாட்டாளி வர்க்கத் தலைமையிலான புரட்சியில் மலரும் புதிய ஜனநாயக அரசாக மட்டுமே இருக்க முடியும். ஜனநாயகத்துக்கான பேரெழுச்சியில் இறங்கி அனுபவம் பெற்றுள்ள நேபாள மக்கள் கம்யூனிசப் புரட்சியாளர்களின் தலைமையில் திரண்டு விரைவில் அதைச் சாதிப்பார்கள்.

○ பழனி.



படிப்பகம்

www.padippakam.com



# ஓட்டுக்கட்சிகளை கதிகலங்க வைத்த

மே20-ந் தேதி நடந்த முதல்கட்ட வாக்குப்பதிவில் தலைவிரித்தாடிய வன்முறையில் 55 பேர் இறந்ததாக அரசு தகவல் கொடுத்தது. 800 ஓட்டுச்சாவடிகளில் மறு வாக்குப்பதிவிற்கு தேர்தல் கமிஷன் உத்தர விட்டுள்ளது. தேர்தல் வெற்றியை மக்களின் வாக்குச்சீட்டு தீர்மானிக்கவில்லை என்பதற்கான ஆதாரங்கள்தான் இவை. கள்ளஓட்டு, ஓட்டுப் பெட்டிக் கடத்தல், வாக்குச் சாவடியை கைப்பற்றுதல் முதலானவற்றையே தமது வெற்றிக்கு அடிப்படையாக நம்பி களத்தில் குதித்துள்ளன, ஓட்டுக்கட்சிகள். எனவே தேர்தலில் ஓட்டுப்போடுவதன் மூலம் எதையும் சாதிக்க முடியாது; மாறாக தேர்தலை புறக்கணித்து நாம் அமைப்பாகி ஓர் ஆயுதந்தாங்கிய எழுச்சிக்கு தயாராகும் போது எதையும் சாதிக்க முடியும் என்பதை புரட்சிகர அமைப்புகள் தமிழகமெங்கும் பிரச்சாரம் செய்துவருவதன் தொடர்ச்சியாக...

**திருச்சியில்** ம.க.இ.க., புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணி மற்றும் காந்திபுரம் சாக்ரடீஸ் நற்பனி இளஞ்சேனை ஆகியோருடன் சேர்ந்து நகரெங்கும் தட்டி, சுவரெழுத்து, சைக்கிள் பேரணி, ஆட்டோ பிரச்சாரம் மூலம் பரவலாக தேர்தல் புறக்கணிப்பு பிரச்சாரம் எடுத்துச் சென்றது. பெரிய தட்டிகளில் 'கார்ட்டூன்கள்' வரைந்து கட்டப்பட்டதும், தேர்தல் பாதை திருடர் பாதை என முழக்கமெழுதிய துணியை முதுகில் குத்திக் கொண்டு தோழர்கள் நிதிவசூல் செய்ததும்



காந்திபுரம் பகுதியில் தேர்தல் புறக்கணிப்பு அலுவலகம் தொடங்கி ஒலிபெருக்கி கட்டி பிரச்சாரம் செய்ததும் மக்களிடையே சிறந்த வரவேற்பை பெற்றது.

பிரச்சாரத்தின் போது... ''என்னடி ஓட்டு போடாதீங்கன்னு சொல்றாங்க?'' ''ஏன்? அவங்க சொல்றதுல என்ன தப்பு? எவன் வந்து என்ன செஞ்சுட்டான்'' என இரண்டு பெண்கள் பேசிக்கொண்டனர். பேருந்தில் பிரச்சாரம் செய்த பொழுது ஒரு கிராமவாசி, ''நீங்க சொல்றதுதான் சரியானது; எவனுக்குமே ஓட்டுப்போடக்கூடாது. இன்னும் 2 நோட்டீஸ் கொடுங்க. எங்க ஊர்ல கொண்டு போய் கொடுக்கிறேன்'' எனக் கேட்டு வாங்கிச் சென்றார்.

சுவரெழுத்து எழுதிய பொழுது தி.மு.க., 'மார்க்சிஸ்ட்' கட்சிக்காரர்களின் பலமுனை எதிர்ப்புகள் - அராஜகங்களை சந்திக்க நேரிட்டு முறியடித்தனர். ''எங்களுக்கும் அ.தி.மு.க.காரனுக்கும் போட்டியே கிடையாது; ம.க.இ.க.வுக்கும் எங்களுக்கும்தான் போட்டி'' என்று தி.மு.க.வினரே ஒத்துக்கொள்ளும் வண்ணம் சுவரெழுத்து பிரச்சாரம் எடுத்துச் செல்லப்பட்டது.

மேலும், காந்திபுரம் பகுதிக்கு ஓட்டுக் கேட்டு வந்த வேட்பாளர்களை ஊருக்குள் விடாமல் நிறுத்தி கேள்விகள் கேட்கப்பட்டது. அன்பில் பொய்யாமொழி (தி.மு.க.) பதில் சொல்லாமலேயே சென்றுவிட்டார். செல்வி மாலா (அ.தி.மு.க.) பதில் சொல்லவில்லை; அவரின் எடுபிடி ஒருவர், நாங்கள் பிழைப்புக்காகத்தான் அரசியல் நடத்துறோம் என்று கூறிவிட்டுச் சென்றார்: டி.கே. ரெங்கராஜன் (சி.பி.எம்.) இறங்கி ஓட்டுக் கேட்காமலேயே சென்றுவிட்டார்.

**சீர்காழியில்** 4.5.91 அன்று மாலை தேர்தல் புறக்கணிப்பு பொதுக் கூட்டத்தை புதிய கலாச்சார வாசகர் வட்டத்தினர் சீர்காழி பேருந்து நிலையத்தில் நடத்தினர். தோழர் அம்பிகாபதி தலைமை தாங்க தோழர் கே.பி.ராமசாமி, தோழர் குமார் ஆகியோர் சிறப்புரையாற்றினர். 300க்கும் மேற்பட்ட மக்கள் கூட்டத்தில் கலந்து கொண்டனர். இதுவன்றி தட்டி, சுவரெழுத்து மூலமும் பிரச்சாரம் எடுத்துச் செல்லப்பட்டது.

**அதிரை** பேருந்து நிலையத்தில் தேர்தல் புறக்கணிப்பு பொதுக்கூட்டம் நடைபெற்றது. பட்டுக்கோட்டை வட்டார வி.வி.மு. சார்பாக நடத்தப்பட்ட இக்கூட்டத்தில் தோழர் நடராஜன் தலைமையில் போலீசின் அராஜகத்தையும் ஓட்டுக் கட்சிகளின் கையாலாகாத் தனத்தையும் அம்பலப்படுத்தி தோழர்கள் செல்வராஜ், பி.பாலசுப்பிரமணியன் ஆகியோர் உரையாற்றினர். சிறப்புரையாற்றிய தோழர் கதிர்வேலன் (கல்லை வட்ட வி.வி.மு) ராஜீவ், வி.பி.சிங், அத்வாணி, கருணாநிதி, ஜெயலலிதா போன்றவர்களையும் இவர்களுக்குப் பின்னுள்ள தரகு முதலாளித்துவ, நிலப்பிரபுத்துவ கும்பலையும் அம்பலப்படுத்தினர். 400க்கும் மேற்பட்ட மக்கள் கூடிநின்று வரவேற்றனர்.


**வேதாரண்யம்** ஆயக்காரன்புலம் கடைத் தெருவில் 6.5.91 அன்று தேர்தல் புறக்கணிப்பு பொதுக்கூட்டம் புதிய ஜனநாயக வாசகர் வட்டம் சார்பாக நடந்தது. 300க்கும் மேற்பட்ட மக்கள் கூடியிருந்தனர். தோழர் கே.கிருஷ்ணமூர்த்தி தலைமையில் தோழர்கள் மறைமுகிலன், ஜெயசீலன், கே.பி.இராமசாமி ஆகியோர் சிறப்புரையாற்றினர். பின் திருவையாறு வி.வி.மு. கலைக்குழுவினரின் கலைநிகழ்ச்சி நடந்தது.

**மாயனூரில்** புதிய ஜனநாயக வாசகர் வட்டம் சார்பாக 14.5.91 அன்று போலி ஜனநாயகத் தேர்தல் புறக்கணிப்பு பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர் தவமணி தலைமையில் தோழர் முருகானந்தம் (RWU. திருச்சி) சிறப்புரையாற்றிய பின் கலைநிகழ்ச்சி நடந்தது. பொதுக்கூட்டத்தை ஒட்டி பகுதியெங்கும் பரவலாக பிரச்சாரம் எடுத்துச் செல்லப்பட்டது. கூட்டத்திற்கு 500-க்கும் மேற்பட்ட மக்கள் வந்து ஆதரவளித்தது குறிப்பிடத்தக்கது.

**நல்லம்பள்ளியில்** கட்அவுட், தட்டி, பேனர், தோரணவாயில், அலங்கார வளைவு என ஓட்டுக்கட்சிகளின் ஆடம்பர - ஆரவார பிரச்சாரத்திற்கு நடுவே புதிய ஜனநாயக வாசகர் வட்டத்தினர் அமைத்த தேர்தல் புறக்கணிப்பு அலுவலகம் மக்களிடையே சிறந்த வரவேற்பைப் பெற்றது. போலி ஜனநாயகத் தேர்லை அம்பலப்படுத்தி தட்டிகள், துணி பேனர்களில் எழுதப்பட்டு அலுவலகப் பந்தலை நிறைத்திருந்தது. முதலில் இதைக்கண்டு வியந்த மக்கள் பின் நெருங்கி வந்து பழகினர். தேர்தல் புறக்கணிப்பு விளக்கவுரை மற்றும் புரட்சிகர பாடல்கள் அடங்கிய மக்கள் கலை இலக்கிய கழகத்தின் ஒலி நாடாக்களை (கேசட்டுகளை) திரும்பத்திரும்ப ஒலிபரப்பும்படி கேட்டனர். மேலும் சுவரெழுத்து, தட்டி மூலம் பிரச்சாரம் மேற்கொண்ட பகுதிகளில் மக்களிடையே நல்ல ஆதரவு இருந்தது.

நல்லம்பள்ளியில் தேர்தல் புறக்கணிப்பு பொதுக்கூட்டமும் நடத்தப்பட்டது. தோழர் வீரமணி தலைமையில் தோழர்கள் முனிராஜ், தமிழ்மணி, (ம.க.இ.க.) ஆகியோர் ஊரை நிகழ்த்தினர். கூட்டத்தைப் பற்றி 'ரிப்போர்ட்' எடுக்க வந்த உளவு பிரிவு (கியூ பிரிவு) போலீசு. கூட்டத்தின் பொழுது

நல்லம்பள்ளியிலுள்ள தேர்தல் புறக்கணிப்பு அலுவலகம்





படிப்பகம்

www.padippakam.com

# தேர்தல் புறக்கணிப்பு இயக்கம்

தூங்கிவிட்டு சில நாட்கள் கழித்து வந்து தோழர்களிடம் நிகழ்ச்சிநிரல் முதலான விபரங்களை கேட்டுச் சென்றது. அப்போது அனுதாபிப் போல் நரித்தனமாய் ஆதரவு தெரிவித்தது.

நெய்வேலியில் நகரம் முழுவதும் மற்றும் மந்தார குப்பம், வடலூர், குறிஞ்சிப்பாடி முதலிய பகுதிகளில் சுவரெழுத்து, தட்டி, தெருமுனைப் பிரச்சாரம், பொதுக்கூட்டம், ஆலை வாயிற்கூட்டங்கள், பேருந்து பிரச்சாரம் மூலம் நெய்வேலி - வடலூர் தொழிலாளர் பிரச்சாரக் குழு சார்பாக தேர்தல் புறக்கணிப்பு இயக்கம் மேற்கொள்ளப்பட்டது. 18.5.91 அன்று நெய்வேலி மந்தாரகுப்பம் பொதுத் திடலில் நடந்த பொதுக் கூட்டத்தில் தோழர் கலைச்சித்தன் தலைமையில் தோழர் காளியப்பன் (ம.க.இ.க.) சிறப்புரையாற்றினார். திருவெண்ணெய் நல்லூர் வட்ட விவசாயிகள் விடுதலை முன்னணி தோழர்களால் கலை நிகழ்ச்சி நடத்தப்பட்டது. 'மார்க்சிஸ்டு'களின் தொழிற்சங்க அலுவலகத்திற்கு முன் அவர்களை அம்பலப்படுத்தி எழுதப்பட்ட சுவரெழுத்தை போலிகள் அழித்து விட்டார்கள். இதேபோல் மந்தார குப்பத்தில் கருணாநிதியை அம்பலப்படுத்தி வைக்கப்பட்டிருந்த தட்டியை நெய்வேலியைச் சேர்ந்த பூக்கடை பூராசாமி (தி.மு.க.) திருடிச் சென்றார். இது பொதுக் கூட்டத்தில் அம்பலப்படுத்தப்பட்டது.

சமயநல்லூரில் 11.5.91 அன்று தோழர் மூவேந்திரன் தலைமையில் ம.க.இ.க. சார்பாக பொதுக்கூட்டம் நடத்தப்பட்டது. தோழர்கள் பன்னீர் செல்வம், கே.பி.ராமசாமி, வேம்பன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். தோழர் வேம்பன் ஓட்டுக் கட்சிகளை அம்பலப்படுத்தி நகைச்சுவையாக பேசினார்.

மதுரை வடக்கு - மேலமாசி வீதியில் 13.5.91 அன்று ம.க.இ.க. சார்பாக நடந்த பொதுக்கூட்டத்தில் தோழர் பன்னீர் செல்வம் தலைமை தாங்கினார்; தோழர்கள் கதிரவன், கே.பி.ராமசாமி ஆகியோர் சிறப்புரையாற்றினர். உத்தமபாளையம் வட்ட வி.வி.மு. தோழர்களின் எழுச்சிமிகு கலை நிகழ்ச்சி இறுதியில் நடத்தப்பட்டது.

மதுரை ஜெய்ஹிந்த்புரத்தில் மதுரை ம.க.இ.க. மற்றும் புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணி (RSYF) ஆகிய் அமைப்புகள் இணைந்து நடத்திய பொதுக் கூட்டம் 15.5.91 அன்று தோழர் ரவிக்குமார் தலைமையில் நடந்தது. தோழர்கள் கே.பி. ராமசாமி, கதிரவன் ஆகியோர் தேர்தல் நாடகங்களை திரைகிழித்து புதிய ஜனநாயகப் புரட்சியைப் பற்றியும் அதன் அரசு, ஆட்சியைப் பற்றியும் விளக்கிப் பேசினர். சுமார் 500 பேர் கலந்து கொண்டு கூட்டத்தை கேட்டனர். கூட்டத்தின் இடையிடையே போலீசின் கைக்கூலி ஒருவன் குடிபோதையில் வந்து கலாட்டா செய்தான். அவனை பொது மக்களும் தோழர்களும் எச்சரித்து அனுப்பினர்.

பொதுக்கூட்டத்திற்கு திரளான மக்கள் கூடி ஆதரவு தந்ததைக் கண்டு பொறுக்க முடியாத ஓட்டுக்கட்சி ரௌடிகள், கூட்டம் முடிந்து சென்ற தோழர்கள் செல்வம், கணேஷ், முருகேஷ் ஆகியோரை கொலை வெறியோடு தாக்கினர். தோழர்கள் சுதாரித்து எதிர்தாக்குதல் தொடுப்பதற்குள் பேடிகள் ஓடிவிட்டனர். அவர்கள் இருப்பிடங்களில் கூட இல்லாமல் தலைமறைவாகி விட்டனர். மறுநாள் (16.5.91) இப்பகுதியில் 10 இடங்களில் ஓட்டுக்கட்சிகளின் ரௌடித்தனத்தை அம்பலப்படுத்தி தெருமுனைக் கூட்டம் நடத்தப்பட்டது. ஒவ்வொரு இடத்திலும் சுமார் 50 பேர் கூடி பிரச்சாரத்தைக் கேட்டனர். ஒரு இடத்தில் தொழிலாளி ஒருவர் தோழர்களுக்கு 'டீ' வாங்கிக் கொடுத்து தனது மட்டற்ற அன்பையும் ஆதரவையும் தெரிவித்தார். மேலும் இத்தாக்குதலை கண்டித்து சுவரொட்டியும் ஒட்டப்பட்டது.

சிவகங்கையில் ம.க.இ.க. சார்பாக சுவரெழுத்து, பிரசுரங்கள் மூலம் பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது. 15.5.91 அன்று நகரில் பரவலாக பிரசுரம் விநியோகிக்கப்பட்ட பொழுது "உங்கள் இயக்கம்தான் வளர வேண்டும்" என பலர் ஆதரவாகப் பேசினர். சிலர் "தேர்தலே வேண்டாமெனில் எப்படித்தான் அரசாங்கம் நடத்த முடியும்?" எனக் கேட்டனர். அவர்களுக்கு உரிய விளக்கம் தரப்பட்டது. மாணவர்கள் மத்தியில் பிரசுரம் விநியோகித்த பொழுது மாணவர்கள் நேரடியாக உற்சாகமாக பங்கேற்றது குறிப்பிடத்தக்கது.

மேலும் மானாமதுரை, திருப்புவனம், காரைக்குடி பகுதிகளிலும் துண்டு பிரசுரங்கள், சுவரெழுத்து மூலம் பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது.

மன்னார்குடி பந்தலடி கீழ்புறத்தில் புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணியின் (RSYF) சார்பாக 21.5.91 அன்று பொதுக் கூட்டம் நடத்தப்பட்டது. தோழர் மன்னை நன்னன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் தோழர் செல்வராசு (வி.வி.மு.) தோழர் கிருட்டிணமூர்த்தி (புதிய ஜனநாயக வாசகர் வட்டம், வேதாரண்யம்) ஆகியோர் உரை நிகழ்த்தினர். இறுதியாக தோழர் மறை முகிலன் உரையாற்றினார். 300க்கும் மேற்பட்டோர் கூடி ஆதரவு தந்தனர். மேலும் சைக்கிள் ரிக்சாவில் ஒலிபெருக்கி கட்டி நகர் முழுவதும் பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது.

சென்னை ம.க.இ.க. சார்பாக வில்லிவாக்கம் பேருந்து நிலையத்தில் 21.5.91 அன்று பொதுக்கூட்டம் நடத்தப்பட்டது. தோழர் சீனிவாசன் தலைமையில் தோழர் காளியப்பன் சிறப்புரையாற்றினார். கூட்டம் முடிந்ததும் ராஜீவ் படுகொலையை முன்னிட்டு கலாட்டா செய்துவந்த காங்., அ.தி.மு.க. ரௌடிக்கும்பல் மேடையையும் ஒலிபெருக்கி பொருட்களையும், தாக்கி சேதம் விளைவித்தது.

பொதுக்கூட்டத்திற்கு முதல்நாள் பேருந்து நிலையத்தில் அறிவிப்பு பேனர் கட்டச் சென்ற ம.க.இ.க. தோழர்கள் மீது பகுதியைச் சேர்ந்த 'மார்க்சிஸ்டு' கட்சியினர் தாக்குதல் தொடுத்தனர். பழைய நட்பு அடிப்படையில் பேனர் கட்டுவதற்கு 'மார்க்சிஸ்டு களின்' தேர்தல் அலுவலகத்திலிருந்த ஒருவரிடம் ஏணி கொடுத்து உதவும்படி தோழர்கள் கேட்டனர். அதற்கு அங்கிருந்தவர்கள் சேர்ந்து கொண்டு தாறுமாறாக பேசி வம்புக்கு வந்ததோடு பேசிக் கொண்டிருந்தபொழுதே தோழர்களை கும்பலாக தாக்கினர்.

போலிகள் முந்திக்கொண்டு போய் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தனர். ஏணி தரவில்லை என்பதால் அவர்களைத் தாக்கியதாகவும், அலுவலகத்திலிருந்த டியூப்லைட்டுகளை உடைத்ததாகவும் புகார்



கொடுத்தனர். எனவே, தோழர்கள் தங்கள் தரப்பில் விளக்கம் கொடுக்க வேண்டி வந்ததால், போலீசு நிலையத்திற்கு புகார் கொடுக்கச் சென்றார்கள். புகாரை விசாரித்த எஸ்.ஐ. வழக்கு போடுவதாக தோழர்களை மிரட்டிக் கொண்டே சமாதானமாக போகும்படி கூறினார். "எங்கள் பக்கம் எந்தத் தவறுமில்லை; பணிந்து போக அவசியமில்லை" என தோழர்கள் உறுதியுடன் இருக்கவே வேறு வழியில்லாமல் பகுதி சி.பி.எம். செயலர் பன்னீர் செல்வம் உட்பட சிலர் மன்னிப்பு கேட்டனர். பின்னர் தோழர்கள் பிரச்சினையை முடித்துக் கொண்டு வந்தனர். ம.க.இ.க. தோழர்கள் பேனர் கட்டிமுடிக்கும் வரை கூட இருந்து பாதுகாப்பு கொடுக்கும்படி இரு போலீசை, வேண்டாம் என்று கூறியும் அனுப்பி வைத்தார் எஸ்.ஐ.

பின்னர் சி.பி.எம். ஆதரவாளர்களிடம் நடந்ததைப் பற்றித் தோழர்கள் பேசிக் கொண்டிருந்தபொழுது சி.பி.எம். செயலர் பன்னீர்செல்வம் வந்து "எங்கள் கட்சியிலிருந்து ஆள் பிடிக்கிறீர்களா" எனக் கூறி அழைத்துச் சென்றார்.



படிப்பகம்

www.padippakam.com




● *ஓட்டுப் போடக்கூடாது என்று சிலரிடம் நாம் கூறும் போது நாம் ஓட்டுப் போடாவிட்டால் இந்தியக் குடிமகன் என்ற பட்டியலில் இருந்து விடுபடுவோம். ஆதலால் யாருக்காவது ஓட்டுப் போட வேண்டியதுதான் என்று ஒரு சாரார் கூறுகின்றனர். இது சரியா? தவறா? ஏன்? காரணம் சொல்வீர்களா?*

— நேசன், சாத்தூர்.

☆ அப்படி ஒரு சாரார் கூறுவது தவறானதாகும். சட்டப்படி ஓட்டுப் போட உரிமை இருப்பதைப் போலவே ஓட்டுப் போடாமல் இருக்கவும் உரிமை உண்டு. முன்பு அசாமில் பல கட்சிகளும், பின்பு தமிழ் நாட்டில் பாட்டாளி மக்கள் கட்சியும், இப்போது பஞ்சாபில் இந்திரா காங்கிரசும் தேர்தல்களைப் புறக்கணித்தன. அதற்காக அக்கட்சியினரோ, அவர்களது அறைகூவலை ஏற்பவர்களோ இந்தியக் குடிமகன் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டார்களா? இல்லையே. நமது நாட்டில் ஓட்டுப் போடுவோரது சராசரி எண்ணிக்கையே 50 சதவீதத்துக்கும் கீழாகும். அதுவும் குறைந்து கொண்டே போகிறது. ஆகவே பெரும்பான்மையினர் ஓட்டுப் போடாமல் இருப்பது மட்டுமல்ல, பலரது பெயர்களே கூட வாக்காளர் பட்டியலில் கிடையாது: அதோடு பல்வேறு தேர்தல் தில்லுமுல்லுகள் - அராஜகங்கள் செய்து பலரும் ஓட்டுப்போட முடியாமல் செய்து விடுகின்றன, ஓட்டுக் கட்சிகள். மேலும் இந்தியக் குடிமகனுக்கு வாக்காளர் பட்டியலில் இடம் பெறுவதாலும், ஓட்டுப் போடுவதாலும் ஒரு நன்மையும் உரிமையும், அதிகாரமும் கிடையாது. தேர்தல்களில் போட்டியிடுவது தவிர அதற்கு எந்த மரியாதையும் கிடையாது. குடும்ப அடையாள (ரேசன்) அட்டையை வேண்டுமானால் சொல்லுங்கள்; அதனால் இந்தியக் குடிமகனுக்கு ஓரளவாவது பயன்படக்கூடியது என்ற வகையில் ஏற்கலாம்.

இந்திய நாடாளுமன்ற - சட்டமன்ற ஜனநாயகத்தின் மீது மக்கள் நம்பிக்கை இழந்து, வேறு வழிகளில் போய்விடக் கூடாது என்பதற்காக அரசியல் கட்சிகளும், பத்திரிக்கைகளும், அரசும் அதன் மக்கள் தொடர்புச் சாதனங்களும் பல்வேறு வடிவங்களில் வாசகர் குறிப்பிடுவது போல பிரச்சாரம் செய்கின்றன. அறியாத ஒரு பிரிவு மக்களும் அதைப் பிரதிபலிக்கின்றனர். நாம் ஓட்டுப் போடாவிட்டால் வேறு யாராவது கள்ள ஓட்டுப் போட்டு விடுவார்கள் என்பது இவர்களது இன்னொரு பிரச்சாரம். இப்படி நடப்பதே இந்த ஜனநாயகத்தின் போலித் தனத்தைத்தான் காட்டுகிறது. கள்ள ஓட்டாக இருந்தாலும் "நல்ல" ஓட்டாக இருந்தாலும் தேர்தலுக்குப் பிறகு நடக்கும் அரசியலும் அரசு அமைப்பின் தன்மையும் மாறிவிடப் போவதில்லை. ஓட்டுப் போடுவது ஒவ்வொரு குடிமகனின் கடமை என்பது வேறொரு பிரச்சாரம். இந்தியக் குடிமகன் தனது கடமையை நிறைவேற்றி வருவது இப்போது பிரச்சனையே இல்லை. ஆனால் இந்த அரசும், அரசியல்வாதிகளும் கடமை தவறுவதுதானே வழக்கமாக உள்ளது; இதுவரை அதற்கென்ன தீர்வு கூறுகிறார்கள்?

● *மண்டல் கமிஷன் அறிக்கை, அயோத்தி விவகாரம் குறித்து பு.ஜ.வுக்கு கேடயம் எழுதிய பதில்கள், விமர்சனங்களுக்கு இன்னமும் நீங்கள் ஏன் பதில் சொல்லவில்லை?*

☆ புதிய ஜனநாயகம், கேடயம் இரண்டினது நிலைப்பாடுகளையும் ஒப்பிட்டு வாசகர்களே முடிவு செய்து கொள்ள முடியும் என்று நாம் நம்பினோம். இருப்பினும் சில வாசகர்கள் நமது விளக்கத்தை எதிர்பார்ப்பதாகத் தெரிகிறது. மண்டல் அறிக்கை விவகாரத்தில் கேடயத்தின் சந்தர்ப்பவாத அரசியல் வியாபாரத்தை முதலில் புதிய ஜனநாயகம் அம்பலப் படுத்தியிருந்தது. அதாவது '90 செப்டம்பர் 1-15 கேடயம் இதழில் சீர்திருத்தக் கோரிக்கை என்ற அளவுக்கு மண்டல் அறிக்கையை ஆதரிக்க வேண்டியதன் அவசியம் குறித்து பல வாதங்களை எழுதியிருந்தது. '90 அக்டோபர் 1-15 கேடயம் இதழில் அதற்கு மாறான வாதங்களை வைத்து இன்றைய பிற்போக்கான சமூக அமைப்பில் இத்தகைய முன்னுரிமைகள் உண்மையிலேயே நசுக்கப்பட்டவர்களுக்கானதாக அமையாது, அப்படி அமைவது புரட்சிகர அரசின் கீழ்தான் சாத்தியம் என்று எழுதியது. இந்தச் சந்தர்ப்பவாதத்தைத் தகுந்த மேற்கோள்களுடன் ஒப்பிட்டு புதிய ஜனநாயகம் அம்பலப்படுத்தியது. இதை நேர்மையோடு ஒப்புக் கொள்வதற்கு பதில் தனது நிலைப்பாட்டிற்கு முரணாக முதல் கட்டுரையில், "சீர்திருத்தக் கோரிக்கை என்ற அளவுக்கு ஆதரிப்பதாக குறிப்பிட்டிருந்த தவறை வாசகர்கள் சுட்டிக் காட்டியிருந்தனர். ஆனால் பு.ஜ.வோ முதலாளித்துவ சீர்திருத்தங்களை அம்பலப்படுத்தி கேடயம் எழுதியுள்ளவற்றை மறைத்து அவதூறு செய்திருக்கிறது." என்கின்றனர். புதிய ஜனநாயகம் கேடயத்தின் சந்தர்ப்பவாதத்தை அம்பலப்படுத்திய பிறகுதான், அதற்குப் பதில் சொல்லும் போதுதான் வாசகர்கள் சுட்டிக் காட்டியதாக கேடயம் எழுதியது.

பு.ஜ. எதையோ மறைத்து கேடயத்தின் மீது அவதூறு செய்து விட்டதாக எதிர்க் குற்றச்சாட்டு வைக்கிறது. இதுவும் பொய். கேடயத்தின் முதல் கட்டுரையில் மண்டல் கமிஷன் அறிக்கையை அம்பலப்படுத்தி - விமர்சனப்படுத்தி எதுவும் இல்லை (இட ஒதுக்கீடுகளின் வரம்பு - பயன்பாடு யாருக்கானது என்பது பற்றியும், தி.க, தி.மு.க. தலைமையிலான அரைப் பார்ப்பனர்களின் 'சமூக நீதி' நிலைப்பாடு மீதான விமர்சனமும் தான் உள்ளன); மண்டல் கமிஷனுக்கு ஆதரவாக மட்டுமே உள்ளது. கேடயத்தின் இரண்டாவது கட்டுரையில் மண்டல் கமிஷன் அறிக்கை பற்றிய விமர்சனங்கள் தான் உள்ளன (கூடவே அதை எதிர்ப்பவர்களையும் சாடுகிறது); மண்டல் கமிஷன் அறிக்கைக்கு சீர்திருத்தம் என்ற அளவுக்கு ஆதரிப்பதாகவும் இல்லை. இந்த முரண்பாட்டை,சந்தர்ப்பவாதத்தைத்தான் பு.ஜ. சுட்டிக் காட்டியது. ஆனால் கேடயம் வாசகர்கள் சுட்டிக் காட்டியதாகக் கூறப்படுவது வேறொன்று. கேடயத்தின் நிலைப்பாட்டிற்கு முரணாக மண்டல் கமிஷன் அறிக்கையை சீர்திருத்தம் என்ற அளவுக்கு முதல் கட்டுரையில் ஓரிடத்தில் குறிப்பிடுவது தவறு என்கிறார்கள்! அப்படியானால் சீர்திருத்தம் என்ற அளவுக்குக் கூட கேடயம் அதை ஏற்கவில்லையா? கேடயத்தின் நிலைப்பாடு என அவர்கள் 'மீண்டும்'' தொகுத்து எழுதியிருப்பது மேலும் சந்தர்ப்பவாதமாகத் தான் உள்ளது. ''இட ஒதுக்கீடு போன்ற முதலாளித்துவ சீர்திருத்த நடவடிக்கைகளை சமூகப் புரட்சி என சித்தரிக்கும் சீர்திருத்தவாதிகளை அம்பலப்படுத்தி முறியபடிப்பது. - இடஒதுக்கீடு போன்ற முதலாளித்துவ சீர்திருத்த நடவடிக்கைகளைக் கூட அனுமதிக்க மறுக்கும் பிற்போக்கு சக்திகளை எதிர்த்து முறியடிப்பது.'' இதுதான் கேடயத்தின் நிலைப்பாடு ('90 நவம். கேடயம் 16-30 பக்:17) இதில்கூட இட ஒதுக்கீடு - மண்டல் கமிஷன் அறிக்கையை எதிர்க்கிறதா? ஆதரிக்கிறதா? (சீர்திருத்தம் என்கிற அளவுக்கு) என்றில்லை. இட ஒதுக்கீடு - மண்டல் கமிஷன் அறிக்கையை சமூகப் புரட்சி எனச் சித்தரிப்பவர், அதை அனுமதிக்க மறுப்பவர்கள் ஆகிய இரண்டு சக்திகளிடம் கேடயத்தின் அணுகுமுறை எப்படி இருக்கும் என்பது தான் உள்ளது. அதாவது இட ஒதுக்கீடு - மண்டல் கமிஷன் ஒரு சீர்திருத்தக் கோரிக்கை என்ற அளவுக்கு ஆதரிப்பதாக எழுதியதும் தவறு என்கிறது; ஆனால் அது பார்ப்பன - சத்திரிய - வைசிய ஏகபோகத்துக்கு எதிரானதாக அதைப் பலவீனப்படுத்துவதாக, நிலப்பிரபுத்துவ மிச்ச சொச்சங்களுக்கு எதிரானதாக உள்ள அதன் போராட்ட அம்சத்தை அங்கீகரிக்கிறது.

கேடயத்தின் மேற்கண்ட சந்தர்ப்பவாதத்தை அம்பலப்படுத்தும் புதிய ஜனநாயகத்தின் மீது அது அவதூறு செய்கிறது. முதலாளித்துவ சீர்திருத்தமாகிய இட ஒதுக்கீட்டை மேல் சாதி சண்டை எனக் கூறுவதன் மூலம் பார்ப்பனரையும் சூத்திரரையும், சரிசமமாக்குகிறோமாம்! சங்கராச்சாரியின் கருத்தைப் பிரச்சாரம் செய்கிறோமாம்! சாதி அடிப்படையில் முன்னுரிமைகள் தரப்படக் கூடாது; பொருளாதார அடிப்படையில் இட ஒதுக்கீடு தரவேண்டும் என்பது தான் பா.ஜ.க., காங்கிரசு, சங்கராச்சாரி நிலைப்பாடு. இதையும், இதற்குக் காரணமாக அவர்கள் கூறுவதையும் பு.ஜ. எதிர்த்து அம்பலப்படுத்தி வருகிறது



படிப்பகம்

www.padippakam.com

மண்டல் கமிஷன் பரிந்துரையின்படி இந்தியா முழுவதும் 4378 சாதிகள், தமிழ்நாட்டில் 256 சாதிகள் பிற்பட்டவை; இவை 3000 ஆண்டுகளாக சொத்துரிமை, மத உரிமை, கல்வி உரிமை மறுக்கப்பட்டு சமூக ரீதியில் அடக்கி ஒடுக்கப்பட்டதால் பின்தங்கியவை எனக் கூறப்படுகிறது. தேசிய முன்னணி - 'இடது' சாரி கூட்டணி கட்சிகளும் அதன் ஆதரவு இயக்கங்கள் மட்டுமல்லு;கேடயம், முன்னோடி போன்றவர்களும் இதை அப்படியே ஏற்றுக் கொள்கின்றனர். பார்ப்பனர், தாழ்த்தப்பட்ட - மலைவாழ் மக்கள் தவிர அனைவருமே சூத்திரர்கள் தான் என்பது தி.க.வின் நிலைப்பாடாக இருக்கையில் கேடயம், முன்னோடி குழுக்களோ மேற்படி சாதிகளுக்குள்ளாகவே பொருளாதார ரீதியில் - வர்க்க ரீதியில் பின் தங்கியவர்களே உண்மையாகப் பிற்படுத்தப் பட்டவர்கள் என்கின்றன. இந்த நிலைப்பாடுகளில் இருந்து நாம் மாறுபடுகிறோம் என்பது மிகவும் முக்கியமானது. என்ன மாறுபாடு என்பதை அங்கீகரிக்காது சங்கராச்சாரி, காங்கிரசு, பா.ஜ.க. நிலைப்பாடு என்றும், இட ஒதுக்கீடு எதிர்ப்பு பார்ப்பன நிலைப்பாடுகள் என்றும் இவர்கள் அனைவரும் நம்மீது முத்திரை குத்துகின்றனர்.

முதலாவதாக பிற்படுத்தப்பட்டவை என்று வரையறுப்பதற்காக மண்டல் கமிஷனே வகுத்துக் கொண்ட 11 அம்சங்கள் அதன் பட்டியலில் உள்ள 4378 சாதிகளும் எவ்வாறு பொருந்துகின்றன என்பதற்கான ஆதாரமோ, ஆவணமோ மண்டல் கமிஷனிடமே கிடையாது. இரண்டாவதாக இந்த 4378 சாதிகளும் 3000 ஆண்டுகளாக சமூக ரீதியில் அடக்கி ஒடுக்கப்பட்ட சூத்திர வருண வழி வந்த சாதிகள் என்பதை நிரூபிப்பதற்கான ஆதாரமோ, வாதமோ எதுவுமே மண்டல் கமிஷனிடமும், அதன் பட்டியலை ஏற்றுக் கொண்ட மேற்படி அமைப்புகளிடமோ கிடையவே கிடையாது! தான்தோன்றித் தனமாகவும், மொட்டையாகவும், திடலடியாகவும் தீர்மானிக்கப்பட்டவை தாம். மார்க்சிஸ்டு - லெனினிஸ்டுகள் என்று கூறிக் கொள்ளும் கேடயம், முன்னோடி போன்ற குழுக்களும் திராவிடக் கட்சிகளின்

> *இடஒதுக்கீடு - மண்டல் விவகாரத்தில் நாம் எழுப்பும் அடிப்படையான கேள்வி - யார் சூத்திரன் என்பதுதான்! நம் மீது முத்திரை குத்தத் துடிக்கும் எவருமே இந்தக் கேள்விக்கு விடை கூறவில்லை; நழுவிவிடவே முயலுகிறார்கள்.*

மண்டலின் மேற்கண்ட முடிவைக் குருட்டுத் தனமாக ஏற்றுக் கொண்டுள்ளன.

இதற்கு மாறாக, மண்டல் பட்டியலில் உள்ள 4378 சாதிகளில் கணிசமான எண்ணிக்கையிலானவை சத்திரிய, வைசிய வழிவந்தவை. உதாரணமாக வேளாள கவுண்டர், மறவர் - அகமுடையார், வன்னியர், துளுவ - சோழிய வேளாளர், சில செட்டியார் சாதிகள். சூத்திரர்களுக்கான வரையறுப்புகளாக பெரியார், அம்பேத்கார் மற்றும் பிற சமூக ஆய்வாளர்கள் தொகுத்துள்ளவை இந்த சாதிகளுக்குப் பொருந்தவே பொருந்தாது. அதாவது இந்த சாதிகள் 3000 ஆண்டுகளாக சொத்துரிமை, மதஉரிமை, கல்வி உரிமை மறுக்கப்பட்டு சமூக ரீதியில் அடக்கி ஒடுக்கப்பட்டவர்கள், அதனால்தான் பின்தங்கிப் போய் விட்டார்கள் என்பதற்கான எவ்வித ஆதாரமும், யாராலும் தரப்படவில்லை. ஆனால் பார்ப்பனர்கள் மற்றும் பிற முற்பட்ட சாதிகளுடன் சேர்ந்து கொண்டு உண்மையில் சூத்திர வழி வந்த சாதிகளையும் தாழ்த்தப்பட்ட மக்களையும் மேற்படி சாதியினர் ஆண்டாண்டு காலமாக அடக்கி ஒடுக்கி வருவதை இன்னமும் பார்க்கிறோம். இந்த சாதிகளில் நிலமற்ற கூலி, ஏழை, நடுத்தர விவசாயிகள் பெரும்பான்மையினராக இருந்தாலும் இச்சாதிகள் சமூக ரீதியில் ஒடுக்கப்படுவதாகக் கூற முடியாது. சமூக ரீதியில் ஒடுக்குமுறை சாதிகளான இவை அரசியல் - சமூக செல்வாக்கை வைத்துக் கொண்டு தாமும் பின்தங்கிய சாதிகள் என்று கூறி இடஒதுக்கீடு பெறுவதோடு, அதிலும் மிகமிகப் பெரும்பான்மையை சுருட்டிக்கொண்டு உண்மையில் சூத்திர சாதிகள் மீது மேலும் ஆதிக்கம் செலுத்துகின்றன.

பார்ப்பனர், பஞ்சமர் தவிர அனைவரும் சூத்திரர்தாம் என்கிற நாடகமாடி வேளாள சாதிகள், நாயுடு, ரெட்டி, வேளமா சாதிகள், செட்டியார் சாதிகள் பதவி - அதிகார வேட்டையில் பார்ப்பனரோடு மோதியதை திராவிட - நீதிக்கட்சி இயக்கங்கள் முன்பு நியாயப்படுத்தின. இதையே வொக்கலிகா, லிங்காயத்து சாதிகள் கர்நாடகாவிலும், மராத்தா சாதியினர் மராட்டியத்திலும் செய்தனர். இச்சாதிகளில் சிலவும், மண்டல் அறிக்கையில் உள்ள சத்திரிய - வைசிய சாதிகளில் சிலவும், தானும் பிற்பட்டோர் பட்டியலில் சேரத் துடிக்கும் சாதிகளில் சிலவும் சேர்ந்து கொண்டு பிற மேல் சாதிகளான பார்ப்பன - பனியாக்களோடு மோதுகின்றன. தமது பலத்தைக் கூட்டிக் கொண்டு ஆதாயம் தேடுவதற்காக மட்டுமே உண்மையில் சூத்திர வருண வழிவந்த சாதிகளையும் சேர்த்துக் கொள்கின்றன. ஆகவேதான் இட ஒதுக்கீடு ஆதரவும் - எதிர்ப்பும் மேல் சாதிகளுக்கிடையிலான சண்டை என்று நாம் கூறுகிறோம். இட ஒதுக்கீடு - மண்டல் விவகாரத்தில் நாம் எழுப்பும் அடிப்படையான கேள்வி - யார் சூத்திரன் என்பது தான்! நம்மீது முத்திரை குத்தத் துடிக்கும் எவருமே இந்தக் கேள்விக்கு விடை கூறவில்லை; நழுவி விடவே முயலுகிறார்கள்!

இட ஒதுக்கீடு - மண்டல் அமலாக்கம் என்பது அதிகாரப் பங்கீட்டிற்காக மேல் சாதிகளுக்கிடையே நடக்கும் சண்டை மட்டுமின்றி, அதன் சமூக அடித்தளத்தை விரிவுபடுத்தி (அரசு எந்திரத்தைப் பலப்படுத்தவும்) கொண்டு வரப்படும் சீர்திருத்தமாகும். பு.ஜ.வின் இந்தக் கருத்தை மறுக்க முடியாத கேடயம் கும்பல், இவ்வாறு கருதுவது தாழ்த்தப்பட்ட - பழங்குடி மக்களுக்கு முன்னுரிமை அளிப்பதையும் நாம் மறுப்பதாகிறது என்று அவதூறு செய்கிறது. சூத்திர, பஞ்சம சாதிகளைத் தவிர மற்ற பிற சாதியினருக்கு ஏற்கனவே சமூக அதிகாரம் உள்ளது; இத்துடன் இட ஒதுக்கீட்டின் மூலம் அச்சாதிகள் அரசியல் அதிகாரத்தையும் பெற்று சூத்திர, பஞ்சம சாதியினரை ஒடுக்குவர்; அதற்கு மாறாக சமூக ரீதியில் ஏற்கனவே ஒடுக்கப்படும் சூத்திர, பஞ்சம சாதியினர் முன்னுரிமை பெறுவதால் அதாவது இட ஒதுக்கீடு மூலம் கல்வி, வேலை வாய்ப்புகள் பெறுவதால் அவர்களும் ஒடுக்கும் நிலைக்கு உயர்ந்து விட முடியாது; ஆகவே அவற்றைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்பதுதான் நமது நிலைப்பாடு. இது இட ஒதுக்கீடு - மண்டல் அமலாக்கத்தின் துணை விளைவுதான் என்கிறோம். ஆனால் பிரதான விளைவு முதலில் சொன்னது தான். உதாரணமாக, 1969-இல் 14 பெரிய வங்கிகள் அரசுடமையாக்கப்பட்டன. தனியார் தரகு ஏகபோக முதலாளிகளிடமிருந்து பெரிய வங்கிகளைக் கைப்பற்றி அரசு அதிகார வர்க்க ஏகபோகத்திடம் ஒப்படைப்பதன் மூலம் மூலதன ஒன்று குவிப்புதான் அதன் பிரதான நோக்கம். ஆனால், அதன் துணை விளைவாக கூடை முடைவது, கயிறு நூற்பது, தறிநெய்வது, செருப்புத் தைப்பது ஆகியவற்றுக்குக் கூட, சந்தையை விரிவாக்கும் நோக்குடன் கடனளிக்கப்பட்டது. இச்சிறு தொழிற் கடன்களைப் பயன்படுத்துவதை நாம் எதிர்ப்பதில்லை. அதே சமயம் வங்கிகளை அரசுடமையாக்கியது முற்போக்கானதென்றும் வரவேற்கவில்லை. மேற்படி நோக்கத்தை அம்பலப்படுத்துவதுதான் நமது கடமை. இப்படிப்பட்ட எதிர்மறையான அணுகுமுறையைத்தான் இட ஒதுக்கீடு - மண்டல் அமலாக்கத்திலும் நாம் மேற்கொண்டுள்ளோம்.

அயோத்தி விவகாரத்தில், பாபரி மசூதி உள்ள இடம்தான் ராம ஜன்மபூமி என்பதற்கும், அங்கு ராமன் கோவிலை இடித்துத்தான் மசூதி கட்டப்பட்டது என்பதும் அப்பட்டமான பொய்; ஆதாரமற்றது. ஆகவே முஸ்லீம்களுக்குச் சொந்தமான மசூதியை அவர்களிடமே ஒப்படைக்க வேண்டும் என்பது தான் நமது நிலைப்பாடு. நீதிமன்றத் தீர்ப்பை ஏற்க வேண்டும் என்று நாம் ஒருபோதும் கூறியதில்லை. ஆனால் நாம் அப்படிக் கூறுவதாக் கேடயம் இட்டுக்கட்டி அவதூறு செய்கிறது.

''அயோத்தியில் பிரச்சினைக்குள்ளான பகுதியை இந்து முஸ்லீம் ஒற்றுமையின் தேசிய சின்னமாக்குவதே சிறந்த தீர்வாக அமையுமென்பதை நாடெங்குமுள்ள புரட்சிகர, ஜனநாயக சக்திகள் வலியுறுத்துகின்றன'' என்று வேறு கேடயம் கும்பல் புளுகுகிறது. அகில இந்தியப் புரட்சிகரப் பண்பாட்டுக் கழகத்தில் பங்கேற்கும் புரட்சிக் குழுக்கள் அனைத்தும் ''பாபரி மசூதியை முஸ்லீம்களிடம் ஒப்படைக்க வேண்டும்'' என்று ஒருமனதாகத் தீர்மானம் நிறைவேற்றியுள்ளன. இக்கழகத்தில் பங்கேற்காத கேடயம் கும்பல் உட்பட பிற குழுக்கள் ஓரிரு மாதங்களுக்கு முன்பு டில்லியில் வகுப்புவாத எதிர்ப்பு மாநாடு ஒன்று நடத்தின. அதிலும் ''பிரச்சினைக்குள்ளான பகுதியை'' தேசியச் சின்னமாக்கும்படி கோராமல் பொதுவான ''தீர்மானமே'' நிறைவேற்றப்பட்டது. அதாவது ஒத்த கருத்து - தீர்மானம் எதையும் அக் குழுக்கள் நிறைவேற்ற முடியவில்லை. அப்படி இருக்கும் போது ''நாடெங்குமுள்ள புரட்சிகர ஜனநாயக சக்திகள்'' இக் கருத்தையே வலியுறுத்துவதாகக் கேடயம் எழுதுகிறது. இனி எது உண்மை என வாசகர்களே தீர்மானித்துக் கொள்ள முடியும்.

ஆசிரியரும் வெளியிடுபவரும்: செ.மதியழகன், 21, பால;ஜிசிங் தெரு, சைதாப்பேட்டை., சென்னை - 600 015.
அச்சிடுபவர் : நீட் பிரிண்டர்ஸ், 2 ஔலியா சாகிப் முதல் சந்து, எல்லிஸ் சாலை, சென்னை - 600 002.

படிப்பகம்

www.padippakam.com

# இதுதான் இன்றைய இந்தியா



பாசிச ராஜீவைப் பலிகொண்ட ஸ்ரீபெரும்புதூர் குண்டு வெடித்தவுடன் எடுக்கப்பட்ட இரு புகைப்படங்கள் இங்கே பிரசுரிக்கப்பட்டுள்ளன. இவையும், சம்பவத்தை நேரில் பார்த்தவர்களும் தரும் தகவல்களும் ஒரு விசயத்தைத் தெளிவு படுத்துகின்றன. குண்டு வெடித்ததும் பெரும்பாலான காங்கிரசுப் பிரமுகர்களும் போலீசுக்காரர்களும் பீதியில் சிதறி ஓடி விட்டனர். அதிர்ச்சியிலிருந்து மீண்ட ஜெயந்தி நடராஜனும், மூப்பனாரும், ஐ.ஜி. ராகவனும் ராஜீவைத் தேடிப் பிணக்குவியலில் கண்டுபிடித்ததும் கதறினர்.

முக்கியமான தலைவர் என்பதால் ராஜீவைத் தேடுவதிலும் அவரது உடலை எடுத்துச் செல்வதிலும் காங்கிரசுப் பிரமுகர்களும் போலீசு அதிகாரிகளும் அக்கறை காட்டியது புரிந்து கொள்ளக் கூடியது தான். ஆனால் அங்கே குற்றுயிரும் குலை உயிருமாகக் கிடந்து துடித்துக் கொண்டிருந்தவர்களை யாராவது கவனித்தார்களா? முக அடையாளம் தெரியாதவாறு சிதறிப்போன ராஜீவின் பிணத்தைச் சூழ்ந்து கொண்டுள்ள இவர்கள், உயிருக்குப் போராடிய மற்றவர்களுக்கு முதலுதவி செய்து காப்பாற்றிட முயன்றார்களா?

ராஜீவின் உடலைச் சேர்த்து வாரிக் கொண்டு போகும் வேலையில் அனைவரும் ஈடுபட்டிருக்கையில், குண்டு வெடிப்பில் படுகாயமுற்று வீழ்ந்து கிடக்கும் மரகதம் சந்திரசேகரை அவரது மகனும், மகளும் காப்பாற்றுவதையும் ஒரு படத்தில் காணலாம். அதே போல காயமடைந்த தா. பாண்டியனை அவரது கட்சிக்காரர்கள் எடுத்துக் கொண்டு போய் மருத்துவமனையில் சேர்த்தனர். பலரது பிணங்களும் அங்கேயே அடுத்த நாள் வரை கிடந்தன. குண்டு வெடிப்பில் மாண்டுபோன தமிழ்நாடு உளவுப்பிரிவு போலீசு தருமனின் குடும்பம் உள்ளூரில் இருந்தும் தகவலே சொல்லவில்லை.

உரிய தருணத்தில் பொறுப்போடு உதவியிருந்தால் எவ்வளவு பேரைக் காப்பாற்றியிருக்க முடியும்? பொறுப்பற்ற இந்த உலுத்தர் கூட்டத்தை விரட்டியடிப்பது எப்போது?



படிப்பகம்